# படைத் தலைவர்கள்

ஆசிரியர் :

புலவர் த. மா. திருநாவுக்கரசு

சிங்கம் அண்டு கோ

ஷர்ஸ் :: ஈரோடு

MADRAS

206
3.65

4 AUG

PUBLIC INFORMATION A

ACL-THA
00052

# படைத்தலைவர்கள்

★

ஆசிரியர் :
புலவர் த. மா. திருநாவுக்கரசு,
தமிழாசிரியர், பிஷப் ஹீபர் உயர்நிலைப்பள்ளி,
திருச்சிராப்பள்ளி.

*Approved by the Madras Text-Book Committee*
*le Fort St. George Gazette Supplement to Part I-B*
*Page No.* 21 *Dated* 13—5—59.

வெளியிடுவோர் :
**வி. துளசிங்கம் & கோ,**
·ப்ளிஷர்ஸ் ஈரோடு

ஐந்தாம் பதிப்பு:

104939
ARCHIVES LIBRARY
MADRAS

உரிமை பதிவு

விலை ரூ. 1-00

10-9 கி. கி. வெள்ளைத் தாளில் அச்சிடப்பெற்றது

இம்பீரியல் அச்சகம், திருச்சிராப்பள்ளி-8.

# முன்னுரை

'வீரம் செறிந்த தமிழ்நாடு' என்று பாரதி இத் தமிழகத்தைப் புகழ்ந்து கூறினான். பாரெல்லாம் புகழும் வீரம் படைத்தோர் பலர் இந்நாட்டில் தோன்றி வாழ்ந்தனர். அவர்களுடைய வரலாறுகள் நமக்கு உணர்ச்சியும் எழுச்சியும் ஊட்டவல்லன; வாழ்வை வளமுடையதாக ஆக்கிக்கொள்ள வழி வகை கூறுவன.

அத்தகைய பண்பு படைத்த படைத்தலைவர்கள் நால்வரின் வரலாறுகள் இந்நூலில் இனிய எளிய முறையில் புதிய பாட இயலை உளத்திற்கொண்டு, உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு ஏற்ற வகையில் கூறப்பட்டுள்ளன.

இந்நூலைப் படிக்கும் மாணவர்கள் நாட்டின்பால் அன்பும், நல்ல பண்பும் கொண்டு, வீரமுடைய நல்வாழ்வு வாழும் குறிக்கோள் பெற்று விளங்குவர் என்பது எனது துணிபு.

இதனைக் கண்ணுறும் நல்லாசிரியப் பெருமக்கள் மாணவர்களுக்குப் பயனுடையதாக்கி ஊக்குவிக்குமாறு வேண்டுகிறேன்.

ஆசிரியன்.

# உள்ளுரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | செங்குட்டுவன் | ... | ... | 5 |
| 2. | கருணாகரத் தொண்டமான் | ... | ... | 29 |
| 3. | அரியநாதர் | ... | ... | 46 |
| 4. | முகமதுகான் | ... | ... | 98 |

# 1. செங்குட்டுவன்.

## சேரர் பரம்பரைப் பெருமை

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களால்,, தெக்கணம் எனக் கூறப்பட்ட தென் இந்தியப் பகுதியின் பெரும் பாகத்தை பண்டைக்காலத்தில் ஆண்டு வந்தவர் மூவேந்தர் ஆவர். 'வடவேங் கடங் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல் லுல'கை ஏற்றமிகு கோலாச்சி, எழில்பெற மூவேந்தர் ஆண்டு வத்தனர். இதை நம் பண் டைத் தமிழ் நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. அம் மூவருள்ளும் காலத்தானும், சீலத்தானும். பண்பானும், பிற எல்லா வகையினுனும் சிறப்பு மிக்கவர் சேர அரசரேயாவர் என்பதனை, 'சேர சோழ, பாண்டியர்' என்று உலகோரும், நூலோ ரும் முறைப்படுத்திக் கூறும் தொடரே விளக்க முற அறிவிக்கும்.

இவ்வாறு முடியுடைய மூவேந்தருள் மூத்த பெருஞ் சிறப்பினையுடைய சேரரை "வானவர்" என வேறு பெயரிட்டுப் பண்டை நூல்கள் அழைக்கின்றன. ஆகையால், இச் சேரரது பரம் பரை ஆதியில் தெய்வசம்பந்தம் உடையது எனச் சிலர் கூறுவர். வானவர் என்ற பெயர் சீனர்க்கு வழங்கி வருவதால், சேரர் ஆதியில் சீன நாட்டி னின்று வந்தோர் எனவும் சிலர் கூறுவர். எவர் எவர் எப்படிக் கூறினும், சேரர் பழமைபூண்டவர் என்பது மட்டும் உறுதி.

பதிற்றுப்பத்து என்ற நூல் முழுமையும் சேர பரம்பரையைப் பற்றிப் பாடப்பட்ட நூலாகும். ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு சேரனது அருமை பெருமைகளைக் கூறுவதாய், ஒவ்வொரு புலவரால் பாடப்பெற்றது.

செங்குட்டுவனைப் பற்றிப் பாடிய புலவர் பரணர் ஆவார். இவர் பதிற்றுப் பத்தில் ஐந்தாம் பதிகத்தாற் பாடி, செங்குட்டுவனது வீரம், கொடை, பெருமை முதலியவற்றை விளக்கியிருக்கின்றார். இவரது பாடல்களைக் கேட்ட செங்குட்டுவன் பெருமகிச்சி யடைந்தான். உம்பற்காடு என்னும் சேர நாட்டுப் பகுதியின் அரசிறை வருவாயையும், தன் மகன் குட்டுவஞ் சேரலையும் பரணர்க்குப் பரிசாக அளித்தான். செங்குட்டுவன் கடலிடையிருந்த தன் பகைவர்மேற் படையெடுத்து, மரக்கலங்களைச் செலுத்திச் சென்ற சிறப்பையே பரணர் தம் பாடல்களில் மிகவும் அதிகமாகப் புகழ்ந்து பாடியிருக்கிறார்.

## சேரநாட்டுச் சிறப்பு

சேரநாடு என்பது கருவூர்ப் பகுதி உட்படக் கோயம்புத்தூர், சேலம், நீலகிரி மாவட்டங்களையும் மைசூர் நாட்டின் தென்பகுதியையும் மேற்குத் தொடர்ச்சி மலையையும் தன்னகத்தே கொண்டதாகும். இச்சேர நாட்டின் தலைநகராக-விளங்கியது வஞ்சிமா நகரமாகும். ஆகவேதான் சேர அரசனைக் குறிப்பிடவந்த சிலப்பதிகாரம் 'வஞ்சியார் கோமான்' எனச் செப்பிப் புகழ்ந்தது.

இந்நகர் அமைக்கப்பட்டுள்ள முறையும், எழிலும் மிகச் சீரும் சிறப்பும் பொருந்தியவை என்பதை ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்ருன மணிமேகலை மூலம் அறியலாம் இவ்வஞ்சி மூதூரின் கோட்டைக்கு வெளியே கோயில்களும், சமணப்பள்ளிகளும், பொழில்களும், குளங்களும் மிகுந்திருந்தன. அவ்விடங்களில் தவசிகளும், பல கலைகளை அறிந்த அறிஞர்களும், ஞானிகளும் நிறைந்திருந்தனர். கோட்டையைச் சூழ்ந்துள்ள புறஞ்சேரியில் மதிலைக்காவல் புரிகின்ற படை வீரர்கள் தங்கும் வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன,

கோட்டையைச் சுற்றி ஆழமான அகழி சூழ்ந்திருந்தது. வஞ்சி நகரில் பெருகியோடும் கழிநீரெல்லாம் முடிவில் அவ்வகழிக்கண்ணே சென்று சேர்ந்தன. அகழிக்கும், கோட்டைக்கும் இடையே காவற்காடு திகழ்ந்திருந்தது. கோட்டை மதிலில் பகைவரை அழிக்கத்தக்க பொறி அமைப்புகள் பல பொருத்தப்பட்டிருந்தன. கோட்டை வாயிலைக் கடந்து உள்ளேசென்ருல், கோட்டையினைக் காக்கும் வீரர்கள் வசிக்கின்ற வீதிகளும், கள், மீன், பிட்டு, உப்பு முதலியவற்றை விற்போர் வசிக்கின்ற வீதிகளும் அமைந்திருந்தன.

### நகர் அமைப்பு

இவ்வீதிகளை யடுத்து குயவர், கன்ஞர், பொற்கொல்லர், தச்சர், மட்பாவை செய்வோர், பாணர், சோதிடர், தையற்காரர், மாலை கட்டுவோர் முதலியோரது தெருக்களும், நாடகக்கணி

கையர் வீதியும், கூல வகைகளை விற்போரின் வீதிகளும், பொன், இரத்தின வாணிகரின் நெருக்களும், அக்கிரகாரமும், இராசவீதியும், மந்திரிகள் வீதியும், பல்வகை அரசாங்க அலுவலர் வாழ்கின்ற தெருக்களும் அந்நகரில் வரிசையாக அமைக்கப்பட்டிருந்தன,

மேலும் யாவரும் வந்து தங்குதற்குரிய நிழல் தரும் மரங்களும், அம்பலமும், முச்சந்தி, நாற்சந்திகளும், அறச்சாலைகளும், தவப்பள்ளிகளும் அந்நகரில் இருந்தன. சேரவரசனின் அரண்மனையானது, ' நெடுநிலை மேருவிற் விற்கொடி, மதின் மூதூர் நடு நின்றோங்கிய, தமனிய மாளிகை' ஆகும்.

அவவரண்மனையினுள் அரசரது கொலுவிருக்கை மண்டபம், மந்திராலோசனைச் சபை கூடுகின்ற வேத்தியன் மண்டபம், நடன சாலை முதலியவை சிறப்புடன் விளங்கின. அரசன் தன் மனைவியுடன் வசந்த காலத்தைக் கொண்டாடுவதற்கென்று அமைந்த 'இலவந்திகை வெள்ளி மாடம்' என்னும் மாளிகை ஒன்றும் அங்கு உண்டு.

இச்சேரர்களுக்குத் துறைமுக நகரங்களாக விளங்கியவை தொண்டி, மாந்தை என்பவையாம் இத்துறைமுக நகரங்கள் இரண்டும் சிற்சில காலங்களில் சேர அரசர் சிலருககுத் தலைநகரங்களாகவும் விளங்கியிருந்தன. நமது செங்குட்டுவனுக்குத் தலைநகராக விளங்கியது. ' விண்பொரு புகழ் விறல் வஞ்சியே ' ஆகும்.

## செங்குட்டுவன் வரலாறு

சேரன் செங்குட்டுவன், 'வடவர் உட்கும் வான்தோய் நல்லிசைக் — குடவர் கோமான் நெடுஞ் சேரலாதனுக்கு' மைந்தனுவான். இமயம் வரை சென்று எதிரிகளை முறியடித்து ஈடில்லாப் புகழ்பெற்றவன் நெடுஞ்சேரலாதன் ஆதலின், இவனைப் புலவர் 'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்' என ஏற்றிப் போற்றுவர். இந்நெடுஞ் சேரலாதனுக்கு மனைவியர் இருவர். இருவருள் ஒருத்தி, சோழன் மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணை என்பவளாவாள். இந்நற்சோணையின் வயிற்றிற் பிறந்த மக்களே, நமது செங்குட்வனும் சிலப்பதிகாரம் பாடிய இளந்துறவி இளங்கோவடிகளும். சேரன் செங்குட்டுவனுடைய கோப்பெருந்தேவியாக விளங்கியவள் இளங்கோ வேண்மாள் என்பவள். இவள் வேளிர் குலத்தைச் சேர்ந்தவள்.

செங்குட்டுவன் கடைச் சங்க காலத்தைச் சேர்ந்தவன். இன்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த பரணர், சாத்தனூர் முதலிய புலவர்கள் இவனைச் சிறப்பித்துப் பாடியுள்ளமையே, இவன் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவன் என்பதை மெய்ப்பிக்கின்றன. மேலும், இவனது ஆட்சிக் காலத்தில் இலங்கை வேந்தனுக விளங்கிய கயவாகு மன்னனின் காலமும் இக்கடைச் சங்க காலமேயாகும்.

## செங்குட்டுவன் நற்பண்புகள்

சேரன் செங்குட்டுவனுக்கு அமைந்திருந்த உத்தமப் பண்புகள் பல. அவற்றில் முதலில் வைத்துப் பாராட்டத்தக்கது தெய்வபக்தியேயா கும். இவன் சிவபிரான்மீது மிகுந்த பக்தியுடை யவன். வஞ்சிமா நகரத்தினின்று வடநாட்டுப் பயணத்திற்குப் புறப்படுங்காலத்தில், இச்சேரன், சிவபெருமானின் பாதுகைகளைத் தாங்கி வணங் கித் தனது திருமுடிமீது வைத்துக்கொண்டு சென்றனன். அவ்வமயம், ஆடகமாடம் என்னும் கோயிலிற் பள்ளிகொண்ட திருமால் பிரசாதத் துடன் சிலர் வந்து இவனை வாழ்த்தி நின்றனர். உடனே செங்குட்டுவன் தன் தலையில் சிவபெரு மானது பாதுகைகளைத் தாங்கி இருந்தமையால், அத்திருமால் பிரசாதத்தைத் தன் தோளில் வாங்கி அணிந்துகொண்டனன். இச்செய்தியை இளங் கோவடிகள் தமது சிலப்பதிகாரக் காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார். செங்குட்டுவன் சைவ சமயப் பற்றுக் கொண்டவனுக இருந்தபோதிலும், எல் லாச் சமயத்தையும் பொதுவாகக் கருதுகின்ற பொது நோக்குடையவன் என்பதை, இந்நிகழ்ச்சி நமக்கு அறிவிக்கின்றது. கற்புக்கரசியாம் கண் ணகிக்குக் கோயில் எடுப்பித்து விழாக் கொண் டாடிய இவனது செயல், கடவுளேயே அன்றி வீர பத்தினியாக விளங்கியோரையும கடவுள் போலக் கருதிப் போற்றி வழிபட்ட பெருமையுடை யவன் என்பதற்குச் சான்ருக விளங்குகின்றது.

செங்குட்டுவனது இயற்கைக் குணங்கள் பலவற்றுள் அவனது வீரத் தன்மையைத்தான் இளங்கோவடிகள், பரணர் போன்ற பெரும் புலவர்கள் பாராட்டிப் பாடியிருக்கின்றனர். அவனது வீரத்தன்மையை அவர்கள் பெரிதும் பாடியிருப்பதால், இவன் மற்றெவ் வேட்கையினும் போர் வேட்கையில் மிக்கிருந்தான் என அறிகிறோம்.

### நுண்ணறிவும் கொடைத்திறனும்

செங்குட்டுவன், வீரமிகுதியோடு நுண்ணறிவு மிக்கவனாகவும் சிறந்து இருந்தான். ஆகையால்தான் புலவர்கள் இவனை. "புரையோர் தபமொடு பொருந்த வுணர்ந்த — அரசரேறே" என்றும், "புலவரை யிறந்தோய்" என்றும் புகழ்ந்தனர்.

மதுரையிற் கோவலனைக் கொல்வித்த பாண்டியன், தான் செய்த தவற்றினை உணர்ந்து தன்னுயிர் விட்ட செய்தியைச் சாத்தனார் மூலம் அறிந்த செங்குட்டுவன் "மழை வளங் கரப்பின் வான் பேரச்சம், பிழையுயி ரெய்திற் பெரும் பேரச்சம், குடிபுரவுண்டுங் கொடுங்கோலஞ்சி, மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல், துன்பமல்லது தொழுதகவில்லை" என்று கூறியதன் மூலம் அரச பாரந்தரும் அச்சம் உணர்ந்த நுண்ணறிவுடைய மன்னன் என்பது விளங்குகின்றதன்றோ!

குட்டுவன் என்ற பெயர் குட்ட நாட்டுக் குரியோன் எனவும், செம்மை என்ற அடைசொல் பிற

ரெலாம் கண்டு மகிழும் கட்டழகும், பலமும், பருமனும் கொண்டவன் எனவும் பொருள் தருகின்றன. அவன் கங்கைக் கரையில் பாடி வீட்டில் தங்கியிருக்கும் சமயம், மாடலமறையோன் என்பவனுக்குத் தனது நிறையளவு பொன்னை நிறுத்துத் தானம் செய்தானும். அது 'ஐம்பது துலாம் பாரம் பொன்' எனச் சிலப்பதிகார உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு துலாம் என்பது நூறு பலமாகும். தற்காலத்து ஒரு பலம் என்பது மூன்று ரூபாய் எடையாகவும், ஆறு ரூபாய் எடையாகவும் வழங்கப்படுகின்றது. இதில் குறைந்த எடையாகிய மூன்று ரூபாய் எடை அளவை எடுத்துக்கொண்டு பார்ப்போமாஞல் செங்குட்டுவன், நாற்பது ரூபாய் நிறைகள் கொண்ட பவுண்டுக் கணக்கில் முந்நூற்று எழுபத்தைந்து பவுண்டு நிறை யிருந்திருப்பான் என ஒருவாறு கணக்கிடலாம். இக்காலத்திலும் முந்நூறு பவுண்டு நிறையளயுள்ள மக்களை நாம் காண முடிவதால், செங்குட்டுவனின் நிறையில் நாம் நம்பிக்கை கொள்ள முடிகிறது. செங்குட்டுவன் மற்ற அரசர்களைப்போல பல மனைவியரை மணந்தவன் அல்லன் இளங்கோ வேண்மாள் என்ற ஒரே மனைவியைக் கொண்டிருந்தவன். இவ்விளங்கோ வேண்மாளின் கூற்றிஞல்தான், பத்தினிக் கடவுளைச் சிறப்பித்தற்குரிய எண்ணம் செங்குட்டுவன் மனத்தில் எழுந்தது; அதஞல், அவனது வடநாட்டு யாத்திரையும் நிகழ்ந்தது; பெரிய வெற்றிச் சிறப்பினையும் அவ் யாத்திரை அவனுக்குத் தேடித்தந்தது.

இவ்வளவு பெருமை மிகுந்த செங்குட்டுவன் சிறிது முன்கோபங் கொண்டவனாகவும் விளங்கியுள்ளான். ஆனாலும், பெரியோர் கூறும் மேன்மொழிகளை ஏற்றுக்கொள்வதில் இவன் மிகவும் மேம்பட்டவனாக விளங்கினான். ஒருசமயம் சோழ பாண்டியரிடம் இவன் சினங்கொள்ள நேர்ந்தபோது, மாடலமறையோன் கூறிய சாந்தம் மிகுந்த உரைகளைக் கேட்டுக் கோபம் அடங்கினான். பிறிதோர் சமயத்தில், தான் வென்று சிறை பிடித்த கனகவிசயரைச் சிறை நீக்கியதுடன், தன் படைத் தலைவனை வில்லவன் கோதையைக்கொண்டே அவர்களை உபசரிக்கச் செய்தான். இந்நிகழ்ச்சி பெரியோரின் மொழிகளை ஏற்று நடப்பவன் செங்குட்டுவன் என்பதற்குச் சான்றாக விளங்குகின்றது.

**போர்ச் செயல்கள்**

செங்குட்டுவன் ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகள் சேர நாட்டை ஆண்டிருத்தல் கூடும் எனப் பதிற்றுப்பத்து என்னும் சங்கநூலால் அறியமுடிகிறது. அம் முப்பததைந்து ஆண்டுகளில், தான் இறப்பதற்கு ஐந்து ஆண்டுகள் முன் வரை பகைவரையடக்குதலும், நாட்டைப்பெருகச் செய்வதிலுமே பெரும் பகுதியைச் செலவிட்டிருந்தான். செங்குட்டுவன் படைத் தலைமை பூண்டு பெருவெற்றி பெற்ற வீரச் செயல்களில் சிறப்புடையவையாகக்குறிக்கத்தக்கவை ஐந்து செயல்களாகும். அவை, கொங்கர் செங்களத்து நடத்திய போர், கடல்வழி சென்று கடல்கடந்து நடத்

திய போர், பழையன் மாறன் என்பவனுடன்நடத்திய போர், ஒன்பது சோழர்களை முறியடித்து வெற்றிகண்ட போர், வடவாரியருடன் பொருது புகழ் அடைந்த போர் என்பனவாகும்.

**கொங்கர் செங்களத்துப்போர்**

அவற்றில் முதற்கண் கொங்கர்செங்களத்து அவன் படைத்தலைமை ஏற்று நடத்திய போரைப் பற்றித் தெரிந்து கொள்வோம். இப்போரில் சோழ பாண்டியர் இருவரும் சேர்ந்து செங்குட்டுவனை எதிர்த்தனர். அவர்களது கொடி, படைகளையெல்லாம் தான் கைக்கொண்டு அப்போரில் யாவரும் போற்றத்தக்க பெரும் வெற்றியைச் செங்குட்டுவன் பெற்றான்.

கொடுகூர் என்ற நகரம் இக்கொங்கர் போரில் செங்குட்டுவனால் அழிக்கப்பட்டது. மைசூர் இராச்சியத்தின் ஒரு பகுதியே கொடுகூர் நாடாகும். "கொங்கர் செங்களத்துக் கொடுவரிக் கயற் கொடி ; பகைப் புறத்துத் தந்தனர்" என்ற சிலப்பதிகாரத்தின் அடிகள் அக் கொங்கர் செங்களத்தே செங்குட்டுவன் நிகழ்த்திய போரைக் குறிப்பிடுகின்றன.

**கடற்போர்**

கடல்வழி சென்று கடந்து கடும்போர் இயற்றிச் செங்குட்டுவன் வெற்றி பெற்றான். ஆதலின் இவன், 'சேரமான் கடலோட்டியவேல் கெழு குட்டுவன்' எனவும், 'கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்' எனவும் நூல்களில் புகழப்படுகிறான்.

செங்குட்டுவனது தந்தை நெடுஞ்சேரலாதன் கடலிடையே தீவொன்றில் வசித்த தன் பகைவர் மேற் கப்பல் படையுடன் சென்று, அவர்களது காவல் மரமான கடம்பை வெட்டியெறிந்து, அப் பகைவரை வென்ருன். செங்குட்டுவனும் தன் தந்தையைப் போலவே கடல் வழியே பல மரக் கலங்களைச் செலுத்திப் பகைவரை வென்று திரும் பிஞன். இதனுல் தன் காலத்தில் வாழ்ந்த, 'கொங் கணர், கலிங்கர், கொடுங்கருநாடர், பங்களர், கங்கர், பல்வேற் கட்டியர்' முதலான பல்வேறு நாட்டரசர்கட்கும் பேரச்சத்தை விளைவித்து வந்த பெருவீரஞக விளங்கிஞன் செங்குட்டுவன்.

### பழையன் மாறனுடன் போர்

அடுத்ததாக, செங்குட்டுவன் பழையன் மாறன் என்பவனுடன் இயற்றிய போர், அவ னது நண்பன் ஒருவனுக்காக ஆற்றிய போர் ஆகும். நண்பனுக்குத் தீங்கு நேரின் உடனே சென்று அத்தீங்கினைக் களைதலே நட்பின் இலக் கணம் என்ற வள்ளுவர் 'வாய்மொழிப்படி நடந்த செங்குட்டுவனது பெருமையை இப்போரின் மூலம் அறிய முடிகிறது.

செங்குட்டுவனுக்கு அறுகை என்ற பெயர் பூண்ட அரசன் ஒருவன் நண்பஞயிருந்தான். அறுகையைப் பழையன் மாறன் பெரும் படை கொண்டு எதிர்த்தான். பழையன் என்பவன் பாண்டியன் ஒருவனது படைத்தலைவன் ஆவான். அவன் அறுகையை எதிர்த்தது உணர்ந்த செங் குட்டுவன், படைத்தலைமை பூண்டு பழையஞேடு

போர் செய்து வெற்றிபெற்று அவனது உரிமை யான மோகூர் என்ற ஊரினை அழித்து, அவனது காவல் மரமாகிய வேம்பினைத் துண்டந் துண்டங் களாக வெட்டி யெரிந்தான். பழையனது யானை களையே கடாவாகவும், அவன் மகளிரது கூந்தலை அறுத்துத் திரித்து அதனையே கயிருகவும் கொண்டு வண்டியில் இழுப்புத்தான். இச் செய்தி யைப் பதிற்றுப்பத்து என்ற நூல் நமக்குத் தெளிவுற விளக்குகிறது.

மோரியவரசன் திக்குவிசயம் செய்துகொண்டு தென்றிசை நோக்கி வந்தபோது, பழையன் மாறன் அவனுக்குப் பணியாத காரணத்தால் அவனுக்கும் இவனுக்கும் பொதிய மலைக்கு அருகே போர் நிகழ்ந்ததாகச் சில நூற்களில் காணப்படு கின்றது. ஆகையால் அறுகைஎன்பவன்மோரிய வம்சத்து உதித்த ஓர் அரசன் எனவும், பொதிய மலைப் போரில் பழையனேடு போர் செய்தவன் அவனே எனவும், இப்போரில்தான் அறுகைக்குத் துணை நின்று செங்குட்டுவன் பழையனின் மோகூரை அழித்தான் எனவும் சிலர் கூறுவர் இப் போர்ச் செயலைப் பரணர் என்ற பெரும்புல வர் “ நுண் கொடியுழிஞை வெல்வோர் அறுகை சேணுயினும் கேளென மொழிந்து, புலம் பெயர்ந்தொளித்த களையாப் பூசற், கரண் கட வுறீஇயணங்கு நிகந்தன்ன, மோகூர் மன்னன் முரசங் கொண்டு” என்று பாடிச் செங்குட்டு வனைச் சிறப்பிக்கின்ருர். இப்போரைப் பற்றி இளங்கோவடிகளும், பழையன் காக்கும் குழை

பயில் நெடுங் கோட்டு, வேம்பு முதல் தடிந்து ஏந்து வாள் வலத்துப், போந்தைக் கண்ணிப் பொறைய'' என்று கூறியுள்ளார்.

## ஒன்பது சோழரைத் தோற்கடித்தது

செங்குட்டுவன் காலத்தில் சோழநாட்டை ஆண்ட அரசர்கள் பலர். ஆயினும் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட உறையூர்ச் சோழரும், புகாரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட புகாரர்ச் சோழரும் ஆகிய இருபகுதியினரை முக்கியமாகக் குறிக்கலாம். செங்குட்டுவனின் தாயான நற்சோணையுடன் பிறந்தவனும் செங்குட்டுவனுக்குத் தாய்மாமனும் ஆகிய நெடுங்கிள்ளி என்பான் உறையூரை ஆண்டுவந்தான். இந்த உறையூர்ச் சோழருக்கும், புகார்ச் சோழருக்கும் பெரும பகை மூண்டு அடிக்கடி போர் நிகழ்ந்து வரலாயிற்று.

புகார்ச் சோழர் என்பவர்கள் கிள்ளிவளவனும், நலங்கிள்ளியுமாவர். இவ்விருவருடனும் காவிரியாற்றங்கரையில் இயற்றிய போரில் நெடுங்கிள்ளி இறந்துவிட்டான். நெடுங்கிள்ளி இறந்ததும் அவன் மகனுன பெருங்கிள்ளி என்பவன் பட்டத்திற்கு வந்தான். மலையமான் திருமுடிக்காரி என்பவன் உறையூர்ச் சோழனின படைத்தலைவனுக இருந்து உதவிகள் பல புரிந்து வந்தான். ஆனுல் இவனும் சில நாட்களில் இறந்துவிடவே இளைஞனுகிய பெருங்கிள்ளிக்கு விரோதமாக அவனது தாயாதிச் சோழர்கள் ஒன்பதின்மர் கலகம் விளைத்தனர்.

இச்சமயத்தில், இளஞ்சோழனை பெருங்கிள்ளி மலையமானது முள்ளூர் மலையில் ஓடி ஒளிந்திருந்தான். இவனை அந்தச் சமயத்தில் காப்பாற்றிப் பாதுகாத்தவன் மலையமானின் மகனை திருக்கண்ணன் ஆவான். தன் மாமன் மகனை பெருங்கிள்ளிக்கு ஏற்பட்ட இந்தத் தீங்கை யறிந்த செங்குட்டுவன் சினம்பெற்றுச் சீறி, படை பல திரட்டித் தலைமைபூண்டு விரைந்து சென்றான். பெருங்கிள்ளியை விரட்டிக் கலகம் செய்த சோழ வமிசத்தவர் ஒன்பதின்மரையும் உறையூருக்குத் தென்பக்கத்தில் அமைந்திருந்த நேரிவாயில் என்ற ஊரில் சந்தித்துப் போர் நிகழ்த்தி ஒரே பகலில் அனைவரையும் கொன்று குவித்தான்; தன் மைத்துனச் சோழனை பெருங்கிள்ளிக்கு முடி சூட்டுவித்தான்.

இங்ஙனம் ஒன்பது சோழரையும் ஒரே பகலில் கொன்றொழித்த செங்குட்டுவனின் வீரச்செயலை இளங்கோவடிகள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா, ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர், இளவரசு பொறாஅர் ஏவல் கேளார், வளநாடழிக்கும் மாண்பினர் ஆதலின், ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்தவன"

பதிற்றுப் பத்து என்ற நூலிலும் இச்செய்தி, "ஆராத திருவிற் சோழர் குடிக்குரியோர்—ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத்திறுத்து" என்ற அடிகள் மூலம் சிறப்பித்துச் சொல்லப்படுகிறது.

## செங்குட்டுவனின் கன்னிப் போர்

செங்குட்டுவனின் தந்தை நெடுஞ்சேரலாதன், பெருநற்கிள்ளி என்பவனுடன் போர்செய்து இறந்தபோது அவன் மனைவியும், செங்குட்டு வனின் தாயுமாகிய நற்சோணை உடனுயிர் நீத் தனள். இவ்வாறு செங்குட்டுவனின் தாயான நற்சோணை உயிர்நீத்தபோது அவள் பொருட்டு ஏற்படுத்திய பத்தினிக்கல்லை நீராட்டித் தூய்மை செய்வதற்காகக் கங்கையாற்றை நோக்கிப் புறப் பட்டான். அவ்வமயம் ஆயிர ஆரியவரசர் ஒருங்கு திரண்டு வந்து செங்குட்டுவனை எதிர்த்தனர். அக் கங்கையாற்றங் கரையிலேயே இச் சேரமன்னன் தனியாக நின்று போர்செய்து வெற்றிபெற்றான். இவ்வாறு தாயின் உருவச் சிலையை நீராட்டச் சென்றபோது கங்கைக் கரையில் செங்குட்டுவன் நிகழ்த்திய இவ்வரிய செயல் அவனது கன்னிப் போர்களுள் ஒன்றாகும்

இந்நிகழ்ச்சியை, "கங்கைப் போர்யாற்றுக் கடும்புனல் நீத்தம், எங்கோ மகளை ஆட்டிய அந் நாள், ஆரிய மன்னர் ஈரைங் ஞூற்றுவர்க்கு, ஒரு நீ யாகிய செருவெங் கோலங் கண்விழித்துக் கண்டது கடுங் கூற்றம்" என்னும் இளங்கோ வடிகள் வாக்கின் மூலம் அறியலாம்.

தமிழரசர்களை இழிவாகப் பேசிய வடநாட்டு மன்னரை எதிர்த்துப் பொருது வெற்றிபெற்ற நிகழ்ச்சி யொன்றும் செங்குட்டுவனது வரலாற் றில் காணப்படுகிறது. கற்புக்கரசியாம்கண்ணகி

யின் வரலாற்றைச் சாத்தனார் வாயிலாகச் செவி யுற்ற செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை வடிக்க இமயமலையிற் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டி வருதல் வேண்டும் என எண்ணினான். செங்குட்டுவன் தன் எண்ணத்தைத் தனது அவையினிடத்தே எடுத்துரைத்தான்.

அப்போது, அவன் தனது அவையோரை நோக்கி, "அமைச்சர்களே! வெல்போர்த் தானைத் தலைவர்களே! ஆரிய மன்னர் பலர், அவர்களது நாட்டில் நிகழ்ந்த சுயவரம் ஒன்றில் குழுமியிருந்தனர். அக்கூட்டத்தில் அவர்கள் 'தென்றமிழ் நாடாளும் வேந்தர் இமய நெற்றியில் வில், புலி, கயல் பொறித்த நாள எம்போன்ற முடிமன்னர் ஈங்கில்லை போலும்!' என்று கூறி நகைத்துத் தமிழரசரை இகழ்ந்தனராம். இச்செய்தியை இமயஞ் சென்று திரும்பிய முனிவர் சிலரால் அறிந்தேன். அங்ஙனம் தமிழரசரை இகழ்ச்சியுரை கூறி நகைத்த அவ்வடதிசை மன்னரது தலையில் பத்தினிக் கடவுளை வழிபடுதற்குரிய கல்லை ஏற்றிக்கொண்டு வருவேன். அங்ஙனம் செய்யாதது நான் வறிதே திரும்புவேனாயின், பகைவரை அடக்காமல் வளந்தங்கிய எனது நாட்டுக் குடிமக்களை வருத்தும் கொடுங்கோலனாகக் கடவேன்" என்று அத்தாணி மண்டபத்திற் சினத்துடன் வஞ்சினம் கூறினான்.

செங்குட்டுவன் கூறியது கேட்ட அரசனின் ஆசான், 'குட்டுவ! வடநாட்டரசர் சோழ பாண்டியரை இகழ்ந்தனரேயன்றி, நின்னை இகழ்ந்து

கூறவில்லை, உன்னை எதிர்க்கும் மன்னரும் இவ் வுலகில் உளரோ? ஆகவே, கோபந் தணிக!" என்று கூறிச் செங்குட்டுவனின் சீற்றத்தைத் தடுப்பதற்கு முயன்றனர். உடனே சோதிடக் கலையிற் சிறந்த நிமித்திகன் ஒருவன் எழுந்து நின்று, "அரசே! நின் வெற்றி வாழ்வதாக! நின் பகையரசர் எல்லாம் உனது பொன்னடித் தாமரைகளைப் போற்றிப் பணிந்து அடைக்கலம் அடையத் தகுந்த நல்ல முகூர்த்தம் இதுவே. நீ எண்ணிய வடநாட்டு யாத்திரைக்கு இப்போதே புறப்படுதல் சிறந்தது." என்று இயம்பி நின்றான்.

நிமித்திகன் வார்த்தை கேட்ட செங்குட்டு வன் அந்த நல்ல வேளையில் தனது குடையினை யும், வாளினையும் வடதிசை நோக்கி நாட்கொள் ளும்படி ஆணையிட்டான். ஆணை பிறந்ததும், போர்வீரர்களின் ஆரவாரத்தோடு முரசங்கள் முழங்கின. சேனைகள் மணி விளக்குகளுடனும் கொடிகளுடனும் முன்னே சென்றன. அமைச் சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சார ணர் ஆகிய ஐம்பெருங் குழுவினரும், கரணத் தியலவர், கருமவிதிகள், கனகச் சுற்றம், கடை காப்பாளர், நகர மாந்தர், நளிபடைத் தலைவர், யானை வீரர், இவுளி மறவர் எனப்பட்ட எண் பேராயத்தினரும், அரசாட்சியை நடத்தும் கரும வினைஞரும், கணக்கியல் வினைஞரும், தரும வினைஞரும், 'செங்குட்டுவன் பல்லூழி வாழ்க!' என்று வாழ்த்துக் கூறிச் சென்றனர். பட்டத்து யானையின் பிடரிமீது வெண்கொற்றக் குறை

யையும், அரச வாளையும் ஏற்றிவைத்து நல்லோரையில் வடதிசை நோக்கி வஞ்சி நகர்ப் புறத்தே போக்கினர்.

மறுநாட் காலையில் செங்குட்டுவன் கடவுளை வணங்கிப் போர் நோக்கத்துடன், படையுடன் புறப்பட்டான். அவன் செல்லும்போது, நாடகக் கணிகையர் அரங்குகள்தோறும் கூடி நின்று அரசனை வாழ்த்தினர். சூதர், மாகதர், வேதாளிகர் ஆகியோரும் அரசனை வாழ்த்திக்கொண்டே உடன் சென்றனர்,

அவனது தூசிப்படை மலைகளின் முதுகு நெளியும்படி ஆர்ப்பரித்துக்கொண்டே மற்றப் படைகளுடன் நீலகிரி என்ற மலையின் அடிவாரத்தில் அமைக்கப்பட்டிருந்த பாடிவீட்டையடைந்தது. செங்குட்டுவனும் அப் பாடிவீட்டிலே தங்கியிருந்தனன்.

## நூற்றுவர் கன்னர் உதவி

அங்கு கொங்கணர், கருநாடர், குடகு நாட்டவர் முதலியோர் முறைப்படி வந்து தென்றமிழ் மன்னனை வாழ்த்தி வணங்கினர். சஞ்சயன் என்ற தூதுவர் தலைவன் வந்து செங்குட்டுவனை வணங்கி நின்று, “அரசே! கங்கையின் வடகரைப் பகுதியையும் மாளுவ நாட்டையும் ஆளுகின்ற நூற்றுவர் கன்னர் தங்களுடன் கலந்து இமயமலையிற் கல்லெடுப்பித்து, கங்கையில் அச்சிலையை நீராட்டுதற்கு உதவியளிக்க விரும்பியுள்ளனர்” என அறிவித்தான். செங்குட்டுவன்,

"நன்று; வடநாட்டரசனுன பாலகுமரன் மக்களாகிய கனகன், விசயன் என்ற இருவரும் தம் நாக்களைக் காவாதவராய், விருந்தொன்றிலே வடவரசர் பலருடன் குழீஇத் தமிழ் வேந்தரான எம்மை இகழ்ந்து பேசினுராம். அதனுல், பத்தினிக்குக் கல்லெடுப்பித்தலோடு, அவரிடம் நம் ஆற்றலைக் காண்பதற்காகவும் எமது சேனை சீற்றங்கொண்டு அங்குச் செல்கிறது. இச் செய்தியை நூற்றுவர் கன்னர்க்குத் தெரிவித்து கங்கையாற்றை நமது சேனைகள் கடந்து செல்வதற்கு வேண்டிய மரக்கலங்களை அவர்கள் உதவவேண்டும் என நீ முன்னதாகச் சென்று தெரிவிப்பாயாக!" என்று ஆணையிட, சஞ்சயனும் ஆணையைத் தலைமேற்கொண்டு புறப்பட்டுப் போயினன். பிறகு செங்குட்டுவன் பெரும் பரிவாரங்களுடன் நீலகிரிப் பாடியினின்றும் நீங்கி, வடநாடு நோக்கிச் செல்லத் தொடங்கினுன்.

இங்ஙனம், தன் பெருஞ் சேனைகளுடன் சென்ற செங்குட்டுவன் முடிவில் கங்கையாற்றை நெருங்கினன். ஆங்கு முன்னரே சென்றிருந்த சஞ்சயனுல் செய்தியறிந்த நூற்றுவர் கன்னர், சேனைகள் ஆற்றைக் கடத்தற்கு வேண்டிய மரக்கலங்களுடன் காத்திருந்தனர். கன்னரின் உதவியால் செங்குட்டுவமன்னனின் படைகள் ஆற்றின் வடகரையை அடைந்தன. பின் செங்குட்டுவன் கன்னரின் வரவேற்பில் கலந்து மகிழ்ந்து, அங்கிருந்து புறப்பட்டுத் தன் பகைவரது நாடாகிய

உத்தர கோசலத்தை நெருங்கினுன். இவ்வாறு சேரவரசன் பெரும் படையுடன் தம் நாட்டை நெருங்கி வருகின்ருன் என்ற செய்தியைக் கனக விசயர் அறிந்தனர். அவ்விருவரும் வடநாட்டு அரசர்களான உத்தரன், விசித்திரன், பைரவன் சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் என் பவர்களது உதவியுடன் தமிழர்களின் பேராற் றலைக் காண்போம் என்ற கர்வத்துடன் பெரிய சேனையுடன் குயிலாலுவம் என்ற இடத்தில் செங்குட்டுவனை எதிர்த்து நின்றனர். இவ்வாறு ஆனவத்துடன் வடவரசர் சேனை திரண்டு வரு தலைக் கண்ட செங்குட்டுவன் இரையைத் தேடிச் சென்ற சிங்கம் தன்னெதிரே வரும் யானையின் பெருங்கூட்டத்தைப் பார்த்துப் பாய்ந்தவாறு போல, தன்னை எதிர்த்து வந்து நின்ற வடவரது சேனையின் இடையே பாய்ந்து, போர் செய்யத் தொடங்கினுன்.

**போர்க்கள வருணனை**

அப்பெரும் போரில் ஆகாயம் வரை அளாவி நின்ற துகிற்கொடிகளால் சூரியன் மறைப்புண் டது. பறை, சங்கம், கொம்பு, பேரிகை, முரசம் முதலியவற்றின் ஒலி கடலொலியை நிகர்த்து விளங்கின. சேனை வீரர்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து போர் செய்தபோது நிலத்திலிருந்து கிளம்பிய புழுதிப்படலமானது யானைகளின் கழுத்திற் கட்டப்பட்டிருந்த மணிகளின் நாக்கு களில் புகுந்து அவற்றை ஒலிக்க முடியாதபடி செய்துவிட்டன. தோளும் தலையும் துண்டிக்கப்

பட்டு வேருகிய வீரரது குறையுடலாகிய கவந்தங்கள், பேயினது தாளத்துக்கேற்றவாறு கூத்தாடத் தொடங்கின. இவ்வாறு ஆரியவரசரது சேனை வீரர்களை அக்களத்தே கொன்று குவித்து செந்தமிழ் நாட்டின் பெருவீரனை சேரன் செங்குட்டுவன் தும்பை சூடினன். அப்போரில் கனக விசயருடன் தேர் வீரர் ஐம்பத்தொருவர் செங்குட்டுவனிடம் அகபட்டுக் கொண்டனர்.

மற்றப் பகைவர்களோ தங்கள் தங்கள் ஆயுதங்களை எறிந்துவிட்டுத் தப்பியோடப் பார்த்தனர். சிலர் சடை, காவி உடை, சாம்பல் முதலியவற்றைத் தரித்துச் சந்நியாசிகள் போல வேடமணிந்து தப்பினர்; சிலர் பீலிகைக் கொண்டு சமண முனிவர் போன்று காட்டித் தப்பியோடினர்; பலர் பாடகர் போலவும், பற்பல வாத்தியக் கருவிகளை இயக்குபவர் போலவும், நடனமாடுவோர் போலவும் வேடங்கள் அணிந்து பதுங்கியொளிந்துத் தப்பிச் சென்றனர். இவ்வாறு வடவரசர்கள் நடுநடுங்கும்படி, களிறுகளை எருதுகளாகவும், வாளையே கையிற் பிடிக்கும் கோலாகவும் பகைவரது சேனைகளைச் சூட்டடிக் கதிர்களாகவும் கொண்டு, தான் உழவனைப் போல நின்று அப்போரிலே நெற்களத்திற் கடா விட்டு உழக்குதல்போல் அலைத்து நின்றுன், செங்குட்டுவன். இப்போர்க்களத்தில் பகைவரது முடித் தலைகளையே அடுப்பாகவும், பிடரிகளையே தாழியாகவும், வலயமணிந்த தோள்களையே துடுப்பாகவும் கொண்டு சமைத்த ஊன்

சோற்றைப் பேய் மடையன் எல்லாப் பேய்களின் தகுதியையும் அறிந்து பரிமாறப் பேய்கள் வயிருர உண்டு களித்து, இவ்வாறு பெரு விருந்து செய்து தங்களுக்கு இன்பம் தந்த செங்குட்டுவனை, "ஊழியளவு வாழ்க!" என்று வாயார வாழ்த்திச் சென்றதாகச் சிலப்பதிகாரத்தில் கற்பனை நயம் செறிக்ப் போர்க்கள வருணனை சிறப்பாக அமைந்துள்ளது.

இவ்வாறு, நாகாவா மன்னரது படைகளை வெற்றி பெற்று, தன் எண்ணத்தை வெற்றிகரமாக முடித்த திறல் வேந்தன் செங்குட்டுவன் பத்தினிக் கடவுளை ஆக்கற்குரிய சிலையை இமய மலையினின்று கொண்டுவரும்படி செய்து, அக் காரியத்தையும் முடித்திக் கொண்டான்.

தேவர்க்கும் அசுரர்க்கும் இடையே போர் பதினெட்டு ஆண்டுகள் நடந்தது எனவும், இராமராவண யுத்தம் பதினெட்டு மாதங்கள் நடந்தது எனவும், பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் இடையே நடந்த போர் பதினெட்டு நாட்களில் நடந்தன எனவும் கூறுவர். ஆனுல், செங்குட்டுவனும், கனக விசயரும் நிகழ்த்திய போர் பதினெட்டு நாழிகையில் நடந்து முடிந்ததாகையால் இப்போர் எல்லோராலும் மிகவும் சிறப்பிக்கப்பட்ட பெரும் போராகும்.

**செங்குட்டுவன் வஞ்சினம் முடித்தல்**

இவ்வாறு, ஒரு பகற்குள்ளே பகைவரை வெற்றி பெற்று விளங்கிய செங்குட்டுவன் தன்

சேனைகளால் இமய மலையிலிருந்து பத்தினிக் கடவுளுக்குரிய சிலையை எடுப்பித்த பின்னர், அச் சிலையை கனக விசயர் தலையின்மேல் ஏற்றிக் கொண்டு, அதனை நீராட்டும் பொருட்டுக் கங்கை யாற்றின் வட கரைக்கு வந்து சேர்ந்தான். பத்தினியின் சிலை கங்கையாற்றில் ஆகம முறைப் படி நீராட்டப்பெற்றது. இச்சடங்கு முடிந்த பின்னர் செங்குட்டுவன் தன் சேனை பரிவாரங் களுடன் நாவாய்கள் மூலம் கங்கையாற்றைக் கடந்து அதன் தென்கரை வந்து சேர்ந்தான்.

அத்தென் கரையில் அமைக்கப்பட்டிருந்த பாடியில் செங்குட்டுவன் தனது சேனைகளுடன் தங்கியிருந்தான். போரில் இறந்த வீரர்களுடைய மைந்தர்களையும், தூசிப் படையில் நின்று பகை வரை வென்று, வெற்றி மாலை சூடியவர்களும், பகைவரது தேர்வீரரைக் கொன்று அவர்களு டைய குருதியெல்லாம் தங்கள் உடலின்மீது விளங்குமாறு அமர்ந்திருந்த வீரர்களும், மார்பில் விழுப்புண் பட்டு மாற்றாரைப் புறங்கண்டு மீண்டவர்களும் ஆகிய (இறவாத) எல்லா வீரர் களையும் தன்னிடத்து வரும்படி செங்குட்டுவன் அழைத்தான். அவ்வீரர்கள் அடைந்த வெற் றிக்கு அறிகுறியாக அவர்களுக்கெல்லாம் பொன்னால் செய்யப்பட்ட பூக்களை மிகுதியாகக் கொடுத்துச் சிறப்பித்தான்.

இத்தனை சிறப்புக்களையும், பெருமைகளையும் ஒருங்கே பெற்றிருந்த நமது சேரன் செங்குட்டு

வனைத் தென்னாட்டு அசோகன் என்று கூறுவதே தகும். சங்கச் செய்யுட்களில் எத்தனையோ அரசர்களது செய்திகள் கூறப்பட்டிருந்தாலும், செங்குட்டுவன் போன்று மற்ற அரசர்கள் அவ்வளவாகப் பெருமையுடன் கூறப்படாததிலிருந்தே செங்குட்டுவன் சிறப்பு நமக்கு விளங்கும். இவ்வாறு "புலவர் பாடும் புகழுடையோனாய்" விளங்குகின்றவன், படைத்தலைமை பூண்டு பகைவர் புறமுதுகிட்டோட வாகை சூடி வையம் புகழ வாழ்ந்தவன். குன்றாப் புகழுடன், குற்றமற்ற வீரமுடன் என்றும் இந்நாட்டு மக்கள் உள்ளத்து இடம் பெற்று விளங்கும் வீர மன்னன் நமது செங்குட்டுவனேயாகும்,

அரசனாய்த் தோன்றி அருந்தமிழ் நாட்டின் மானங்காத்த மாண்புடைய மறவன், படைத்தலைமை பூண்ட சேரநாட்டுச் செம்மல், நம செங்குட்டுவன் வாழ்க! அவன் புகழ் ஓங்குக!

## 2. கருணாகரத் தொண்டைமான்

### பிற்காலச் சோழர்கள்

சங்க காலத்தில் பேரும் புகழும் பெற்று, அறிவும் திருவும் நிறைந்து, ஆற்றலுடன் விளங்கிய சோழர்கள், இடைகாலத்தில் ஏற்றம் குறைந்து எழில் குறைந்து மறைந்து ஒழிந்தனர். பல்லவரது போர்த்திறன் சோழரது ஆட்சிக்கு முடிவுகட்டியது. பல்லவர் சில காலம் சோழ நாட்டைத் தமது நாட்டுடன் சேர்த்து ஆளத் தொடங்கினர். சில ஆண்டுகள் கழிந்ததும், சோழமன்னர் திறம் பெற்றுத் தமது நாட்டைத் திரும்பப் பெற்றனர்; சோழ நாட்டு ஆட்சியைக் கைப்பற்றி ஆண்டனர். இவ்வாறு இழந்த அரசை மீண்டும் எய்தி, சோழ நாட்டை ஆண்டு வந்த சோழரை, வரலாற்று ஆசிரியர்கள் பிற்காலச் சோழர் எனக் குறிப்பிடுவர்.

பிற்காலச் சோழர்கள், தமது சோழ அரசை உயர்நிலையில் நிறுத்துவதற்குப் பெரும பாடுபட்டனர். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" "பெரு முயற்சி பீடு தரும்" என்ற மொழிகளுக்கு இணங்க, முயற்சியால் பிற்காலச் சோழர் பரம்பரை சங்க காலச்சோழரைப்போன்று ஆதிபத்தியம் செலுத்தி வந்தது. இடையில் தளர்ந்திருந்த சோழ ஏகாதிபத்தியத்தை உயர்நிலையில் நிறுவிய அரசர்களுள் முதற்குலோத்துங்கச் சோழன் மிக மிக முக்கியமானவன். இவன் அபயன் எனவும், விசயதர சோழன் எனவும் குறிப்பிடப்படுகிறுன்,

இவன் கி. பி. 1070 முதல் 1118 வரை நாற்பது ஆண்டுகள் சோழ நாட்டைச் சிறப்புடன் ஆண்டுவந்தனன். இவ்வாறு சீரும், சிறப்பும் பொருந்த ஆட்சி புரிந்த இவ்வரசன் அடைந்த புகழுக்குக் காரணமாக விளங்கியவர்கள், இவனது சேனைத் தலைவர்களேயாவர். இவனிடம் அமர்ந்திருந்த தானைத் தலைவர்களில் தலைச்சிறந்தவனாய் விளங்கியவன் கருணாகரத் தொண்டைமான் என்னும் சிற்றரசன். இத் தொண்டைமானைப் பற்றி முதலில் இலக்கிய உலகத்துக்கு அறிவித்தவர் தரணி புகழ் தரணி பாடிய செயங்கொண்டார் என்ற புலவர் ஆவார்.

குலோத்துங்கன்மீது இப்புலவர் கலிங்கத்துப்பரணி என்ற நூல் பாடிச் சிறப்பித்துள்ளார். அப்பரணி குலோத்துங்கச் சோழனின் பரம்பரையையும், அவனது வெற்றிச் சிறப்புகளையும், கலிங்கப் போர் நிகழ்ச்சிகளையும் விரிவாகக் கூறுகிறது. கலிங்கப் போரை நேரில் சென்று நடத்தி, குலோத்துங்கனுக்குக் குன்றாத புகழைத் தந்தவன், அவனது படைத்தலைவனாகிய கருணாகரத் தொண்டைமானே. "அபயன் ஏவத் தொண்டைமான் வாரணம் ஏறிக் கலிங்கம் சென்றான்; போர் செய்து வெற்றி பெற்றான்" எனக் கலிங்கத்துப் பரணியின் தாழிசை கூறுகிறது.

**கருணாகரன் வரலாறு**

இக் கருணாகரன் யார்? எக்குலத்தில் தோன்றினான்? சோழனுக்கு இவன் ஆற்றிய பணி என்ன? படைத் தலைமை பூண்டு போர்த்திறங்

காட்டிய இடங்கள் யாவை? என்பன போன்ற செய்திகளைப் படிக்கும்போது வடநாடு சென்று வென்ற வந்த செங்குட்டுவனைப் போன்று இவனும் ஒரு பெரு வீரன் என நாம் துணிய முடிகிறது.

கருணாகரன் வண்டை என்ற ஊரின் தலைவன்; பல்லவ வம்சத்தில் தோன்றியவன்; தொண்டைமான் என்ற சிறப்புப் பெயர் பூண்டவன்; குலோத்துங்கனின் சேனைத் தலைவனாக விளங்கியதுடன் மந்திரத் தலைவனாகவும் இருந்தான். இச்செய்திகளைச் செயங்கொண்டார்,

"வண்டை வளம் பதி பாடீரே
பல்லவர் தோன்றலைப் பாடீரே"

என்று சுருக்கமாகத் தாம் பாடிய கலிங்கத்துப் பரணியில் பாடியிருப்பதன்மூலம் நாம் அறிகிறோம்.

இடைக்காலத்துச் சோழர்களிடம் பல்லவ வேந்தர் தமது பழைய வல்லமையிற் குறைந்து, அச்சோழ அரசர்களின்கீழ் படைத் தலைவராகவும், அமைச்சராகவும் அமர்ந்திருந்தனர். அப்பணிகளை நடத்தி வந்ததோடல்லாமல் சிற்றூர், பேரூர்கட்குத் தலைவர்களாய் விளங்கிய பல்லவ வம்சத்தாரில் நமது கருணாகரனும் ஒருவன். இவனது ஊராகிய வண்டை என்பது சோழ நாட்டில் திருநறையூர்ப் பகுதியில் உள்ள ஊராகும். இவ்வூர் இப்போது வண்டுவாஞ்சேரி என அழைக்கப்படுகிறது. கும்பகோணம் தாலூகாவில் இவ்

ஆர் தற்போது உள்ளது. இது முற்காலத்தில் வண்டாளஞ்சேரி எனவும் அழைக்கப்பட்டது. சோழர் காலத்தில் இவ்வூர் மிகச் சிறப்புடன் விளங்கியது.

இவ் வண்டாளஞ்சேரிக்குத் தலைவனாக விளங்கியவன் கருணாகரன். இராமபிரானுக்கு உள்ள பல பெயர்களில் கருணாகரன் என்ற பெயரும் ஒன்றாகும். இதனையே செயங்கொண்டார் தமது கலிங்கத்துப் பரணியில்,

"இலங்கை யெறிந்த கருணாகரன்றன்
இசைவெஞ்சிலையின் வலி கேட்பீர்,
கலிங்கம் எறிந்த கருணாகரன்றன்
களப்போர் பாடத் திறமினோ"

எனப் பாடுகிறார். இராமன் இலங்கை யெறிந்து புகழ் கொண்ட கருணாகரன்; மற்றொருவன் கலிங்கம் எறிந்து புகழ் பெற்ற கருணாகரன் என்பது அப்பாடலின் கருத்தாகும்.

இக் கருணாகரத் தொண்டைமானின் மனைவி அழகிய மணவாளினி என்று பெயர் படைத்தவள் ஆவாள். கருணாகரனுக்குப் பல்லவராசர் என்ற ஒரு தமையனார் இருந்தனர் என்பதும், அவர் கருணாகரனின் துணைப் படைத் தலைவராய் இருந்தார் என்பதும் கலிங்கத்துப் பரணிமூலம் வெளிப்படுகின்றன.

கருணாகரன் வண்டை என்னும் சிற்றூருக்குத் தலைவனாக இருந்த போதிலும், அவசியம் ஏற்பட்ட சமயத்தில் குலோத்துங்கச் சோழனுக்குப் படைத்

தலைவனாகச் சென்று போர்புரிந்து வந்தனன். இவன் சோழனது ஏவற்படிதான் கலிங்கத்தின் மீது படையெடுத்துச் சென்று, வென்று வந்தான் எனத் தெரிகிறது.

### குலோத்துங்கன் பெருமை

குலோத்துங்கனது பேராற்றலுக்குப் பயந்து பகையரசர் யாவரும் அடங்கி அவனுக்குத் திறை செலுத்தி வந்தனர். ஒரு தடவை குலோத்துங்கன் காவிரிக்கரையில் வேட்டையாடித் திரும்பி வந்தனன். வரும் வழியில் பாலாற்றங்கரையிற் பரிவேட்டை ஆடி வர விரும்பினான். அப்பயணத்தில் அவன் காஞ்சி நகரை அடைந்து, அங்குள்ள அரண்மனையில் தங்கினன். அவ்வரண்மனையில் அமைந்திருந்த சித்திர மண்டபத்தில் இருந்த அரியணையில் வீற்றிருந்தனன். அப்போது பல அரசர்கள் தத்தமது திறைப்பொருளை இவனுக்குக் கொண்டுவந்து செலுத்தினர். அவ்வாறு திறைப் பொருள் செலுத்தியோர் பலர். தென்னவர், வில்லவர், கூபகர், சாபகர், சேதிபர், யாதவர், கன்னடர், கோசலர், கடம்பர், துளம்பர், சிங்களர், வத்தவர், துருக்கர் முதலியோர் அவர்களில் சிலர். இவ்வரசர்கள் கொண்டு குவித்த திறைப் பொருள்கள் ஆரம், பொற்கலம், குதிரை, முத்து மாலை, நவமணி மாலை, பதக்கம், யானைகள் முதலியனவாம். திறைப்பொருள்களை அவ்வரசர்கள

குலோத்துங்கனிடம் சேர்ப்பித்து அவனது அடியில் வீழ்ந்து வணங்கினர். இவ்வாறு எல்லா அரசர்களும் திறைப்பொருள் செலுத்தி முடிந்ததும், குலோத்துங்கன் மந்திரக் கணக்கரை நோக்கி, ''இன்னும் திறைப்பொருள் செலுத்தாத அரசரும் உண்டோ?'' எனக் கேட்டனன். ''வட கலிங்க அரசனாகிய அனந்த பத்மன் மட்டுமே இன்னும் திறைப் பொருள் செலுத்தாது உள்ளான்'' எனக் கணக்கர் தெரிவித்தனர்.

உடனே குலோத்துங்கன் புன்முறுவல்புரிந்து, ''கலிங்க வேந்தன் வலிமையில்லாதவனாக இருந்தாலும், அவனது மலையரண்கள் மிகுந்த வலிமையுடையனவாகும். உடனே நமது படைவீரர்கள் அவ்வரண்களை அழிப்பதற்குப் புறப்படுக! அவ்வரசனையும் எம்முன் கொண்டு வந்து நிறுத்துக!'' எனக் கட்டளையிட்டனன். இவ்வாறு குலோத்துங்கன் வாயிலிருந்து கட்டளை பிறந்ததும், வண்டை நகர் அரசனான கருணாகரன், ''ஏழு பிரிவாக விளங்கும் கலிங்க நாட்டை நானே அழித்து வருகிறேன்'' என்று வஞ்சினம் கூறினான் குலோத்துங்கனும் அதற்கு இசைந்து விடையளித்தனன்.

சோழனின் விடை கிடைத்ததும் படை கொண்டு புறப்பட முற்பட்டான், வண்டையர் கோன் கருணாகரன். நால்வகைப் படைகளை அணி வகுத்தான். வாட்கள் மின்னின; முரசுகள் முழங்கின; ஊது கொம்புகள் ஆர்த்தன. படைவீரர்கள் பிடித்திருந்த குடைகளும், துகிற் கொடிகளும்

சூரியன் ஒளியை மறைத்தன. இப்படைகள் புறப்பட்டதும் நிகழ்ந்த நிகழ்ச்சியைப் பரணி பாடிய செயங்கொண்டார், "எழுந்தது சேனை, எழிலும் இரிந்தது பாரின் முதுகு, விழுந்தன கானும் மலையும், வெறுந்தரையாயின திசைகள்" எனக் கூறுவதிலிருந்து அப்படைகள் சென்ற வீரநோக்கு நமக்குப் புலனாகின்றது.

படையின் தலைமைத் தளபதியான கருணாகரனும், துணைத் தளபதிகளான பல்லவரசர், வாண கோவரையன், முடிகொண்ட சோழன் ஆகியோரும் தத்தமது யானைகளின்மேல் ஏறிக்கொண்டு சேனை சூழப் புறப்பட்டனர். இடைவெளிகளில் இளைப்பாறிக்கொண்டு இரவும் பகலும் நடந்தது சேனை.

### கலிங்கப் போர்

அந்தப் பெருஞ் சேனை பாலாறு, குசைத்தலை, முகரி கொல்லி, பெண்ணை, வயலாறு, மண்ணாறு, பேராறு, கோதாவரி, கம்பை, சந்த நதி, கோதமை முதலிய நதிகளைக் கடந்து கலிங்க நாட்டிற்புகுந்தது.

அச்சேனை தனது போர்க் கருத்தைக் கலிங்க நாட்டார்க்கு அறிவிக்கவேண்டி நாடெங்கும் தீக் கொளுவிச் சூறையாடியது. "இடிகின்றன மதில்; எரிகின்றன பதி; எழுகின்றன புகை; மடிகின்றன குடி" எனச் சில குடி மக்களும், "இனி நமக்குப் புகலிடம் எதும் இல்லையோ?" எனச் சில குடி மக்களும் அலறிப் புலம்பினர்.

குடிமக்களிற் சிலர் கலிங்க வேந்தனுகிய அனந்தபத்மனிடம் சென்று, எமது அரசே! நம் நாட்டின் மீது படையெடுத்து வந்துள்ள சேனை சோழ அரசனுடையதேயாகும்" எனத்தெரிவித்து நடுங்கினர். உடனே அனந்தன் வெய்துயிர்த்துக் கைபுடைத்து வியர்த்து நோக்கினன். "திறை கொடுக்க நான் மறுத்தமையால் சோழன் தனது படையை இங்கு ஏவியிருக்கிறுன்போலும்! வலிமை மிகுந்த சோழனுக்கன்றி அவன் அனுப்பிய சேனைக்கும் நான் எளியவனே? காட்டரண், மலையரண், கடலரண் என்ற மூன்று வகை அரண்களையும் உடையது நமது கலிங்கதேசம் என்பதைச் சோழன் அறியான். அவனது சேனையை எதிர்த்து அழிப்பேன்" என்று தன் அமைச்சர்களைப் பார்த்துக் கூறினன்.

**அமைச்சர் அறிவுரை**

அமைச்சர்களில் மிகக் கூர்மதி படைத்த எங்கராயன் என்ற அமைச்சன் எழுந்து அனந்தபத்மனை வணங்கிப் பேசலுற்றுன்; "அரசே! அரசர்கள் கோபித்துக்கொண்டாலும், அவரது அடியவராகிய அமைச்சர்கள் அரசாக்கு நன்மை விளைக்கும் சொற்களைச் சொல்லாமல் இருப்பது முறையல்ல. ஆகையால், எனக்குத் தெரிந்த சிலவற்றைக் கூற முன் வருகிறேன.

"விசயதரனுகிய முதற் குலோத்துங்கனின் சேனையே எல்லா அரசர்களையும் அழிக்கும் வல்லமை பொருந்தியது. அவனே அப்

படைக்குத் தலைமை பூண்டு வர வேண்டும் என்ற அவசியமும் உண்டோ? முன்னொரு காலத்தில் விசயதரன் தென்னாட்டை வெல்லக் கருதிப் பாண்டியரை எதிர்த்தான். அவன் ஏவிய சேனை பாண்டியர் ஐந்து பேரை வென்று திரும்பியது. இவனது சேனை புறப்பட்டு வருகிறது என்ற செய்தியைக் கேள்விப் பட்டதும் சேர வேந்தர்கள் ஓடி மறைந்து ஒளிந்தனர் என்பதை நீ கேள்விபட்டதில்லையா? விசயதரனுடைய அச் சேனையே மேற்குக் கடற் கரையில் உள்ள விழிஞம் என்ற ஊரை அழித்தது; காந்தளூர்ச் சாலையைக் கைப்பற்றியது. வித்தவ நாட்டரசனும் அச் சேனையால் துன்பம் அடைந்தான். அளத்தி என்னும் ஊர் அச் சேனையால்பட்ட துன்பத்தை நீ அறியாயா? சிற்றரசர் பலர் காக்கின்ற நவிலை என்ற ஊரில் இப்படை ஆயிரம் யானைகளைக்கைப்பற்றித் திரும்பிவந்தது. குலோத்துங்கச் சோழனது சேனையால் தமது நாடுகளை எல்லாம் இழந்த அரசாகள் இத்தனை பேர் என்று எண்ணுதல் முடியாத காரியம் ஆகும், இவ்வாறு பல போர்களில் வெற்றி பெற்ற அச் சேனையைத் திரட்டிக்கொண்டு அச் சோழனின் படைத் தலைவனாகிய கருணாகரன் வருகின்றான். நீ அவனோடு போர் புரிந்து உனது தோள் வலிமையை புரிந்து கொள்வாய் இன்றைக்கு எனது சொல்லை ஏற்றுக் கொள்ளாமல் கோபித்துக்கொண்டாலும், அச் சேனைகளை எதிர்த்து நீ போர் செய்கின்ற சமயத்தில் என்னை நீ நினைப்பாய்!" என்று எங்கராயன்

என்ற அமைச்சன், "மந்திரிக்கழகு வரும் பொருள் உரைத்தல்" என்றபடி பின்வரப்போவதனை முன்னறிந்து உரைத்தான்.

அமைச்சனின் அறிவுரை கேட்ட அனந்த பத்மன் ஆறாச் சினங்கொண்டு, "எனது சொற்கு எதிர் கூற இமையோரும் அஞ்சுவர். நீண்ட நாள் போர்த் தொழில் கிடைக்காமல் என் தோள்கள் தினவு கொண்டுள்ளன. நீ தவறாகக் கூறிவிட்டாய். என் வலிமை அறியாது புகன்றுவிட்டாய். அமைச்சர் என்பதால் மன்னித்தேன். சோழனின் சேனையை வெல்லுதல் எளிது" என்று கூறி விட்டு, "நமது நால்வகைப்படைகளும் திரளட்டும்; பகைவர் சேனையை எதிர்த்து அழிக்கப் புறப்படுக!" எனக் கட்டளையிட்டான்.

கலிங்க வேந்தனது கட்டளை பிறந்ததும் ஏழு பிரிவுகளுடைய கலிங்க நாடு முழுவதிலும் போர் ஆரவார ஒலி எழுந்தது. அவ்வொலி கேட்டு எட்டுத் திசையிலுள்ளோரும் பயந்து நடுங்கினர். யானைகள் மேகம்போல் முழங்கிக்கொண்டு புறப்பட்டன; குதிரைகள் கடலின் அலைகள் போல் எழும்பிக் குதித்துப் புறப்பட்டன; கடலில் எழும்பும் நுரைகளைப்போல வெண்கொற்றக் குடைகள் திரண்டு சென்றன.

கலிங்கப் படைகளும், சோழ நாட்டுப் படைகளும் சென்ற நிலையைக் கலிங்கத்துப்பரணி ஆசிரியர் செயங்கொண்டார்.

"எடும் எடும் எடும் என எடுத்ததோர்
இகல் ஒலி கடல் ஒலி இகக்கவே
விடுவிடு விடுபரி கரிக்குழாம்
விடும் விடும் எனுமொலி மிகைக்கவே"

எனப் புகழ்ந்து பாடியுள்ளார். சோழரது குதிரைப் படைகள், கலிங்கரது குதிரைப் படைகளை எதிர்த்தன; யானைப்படைகளும் யானைப் படைகளும் பொருதன; தேர்ப்படைகளும் தேர்ப் படைகளும் மோதின; அரசரும் அரசரும் எதிர்த்தனர்; வீரரை வீரர் எதிர்த்தனர்.

போர்க்களத்தில் எங்கு பார்த்தாலும் செந்நிறக்குருதியாறு ஓடியது; அக்குருதியாற்றில் நுரை மிதந்து செல்வதுபோலக் குடைகள் மிதந்து சென்றன; இறந்த யானையின் உடல்கள் ஆற்றின் கரைகள் போல இரண்டு பக்கங்களிலும் ஒதுங்கியிருந்தன. யானைகள் ஒன்றோடொன்று மோதும்போது அவைகளின் கொம்புகளிலிருந்து நெருப்புப் பொறிகள் உண்டாகி, துகிற்கொடிகளில் பற்றி எரிந்தன.

இவ்வாறு பார்ப்பவர்க்கு அச்சம் ஊட்டும் தன்மையில் இருதரத்துச் சேனைகளும் ஒத்த நிலையில் போர் செய்து கொண்டிருந்தன. அச்சமயத்தில் பெருவீரனான கருணாகரன் தனது மதக் களிற்றின் மேல் ஏறிப் போர் செய்யப் களத்துட் புகுந்தான். புகுந்த அளவில் சோழனது படைவீரர்கள் உற்சாகங் கொண்டு முன்னிலும் பன்மடங்கு ஆற்றல் மிகுந்து போர் செய்யத் தொடங்கினர். கருணாகர

னது கலிங்கப் போர்க்கள நிகழ்ச்சியைப் பரணி மூலம் ஜெயங்கொண்டார், மிகவும் பாராட்டிச் சிறப்பித்துள்ளார்.

## போர்வீரர்களது தீரச்செயல்கள்

சோழனது சேனை வீரர் குதிரையை எதிர்ப்பது வீரம் அல்ல என்று எண்ணி, யானையை எதிர்த்துப் போர் புரிந்தனர். யானைகளின் துதிக்கையை வெட்டியெறிந்தனர். 'வில் வீரர்கள் தமது வில்லில் கணை தொடுத்து குறிபார்த்து அம்பு ஏவும் சமயத்தில் அவர்களது தலை பகைவர்களால் துண்டிக்கப்பட்டு வீழ்ந்தபோதிலும் அவர்கள் குறித்த இலக்குகளின் மீது அவர்களது குறையுடல்கள் கணை வீசி எதிரிகளை அழித்தன. வீரர்களின் உடலைச் சுற்றி அம்புகள் தைத்திருப்பதால், அவ்வீரர்களின் உயிர் பிரிந்தும் கூட அவ்வுடல்கள் சாயாமல் நிலத்திலே நின்றபடி விளங்கின; வீரர்களால் வெட்டுண்ட யானைகளின் மத்தகத்திலிருந்து முத்துக்கள் சிதறி வீழ்ந்தன; தலையிழந்த வீரர்களின் உடல்களாகிய கவந்தங்கள் துள்ளியாடின; அதைச் சுற்றிப் பேய்கள் கூத்தாடிக் களித்தன ஒட்டகம் யானை, குதிரை முதலியவற்றின் மேல் அமர்ந்து போர் செய்ய வீரர்கள் இறந்து கீழே விழுந்துவிட்டமையால் அவை களத்தில் சுயேச்சையாய்த் திரியலாயின. இரத்த வெள்ளத்தில் கொலையுண்டு விழுந்த யானைக் கூட்டங்கள் கடலில் படி

கின்ற மேகங்களைப் போல விளங்கின. யானைகளின் துதிக்கைகளை வெட்டி அவைகளைத் தமது தோளில் வைத்துக்கொண்டு திரிந்த வீரர்கள், துருத்திகளைத் தோளில் வைத்து நீர் சொரியும் துருத்தியாட்களைப் போலக் காட்சியளித்தனர். கையில் அம்புகள் இல்லாத வீரர் சிலர் தமது மார்பில் தைத்திருந்த அம்புகளைப் பறித்துப் பகைவர் மீது வீசியெறிந்து போர் செய்தனர். இரண்டு தொடைகளையும் இழந்த வீரர் சிலர், தம்மை எதிர்த்து தாக்கும் யானைகளின்மீது அத்தொடைகளை வீசி எறிந்தனர்.

### போர்க்களப் பயங்கரக் காட்சிகள்

வீரர்களின் துணிக்கப்பட்ட உடல்கள் போர்க்களம் எங்கு பார்த்தாலும் கிடந்தன; வீரர்களின் தலைகள் மலைபோல்குவிந்தன; அவர்களது இரத்தம் கடல்போல் பரவின; இரத்த வெள்ளத்தில் வீரர்களின் குடல்கள் மிதந்து சென்றன. கழுகுகளும், நரிகளும், காகங்களும் போரில் மடிந்த பிராணிகளின் உடலைத் தின்றன.

இத்தகைய பெரும்போரில் கருணாகரனின் முன் நின்று போர் செய்ய ஆற்றாமல் கலிங்க வேந்தனாகிய அனந்தபத்மன் ஓடி ஒளிந்துகொண்டான். அவனது வீரர்களும் தங்கள் தங்கட்குப் பொருத்தமான வேடங்களைப் பூண்டு போர்க்களத்தினின்றும் தப்பியோடினர். சோழ வீரர்கள் அளவில்லாத யானைகளையும், குதிரைகளையும், ஒட்டகங்களையும், பல வகை நிதிகள் முதலானவற்றையும்

கைப்பற்றினர். அவர்கள் கைப்பற்றி வந்த பொருள்கள் இத்துணையளவின என்று யாவராலும் கூறப்பட முடியாததொன்றாகும்.

போர் முடிந்ததும் கருணாகரன் அனந்தபத்மனைப் பிடித்துச் செல்ல எண்ணி, "அனந்தன் இருக்கும் இடத்தை அறிக!" என்று ஒற்றர்க்குக்கட்டளையிட்டான். கருணாகரன் கட்டளையிட்டதும்பலஒற்றர்கள் மலைகளிலும், காடுகளிலும் தேடிச் சென்றனர். இறுதியில் ஒற்றர் கலிங்கவேந்தனது சேனை ஒருமலையுச்சியில் உலவி வருவதைக் கண்டு, இம் மலையில் தான் அனந்தபத்மன் இருத்தல் வேண்டுமென நினைத்துத் தமது வேல்களாலும், விற்களாலும் வேலி வளைத்து அம்மலையைப் பொழுது விடியும் வரையிலும் காத்து நின்றனர். அம்மலையில் உலவிய கலிங்க வீரர்கள் பலர் சோழவீரர்களால் கொல்லப்பட்டனர்.

கலிங்க வீரர் உயிர் பிழைப்பதற்காகப் புதர்களில் நுழைந்து ஓடும்போது அவர்கள் தலைமயிரும் அணிந்திருந்த ஆடைகளும் புதரிலுள்ள முட்களில்சிக்குண்டுபறிக்கப்பட்டன. ஆதலால் அவர்கள் தங்களை எதிர்ப்பட்டசோழ வீரரிடம்தாங்கள் சமணத் துறவி எனக் கூறி உயிர் தப்பிச் சென்றனர். சில கலிங்க வீரர்கள் வில்லில் உள்ள நாணையறுத்து, முப்பிரி நூலாகத் தங்கள் மார்பில் அணிந்துகொண்டு பிராமணர் எனக் கூறி உயிர் தப்பினர், இரத்தத்தில் தோய்ந்த கொடித்துணி

களைச் சிலர் அணிந்துகொண்டு "நாங்கள் புத்த மதப் பிட்சுகள் எனக் கூறித் தப்பிச் சென்றனர். சிலர் யானைகளின் மணிகளைத் தாளமாகப் பிடித்துக்கொண்டு சோழர்களை வணங்கி, நாங்கள் பாட்டிசைக்கும் பாணர் குலத்தினர்" என்று கூறித் தப்பிப் பிழைத்தனர்.

**கலிங்கத்துப் பரணி கூறுபவை**

கருணாகரனால் நடத்தப்பட்ட இக் கலிங்கப் போர் பதினெட்டு ஆண்டுகள் விடாது நடந்த தேவாசுரப் போரைவிடச் சிறந்தது எனவும், பதினெட்டு மாதங்கள் நடந்த இராமாயணப் போரை விடப் பெரியது எனவும், பதினெட்டு நாட்கள் நடந்து முடிந்த பாரதப்போரைக் காட்டிலும் மிகப் பெரியது எனவும் செயங்கொண்டார் தமது பரணியில் பாடிச் சிறப்பித்துள்ளார். இக்கலிங்கப் போர்ச் செய்திகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு தான் செயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியைப் பாடியுள்ளார். இப் பரணி நூல் சோழனுக்குப் புகழ் உண்டாக்கிய கலிங்க வெற்றிக்குக் காரணமானவன் அவனது படைத்தலைவனை கருணாகரனே என்பதை அந்நூலில் பரக்கக் காணலாம். கலிங்கப் போர்க்களத்தில் பேய்கள் வனதேவதையாகிய கொற்றவையை வழிபடுவதற்காகத் திரள்வது போன்ற பல நிகழ்ச்சிகள் பரணியில் கூறப்பட்டுள்ளன. அவை நமக்கு மிகவும் இன்பம் ஊட்டுவனவாதலால் அவற்றில் ஒரு சிலவற்றைக் காண்போம்.

முதுபேய் ஒன்று துர்க்கையின் முன் வந்து, "தேவியே! கலிங்கப் போர்க்களத்தைக் காணல் வேண்டும்" என்று கூறித் தொழுதது. துர்க்கையும் தன் பேய்க்கூடத்துடன் கலிங்கப் போர்க்களத்திற்குச் சென்றாள். அங்கு யானைகள் இரத்த வெள்ளத்தில் ஒன்றன் பின் ஒன்றாக நீந்திச் செல்லுதல் கடலில் மரக்கலங்கள் ஒன்றை ஒன்று தொடர்ந்து செல்லுதலைப் போன்று விளங்கின. குதிரைகளின் கால்கள் கொழுப்பாகிய சேற்றில் புதையுண்டன. ஆகையால் கால்களைப் பறிக்க இயலாமல் வரிசையால் அக்குதிரைகள் குருதி வெள்ளத்தில் நின்றன. அவ்வாறு அவை நிற்பது நீர் வெள்ளத்தை அடைப்பதற்காகக் குறுக்கே இடப்பட்ட குதிரை மரங்களைப்போன்று விளங்கின.

அப்போர்க் களத்தில் கொழுப்புக்களாகிய போர்வை மூடிக்கொண்டதால் கரிய நிறக் காகங்கள் வெண்ணிறக் காகங்களாகக் காட்சியளித்தன வீரர்களின் உயிரற்ற உடல்களைப் பிடுங்கித் தின்ன வந்த பறவைகளின் உடலில், அவர்கள் கையிலுள்ள வேல் முதலிய ஆயுதங்கள் தைத்தலால் கழுகும், பருந்தும் வருத்தமுற்றன. யானை மேலிருந்து போர் புரியும் வீரர்களின் தலைகள் வெட்டப்பட்டுத் துள்ளி விழுதல், வீரமகள் அம்மானை யாட்டத்தில் மேலே விட்டு விளையாடும் விளையாட்டுக் கருவிகளைப் போன்றிருந்தன.

இவ்வாறு கலிங்க வீரரைப் போர்க்களத்தில் அழித்தொழித்துப் போர்புரிந்து வெற்றி பெற்ற

படைத்தலைவன் கருணாகரன் சோணாடு திரும்பி வந்து குலோத்துங்கனை வணங்கி நின்றான். பொன்னித் துறைவனாகிய சோழனும் படைத் தலைவனாக கருணாகரனைச் சிறப்பித்துச் பாராட்டி னான். இங்ஙனம் அறிவும், திருவும், அளவிலா ஆற்றலும் பொருந்தி விளங்கிய பெருவீரன் கருணாகரத் தொண்டைமான் ஆவான்.

---

# 3. அரியநாதர்

உலகத்தின்கண் இயற்கையாகச் செல்வம் ஒருவனிடமும், அறிவு ஒருவனிடமும் இருப்பதைக் காண்கிறோம், ஆனால், இவை இரண்டையும் ஒருவரே பெற்றிருத்தல் என்பது அருமையுடைய செயலாகும். திரு உடையவரிடம் அறிவு இருத்தல் அருமை. அறிவுடையவரிடத்தில் திரு இருத்தல் அருமையினும் அருமை. இதுபற்றியே நமது பொய்யில் புலவரும், "திருவேறு தெள்ளியராதலும் வேறு" எனக் கூறியுள்ளார். ஆனால், நந்தமிழ் நாட்டின் தவப்பயனால் ஒரு சிலர் திருவும், அறிவும், திறனும் பெற்று வாழ்ந்துள்ளார்கள் என்பதைச் சிலரது வாழ்க்கையைக் கொண்டு அறித்துவருகிறோம். அவர்களுள் சிறந்த புகழும் பெருமையும் கொண்டு நல்வாழ்வு வாழ்ந்தவர் அறியநாதர்.

## விளையும் பயிர்

அரியநாதர் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். குடிக்கக் கஞ்சிக்கும் வழியின்றி, வாடி வறுமையுற்றது அவரது குடும்பம். இத்தகைய குடியில் பிறந்தவர் பள்ளியில் சென்று படிக்க வசதி எவ்வாறு பெற்றிருக்கமுடியும்? தன்மீது இரக்கங் கொண்ட ஆசிரியரிடம் இலவசமாகக் கல்வி கற்றார். தனது உள்ளத்தே எழுச்சியும் நம்பிக்கையும் கொண்டு கால்நடையாக விஜயநகரம் சென்றார். அங்குத் தென்னாட்டுப் பொறுப்பேற்ற மண்டலே

சுரரிடம் கணக்கர் ஆனார், பின்னர் தன் முயற்சியாலும், மேலாளர்களின் அன்பாலும் ஆதரவாலும் முறையே அரண்மனைக் கணக்கராகவும், தளவாயாகவும் ஆகிப் பின்னர் அமைச்சராகவுமானார்.

இறுதியில் தமிழ் நாட்டில் நாயக்க அரசு ஏற்பட்டபொழுது அந்த அரசுக்கு அமைச்சராகவும், தளவாயாகவும் இருந்து நாட்டை நல்வழியில் நடத்திச் சென்றார். நாட்டில் ஏற்பட்டிருந்த குழப்பங்களையும், அது காரணமாக உண்டான அமைதியின்மையும தனது நுண்ணறிவால் போக்கினார். பாளையங்கள் அமைததுப் பாளையர்காரர் மூலம் அரசை வலுபடுத்தினார். இவர் சிறந்த தெய்வ பக்தியுடன் வாழ்ந்தார், இத்தமிழ்மகன் குடிசையிற் பிறந்து தன நல்ல இயல்பினாலும், ஊக்கத்தினாலும் பல உயர் பதவிகளைத் தனக்கு உரியதாக்கித் தமிழ் நாட்டில் என்றும் குன்றாப் புகழ் பெற்றார் என்றால், அன்னார் வாழ்க்கையை அறிந்து போற்றி அவர் வழி நடத்தல் தமிழ் மக்களாகிய நம்மனோரது பெரும் கடமையாகுமல்லவா?

அரியநாதர் ஊர் எது? அவரது பெற்றோர் நிலை என்ன? இளமை வாழ்வு எததகையது? ஏன் விஜயநகரம் சென்றார். அங்கு எவ்வாறு பல உயர் பதவிகளைத் தமக்குரியதாகப் பெற்றார்? தமிழ் நாட்டுக்கு அன்னார் செய்த மிகப் பெருஞ் செயல் யாது? அவரது புகழ் இன்றும் என்றும் அழியா

திருக்கக் காரணம் என்ன? இவைபோன்ற வினுக களுக்கு ஏற்ற விடையை நம் படைத்தலைவர் அரிய நாதரின் வாழ்க்கையில் தெளிவாகக் காண்போம்.

**காஞ்சி நகர்ப் பெருமை**

சான்ருேர் பலரைப் பெற்றுத் தந்து சிறப் படைந்துள்ள நாடு தொண்டை நாடு என்பதை நமது தமிழ் மூதாட்டி ஔவையார், 'சான்ருே ருடைத்துத் தொண்டை நன்ருடு" எனப் பாராட்டி யுள்ளார், தொண்டை நாட்டின் தலைநகரம் காஞ்சி மாநகரம். இந்த நகரம் ஏறத்தாழ 2500 ஆண்டு களுக்கு மேலாக வரலாற்றுப் புகழ் பெற்றுச் சிறந்ததாகும். புத்தர் பெருமான் இந்த நகரத்தில் தங்கி அறம் உபதேசித்தனரென்றும், அசோகரால் பௌத்தர் கோயில் கட்டப்பட்டது என்றும் பௌத்தப்பள்ளிகள் பலவும் இங்குத் தோன்றின என்றும் கூறுவர். அசோகர் காலம் முதல் கி.பி. 7ஆம் நூற்ருண்டுவரை காஞ்சிமாநகரம் பௌத்த சமயத்தினருக்குச் சிறந்த சமய பீடமாக இருந்தது. இந்த நகரம் சமணத்துககும் இடம் தந்தது. அத் துடன் சைவம், வைணவம் என்னும் சமயங்களே யும் வளமுற வளர்த்தது. மாதவியின் மகளான மணிமேகலை இந்த நகரத்தில் அமுத சுரபியைக் கொண்டு அறம் வளர்த்தாள் என அறிகிருேம்.

காஞ்சிமா நகரத்தில் பல்லவர் ஆட்சிக் காலத்தில் சிறந்த வடமொழிக் கல்லூரி ஒன்று இருந்தது. அந்தக் கல்லூரிக்கு இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் வந்து பயின்றுர்கள் வட இந்தியாவில் சிறப்புற்று விளங்கிய "நாலந்தா" பல்கலைக் கழகத்திற்கு தர்மபாலர் என்ற சிறந்த பேராசிரியரை பழங்காலத்திலேயே அனுப்பிய பெருமை நம் தமிழ் நாட்டிற்கு உண்டு. சமய குரவர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் வந்து வணங்கிய சிறப்புப்பெற்ற சிவன் கோயில்களை உடையது. திருமங்கை ஆழ்வார் போன்ற ஆழ்வார்கள் சிலரால் பாடப் பெற்ற பெருமையுடைய வைணவக் கோயில்களையும் தன்னகத்தே பெற்றுத் திகழ்வது. சமண முனிவர்கள் வந்து வணங்கிய சமண காஞ்சியை' உடையது.

காஞ்சிமாநகர் இவ்வாறு சமயத்துறையிலும் கல்வித்துறையிலும் எவ்வாறு மேம்பாடுற்று விளங்கியதோ அதுபோலவே அரசியல் துறையிலும் சிறந்து விளங்கியது முதன் முதலாக இந்நகர் சங்க காலத்து வாழ்ந்த சோழ மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. அதன் பின்னர் ஏறத்தாழ அறுநூறு ஆண்டுக் காலம் பல்லவ மன்னர்களின் தலைநகரமாக விளங்கியது; திரும்பவும் சோழப் பேரரசினரின் தலைநகரமாக முந்நூறு ஆண்டுக் காலம் இருந்தது. அதன் பின்னர்தான் பாண்டியர், ஹொய்சளர் முதலிய

அரசர்கட்க்கு தொண்டை நாட்டின் தலைநகரமாக விளங்கியது. விஜயநகரப் பேரரசு தென்தமிழ் நாட்டுப் பகுதிகளில் பரவிய காலத்திலும் அவ்வரசுக்கு காஞ்சி தலைநகரமாகவே இருந்தது.

**அரியநாதரது பெற்ருேர்**

இவ்வாறு எல்லா நலன்களும் பெற்றுத் திகழ்ந்து விளங்கிய காஞ்சிமா நகரத்துக்கு அருகில் மெய்ப்பேடு என்னும் சிற்றூர் இருந்தது. அச்சிற்றூரின்கண் தாளாண்மையுடைய வேளாளர் பலர் வாழ்ந்து வந்தனர். அங்கு வாழ்ந்த வேளாளர் அனைவரும் சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள். அவர்களுக்குள்ளே பலர் விஜயநகர அரசாட்சியில் உயர்ந்த பதவிகள் பெற்று வாழ்ந்தனர். ஆனல், சிலர் மிக எளிய குடும்பத்தினராக—வறுமை வாய்ப்பட்டவராகவே வாழ்ந்து வந்தனர். அத்தகைய ஏழ்மைத் தன்மையிலுள்ள குடும்பம் ஒன்றில்தான் நமது அரியநாதர் பிறந்தார்.

அரியநாதரின் தந்தையான காளத்தியப்பரும், தாயாரான சிவகாமி அம்மையும் ஒருயிரும் ஈருடலுமாகவும், மணமும் மலரும் போலவும், இசையும் ஒளியும் போலவும், நகமும் சதையும் போலவும் ஒன்றுபட்டு வாழ்ந்தார்கள். ஆனல், வறுமை அவர்களை மிகுதியும் வாட்டியது. அவர்கள் நல்வாழ்வைச் சிதைத்தது. அவர்கள் தாளாண்மை குன்ரு வேளாண் மரபில் தோன்றியதால் பிறரிடம் சென்று அவர்கள் இடும் பணி

104939



கேட்டுத் தங்கள் வறுமைப்பிணியைப் போக்க துணிவு கொண்டாரில்லை. தங்களுக்குள்ள சிறு நிலத்தில் தாங்களே உழுது பயிர்செய்து உள்ள வற்றைக் கொண்டே நல்வாழ்வு வாழ்ந்து வந்தார்கள்.

வறுமை வாய்ப்பட்டும் பெருமை குன்று இப் பெற்றோர்க்குத் தோன்றிய பிள்ளையே நமது அரியநாதர் எனும் அரசாளப் பிறந்த மகன். குழந்தையின் இனிய முகமும், சிவந்த மேனியும், பருத்த உடல் அமைப்பும் பெற்றோர் உள்ளத் தைப் பெரு மகிழ்வடையச் செய்தது. அப்பெற் றோர் தமது வறுமைக்கிடையேயும் தமக்குக் கிடைத்த தவக் குழந்தையை மிகச் செல்வமாக வளர்த்து வந்தார்கள்.

## பிள்ளைப் பருவத்தில் நேர்ந்த அதிசயம்

ஒருநாள் காளத்தியப்பர் வெளியே சென்றி ருந்தார். சிவகாமி அம்மையும் தண்ணீர் கொண்டு வர வெளியில் சென்றார். குழந்தை அரியநாதர் ஒரு கந்தைத் துணியில் தூங்கிக்கொண்டிருந் தார். அப்போது ஒரு நாகம் அங்கு வந்தது. அது வீடு முழுவதும் சென்று இறுதியில் குழந்தை இருந்த இடத்தை அடைந்தது; தன் படத்தை விரித்துக் குழந்தையின் தலைக்கு மேல் பிடித்துக் குழந்தையை உற்று நோக்கியது.

அந்த நேரத்தில் தாயார் சிவகாமி அம்மை யார் தண்ணீர்க் குடத்துடன் உள்ளே வந்தார். நாகத்தைக் கண்டார், தம்மை மறந்து செய்வது

இன்னது என்று உணராமல் அவ்விடத்திலேயே நின்றுவிட்டார். ஆள் அரவம் கேட்ட அந்தப் பெரிய நாகமானது குழந்தையை வலம் வந்து சென்று மறைந்தது. சிவகாமி அம்மையார் அந்தக் காட்சியைக் கண்டதால் உணர்வற்று பட்ட மரம் போல நின்று கொண்டிருந்தார். அந்தச் சமயம் வெளியில் சென்றிருந்த காளத்தியப்பரும் அங்கு வந்தார். அவர் வருகைக்குப் பின்னர்தான் அம்மையார் உணர்வு பெற்றூர். தாம் கண்ட அற்புதக் காட்சியைத் தம் கணவர் காளத்தியப்பரிடம் கூறினர். அது கேட்ட காளத்தியப்பர், "அரிய நாயகம் அரசயோகம் பெறுவான் என்ற கருத்தை நாகம் நமக்கு அறிவித்துச் சென்றது. எல்லாம் ஏகம்பன் அருள்!" என்றூர். அம்மையாரும் அது கேட்டுக் களிப்படைந்தார்.

அரியநாதர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து ஐந்தாவது வயதை அடைந்தபோது பெற்றேர் கவலை பெரிதாயிற்று. காரணம் ஐந்தாம் வயதில் கல்வி தொடங்கவேண்டுமே. கையில் பணமில்லையே என்ற கவலை அவர்களை வாட்டியது. பொருள் இரண்டில் கல்விப் பொருளல்லவா சிறந்தது! செல்வப் பொருள் இல்லாதபோது கல்விப் பொருளும் இல்லாது போய்விடுமே; அரியநாதரின் எதிர்கால வாழ்வு பயனற்றதாகுமே என்று பெற்றேர் வருந்தினர்.

காளத்தியப்பரின் வருத்தங் கண்ட சிவகாமி அம்மை, "ஏகம்பன் திருவருள் இதுவாயின் நாம்

என்ன செய்வது? நம் உழவுத் தொழிலையேனும் நமது சிறுவன் கற்கட்டும். நாம் வேறென்ன செய்ய இயலும்?'' என்றனர். அதுகேட்ட காளத்தியப்பர் தமது துணைவியாருக்குக் கல்வியின் சிறப்பினை எடுத்தியம்புகின்றார்.

**கல்வியின் பெருமை கூறல்**

''கல்வி என்பது கல்லுதல்—தோண்டி எடுத்தல் என்பது பொருள்படும். அறிவைத் தோண்டுதல்—அதாவது படித்து அறிதல் என்பதாகும். அந்தக் கல்வியை நாம் நமது தன்மைக்கேற்ப உத்தியோகத்தின் பொருட்டும், தொழிலின் பொருட்டும், ஒழுக்கத்தின் பொருட்டும் படிப்பதால் அதனை உத்தியோகக்கல்வி, தொழிற் கல்வி ஒழுக்கக் கல்வி என மூன்றாகக் கொள்ளலாம். உத்தியோகக் கல்வியும் தொழிற் கல்வியும் உலக வாழ்க்கைக்கு ஏற்றது ஒழுக்கக் கல்வி அவ்வாழ்கையைச் செம்மைப்படுத்தி நல்வாழ்வு வாழத் துணை செய்யும். இவ்வொழுக்கக் கல்வி கற்றவரைத்தான் சான்றோர் எனக் கூறுவார்கள்.

''கல்விப் பொருள் என்றும் எந்த நிலையிலும் அழியாது நிலைத்து நிற்பது அதை நாம் கண்ணால் பார்க்க முடியாது—உணர முடியும். ஆனால், செல்வத்தைப்போல் அதை எங்கும் வைக்க முடியாது. ஒரு இடத்திலிருந்து மாற்றவும் முடியாது. செல்வத்தைப்போல நெருப்பில் வேகாது, நீரால் அழிக்க முடியாது, பிறருக்குக் கொடுத்தாலும் வளருமே தவிரக் குறையாது. அரச கட்டளை

யால் அதனை அபகரிக்க முடியாது. அது மணற் கேணி எவ்வாறு இறைக்க இறைக்க நீர் ஊற் றெடுக்கின்றதோ அதுபோல பிறருக்கு எடுத் துச் சொல்லச் சொல்ல வளருமேயல்லாது குறை யாது. இக் கல்வியாகிய செல்வத்தைப் பெற்ற ஒருவன் எந்த நாட்டுக்குச் சென்றாலும், எந்த ஊருக்குச் சென்றாலும் தன் தேசத்தில் மட்டும் சிறப்பிக்கப்பெறும் மன்னரைப் போலல்லாது எல்லாவிடங்களிலும் சிறப்பிக்கப் பெறுவான். இத்தகைய சிறப்பினை நல்கும் கல்வியே பொருட் செல்வத்தினும் சிறந்தது என்பதை உணருவா யாக!

## பயிற்சிக்குரிய பருவம்

"இத்தகைய சிறப்பும் பெருமையும் தேடித் தரும் கல்வியைக் கற்க ஏற்ற பருவம் இளமைப் பருவமே என்பதனை நமது முன்னோர்கள், "இளமையிற் கல்" எனவும், "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" எனவும் கூறியுள்ளார்கள். இளமைப் பருவந்தான் பிற செயல்களில் கவனம் செலுத்தாத பருவம்; எதை எதைப் படித்தாலும் 'பசுமரத்து ஆணிபோல்' நன்றாக உள்ளத்தில் பதியும். இத்தகைய சிறந்த பருவத்தில் பெற்றோர் தம் பிள்ளையைப் பள்ளிக்கனுப்பிக் கல்வி கற்று வரச் செய்தல் வேண்டும். ஆதலால், அருந்தவத் தால் பெற்ற நம் பிள்ளையை நீ எவ்வகையில் வழ வைக்க விரும்புகிறாய்? நன்கு யோசித்துச் சொல்வாயாக!"

தம் கணவரது இந் நீண்ட அறவுரையைக் கேட்ட சிவகாமியம்மையால்என்னகூற முடியும்? அவர் விருப்பப்படியே விட்டுவிட்டார்.

## அயலார் உதவி

மெய்ப்பேட்டில் அந்தணர் ஒருவர் இருந்தார்; அவர் சிவனடி மறவாச் செல்வர். சிறந்த பக்தி உடையவர். காளத்தியப்பரும் சிவனடியாருள் ஒருவர். ஆதலால், அவ்வந்தணர் காளத்யப்பர் மீது நீக்க முடியாத பேரன்பு கொண்டிருந்தார். காளத்தியப்பர் மனத்திற்குள்ளே தம் மகனைச் சிறந்த கல்விமானுகச் செய்யக் கையில் பொருள் இல்லையே என்னும் கவலை மிகுதியும் கொண்டுள்ளதை உணர்ந்த அவ்வேதியர், அவருக்குத் தான் உதவ முன் வந்தார். அரியநாதருக்கு இலவசமாகக் கல்வி கற்பிக்க இசைந்தார். அப் பெரியவராகிய அந்தணர் அரியநாதரது புத்திக் கூர்மையைச் சில நாட்களில் கண்டுகொண்டு, பெரியோர் வாக்குப்படி கண்ணெனத் தகும் எண்ணையும் எழுத்தையும் மிகச் சிறந்த முறையில் போதித்து வந்தார். அரியநாதரது கல்வியறிவு வளர்பிறைபோல் வளர்ச்சி பெற்று வந்தது.

மெய்ப்பேட்டுக் கிராமத்து இளைஞர்கள் குத்துச் சண்டை, சிலம்பம், வாள் வீச்சு முதலியவற்றில்நன்கு தேர்ச்சி பெற நல்லதொரு பயிற்சிக் கூடம் அமைத்திருந்தார்கள். அப்பயிற்சிக் கூடத்தில் பல பிள்ளைகள் சேர்ந்து பயிற்சி பெறலாயினர். நமது அஞ்சா நெஞ்சம் படைத்த அரியநாதரும் அப்பயிற்சிக் கூடத்தில் சேர்ந்து நல்ல முறையில் அவ்வித்தைகளைக் கற்றுவரலானுர். அவர் தனது பதினாறுவது வயதிற்குள் உடற் பயிற்சி விளையாட்டுக்கள் அனைத்தும், போர்ப் பயிற்சி விளையாட்டுக்கள் அனைத்தும்

கற்றுத் தேர்ச்சி பெற்ருர். அவ்வூரில் கல்வியி லும், மல்யுத்தம் முதலிய பிற பயிற்சிகளிலும் அவரே முதல்வராக விளங்கிஞர். அவரது நண்பர்கள் அவரைப் பாராட்டித் தங்களது தலைவராகவும் கொண்டு அவரை மதித்து நடந்து வந்தனர்.

**சோதிடக் கலைஞர் சந்திப்பு**

மெய்ப்பேட்டுக் கிராமத்திலுள்ள சிறுவர்கள் ஒருநாள் ஊர்ப்புறத்தே மற்போர், சிலம்பம் முதலியவைகளைப் பயிற்சி செய்துகொண்டிருந் தனர். அப்போது அவ்வழியே நாளும் கோளும் நன்முறையில் கணித்துக் கூறும் ஆற்றல் மிக்க சோதிடக் கலைவல்லாரொருவர் வந்தார். சிறுவர் களின் விளையாட்டினைக் கூர்ந்து கவனித்தார். அச்சிருரின் கூட்டத்தில் நமது அரியநாதரின் விளையாட்டுக்களில் அவரது கவனம் சென்றது. அவர் நமது அரியநாதரை நெருங்கி, "தம்பீ நான் இவ்விளையாட்டில் உன் கைவண்ணம் கண்டேன். உனது எதிர்கால வாழ்க்கையின் மெய்வண்ணம் காண உனது கரத்தைக் கொஞ்சம் இப்படி நீட்டு. அதில் அமைந்துள்ள ரேகைகளைப் பார்க்கலாம்" என்ருர்.

அரியநாதர் பெரியோரிடம் மிக்க மதிப்புடைய வர்; அன்பும் பணிவுகொண்டுநடக்கும் நல்லியல்பு கொண்டவராதலால் அப்பெரியவரைக் கண்ட வுடன் அவரை வணங்கிஞர். பின்னர் தயக்கத் துடன் தனது கையை அவரிடம் காட்டிஞர்.

**எதிர்கால நிலையறிதல்**

அந்தப் பெரியவர் ரேகை சாத்திரத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர். தெள்ளத்தெளிய உள்ளதைக் கூறும் நல்லாற்றல் மிக்குடையவர். உற்று நோக்கினர்; உண்மையை உணர்ந்தார். முதியவரது முகம் பல நிலையையெய்தியது. முடிவில் அரியநாதரைப் பார்த்து, "தம்பீ, நான் சொல்வதைக் கேள். உனக்கு அரச வாழ்வுண்டு. நீ நல்ல பேரரசர் ஒருவரால் நன்கு மதிக்கப்படுவாய் அரசரை ஆக்கும் சக்தி உனக்கு உண்டாக வாய்ப்புண்டு. உனது பெயர் நற்புகழுடன் என்றும் நின்று நிலவும். ஆகையால் நீ இந்தச் சிறு கிராமத்தில் இருத்தல் ஆகாது. உடனே விஜயநகரம் செல். அங்கு அரசரைக் கண்டு அவரது சேவையில் பங்குகொள். அது காரணமாக உனது ஊக்கத்தால் நல்லுயர்வு பெறுவாய். அந்த நாளில் நானே எனது பிள்ளைகளோ உன்னை நாடி வந்து ஏதேனும் உதவி கேட்டால் கொடுப்பாயா? என் வாக்கு உண்மையாயிற்றே என்ற காரணத்தால் நன்றியுடன் இருப்பாயா?" என்று அன்பு கனிந்த குரலில் கேட்டார்.

நமது அரியநாதர், "ஐயா தங்கள் வாக்குப்படி நடந்தால் நான் தங்களை ஒருபோதும் மறவேன். நானே ஏழை......" என்று சற்று வெட்கத்துடன் கூறினர், "தம்பீ, இப்பொழுது நீ ஓர் ஏழை என்பதை நானறிவேன் நான் சொன்னபடி நீ உடனே விஜயநகரம் செல்;

கொஞ்ச நாட்களில் அரச பதவி உன்னை நாடி வரும். நீ அதுபோது என்னை மறந்துவிடாமல் உதவி செய்வாயா ?" என்று மீண்டும் கேட்டார்.

**அரியநாதர் வாக்குறுதி**

"பெரியவரே, தாங்கள் என்மீது ஐயங் கொள்ளுதல் இயல்பே 'பணம் பத்து விதம் செய்யும்', 'நல்லருள் கொண்டோரையும் மாற்ற வல்லது அப்பணம்' என்ற கருத்துக்களும் ஆன்றோரால் கூறப்படுவனவேயாகும். அது குறித்தே என்னைப்போன்ற சிறுவன்மீது தாங்கள் ஐயப்படுகிறீர்கள். ஆனால், நான் தாங்கள் வாக்குப்படியும் நல்வினைப்பயனாலும் விஜயநகரம் சென்று அத்தகைய தகுதி பெறுவேனாகில், எனது சொத்தில் கால் பகுதியை உங்களுக்குத் தருவேன் என்பது உறுதி. இதில் எவ்வித ஐயமும் தங்களுக்கு வேண்டுவதில்லை" என்றார், நம் அரியநாதர்.

இதைக் கேட்ட அச்சோதிடப் பெரியார் "தம்பீ, உனது உறுதி தரும் நல் வார்த்தையை நறுக்கொன்றில் வரைந்து கொடுத்தால் நலமுடையதாகும்" என்றார். உடனே பெரியவர் தந்த ஓர் ஓலையில் எழுத்தாணிகொண்டு நம் அரியநாதர், "எனக்கு அரசயோகம் வந்த காலத்து, இச்சீட்டைக் காட்டுவார்க்கு என் சொத்தில் கால் பாகத்தைத் தட்டாது தருவேன்" என்று எவ்விதத் தயக்கமுமின்றி எழுதிக் கையொப்பமிட்டு பணிவுடன் அப்பெரியவரிடம் கொடுத்துவிட்டு வணங்

கிறார். பின் அரியநாதர், ஐயா, இதுவரையிலும் தங்கள் ஊர், பெயர் முதலிய விவரம் ஒன்றும் தெரிவிக்கவில்லையே" என்றார். அதற்கு அக் கலைஞர், "அவை உனக்குத் தேவையில்லை. எனது வாக்கின் உண்மை பிறகு தெரியும்" என்று கூறிவிட்டு அவ்விடத்தினின்றும் அகன்றார்.

**விஜயநகரப் பேரரசின் தோற்றம்**

அக்காலத்தில் இந்தியா முழுமையும் கஜினி முகமது படையெடுப்பினால் நிலைகுலைந்து இருந்தது. இராஜபுத்திர வீரர்களும் தங்களுககுள் ஒன்றுபட்ட தன்மையில்லாததால் குறுநில மன்னர்களை அடக்கி ஆண்டு, ஒரு பேரரசராக விளங்கத் தவறிவிட்டார்கள். ஆனால், அயல் நாட்டு முஸ்லிம்கள் ஒற்றுமையற்ற மன்னர் சிலரைத் தமக்குத் துணையாகக் கொண்டு நமது இந்திய நாட்டில் முஸ்லிம் ஆட்சியை நிலைநாட்டினார்கள் பிறகு சிறிது சிறிதாக அண்டை அயலிலுள்ள சிற்றரசர்களையும் அடக்கி ஒடுக்கி வட இந்தியா முழுவதையும் தங்கள் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தார்கள்.

கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் முற்பாதியில் முஸ்லிம் அரசர்கள் தக்ஷிணம் என்று சொல்லப்பட்ட தென்னாட்டின் மீது அடிக்கடி படையெடுத்து வந்தார்கள். அதுகாலை தென்னாட்டில் அரசாண்ட யாதவர், ஹொய்சளர், பாண்டியர் முதலாயினோர் விந்திய மலைக்கு இப்பால் இருந்து

கொண்டு முஸ்லிம் படையெடுப்புகளை எதிர்த்து வந்தமையால் தங்கள் நிலை தளர்ந்தனர். எங்கும் கொள்ளையும், குழப்பமும் நிலவி வந்தன, முஸ்லிம் ஆட்சி ஏற்பட்டது. மத மாற்றம் முதலியனவும் நடைபெற்றன. இதைக் கண்ணுற்ற இந்துக்கள் மனம் வருந்தி, இந்து மதத்தைக் காக்கும் நல்லரசு ஒன்றும் தோன்றவில்லையே என்று வருந்தி அதைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற முடிவுக்கும் வந்தார்கள்.

அவ்வெண்ணத்தில் ஊன்றிநின்ற திண்ணிய உள்ளம் படைத்த பெருமக்கள் இருவர். ஒருவர் ஹரிஹரராயர்; மற்றொருவர் புக்கராயர். இருவரும் சகோதரர்கள். துங்கபத்திர ஆற்றின் கரையை அடைந்தனர். தங்களது குருவான வித்யாரண்யர் என்பவரின் நல்லாசி பெற்று அந்நதிக்கரையில் ஒரு நகரத்தை அமைத்து அதற்கு வித்யா நகரம் என்று தமது குருவின் பெயரையே இட்டனர். அதுவே பிற்காலத்தில் விஜயநகரம் என வழங்கலாயிற்று.

பெரு உள்ளமுடைய அந்த இருவரும் அந்நகரில் நல்லதொரு ஆட்சியைத் தோற்றுவித்து அரசாண்டு வந்தனர். முஸ்லிம் ஆட்சிக்குட்பட்ட நாடுகளிலிருந்த மக்கள் சிலர் நாளடைவில் இப்புதிய நகரத்துக்குக் குடிபுகுந்தனர், உடன் பிறப்பாளரான ராயர்கள் இருவரும் தங்கள் வாள் வலி

யாலும், நுண்ணறிவினாலும் நாட்டை நல்ல முறையில் ஆண்டு வந்தார்கள். அந் நாட்டின்கண் உள்ள மக்களும் உள்ள அமைதியுடன் நல்வாழ்வு வாழ்ந்து வரலாயினர்.

**விஜயநகரத்தின் செயற்கையழகு**

விஜயநகரம் இயற்கை அரண்களோடு சிறந்து விளங்கியது. நகரைச் சூழ்ந்து மலைகளும் காடுகளும் இருந்தன. நகரத்தின் நடுவே துங்கபத்திரை பாய்ந்தோடிற்று. அந்த நகரத்தை ஆண்ட அரசர்களுள் கிருஷ்ணதேவராயர் சிறப்புடனும் புகழுடனும் விளங்கியவராவார். இவர் காலத்தில்தான் விஜயநகரம் மிக உயரிய நிலையில் விளங்கலாயிற்று. அந்த நகரத்தைக் கண்ணுற்ற இத்தாலிய அறிஞர் ஒருவர். "விஜயநகரம் போக பூமி; துங்கபத்திரையின் வடகரையில் கோட்டையும் 'ஆனைகுந்தி' நகரமும் அமைந்திருக்கின்றன. தென்கரையில் விஜயநகரம் தெளிவுடன் விளங்குகிறது. நாற்புறமும் பாறைகளும் குன்றுகளும் மிகுதி. அவற்றைக் கல் மதில்கள் பிணைத்து நிற்கும், நகரத்தின் பரப்பு எழுபது கல்லுக்குக் குறையாது. இந்த எல்லைக்குட்பட்ட பெரிய நகரத்தில் பளிங்குக் கற்களின் மீது பாயும் கால்வாய்களை எங்கும் காணலாம்" என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

நகரம் முழுவதிலும் ஆகாயத்தைத் தொடும் மாடமாளிகைகள், மக்கள் மகிழ்ந்து உலாவ பூங்காக்கள் பொலிவிடன் விளங்கின. சிற்பச் சாலைகள், ஓவியக்கூடங்கள், மனத்தை ஒரு வழிபடுத்தும் திருக்கோயில்கள், கல்வி அளிக்கும் பட்டிமண்டபங்கள், உடற்பயிற்சிக்கூடங்கள், நாடக நடன அரங்குகள், பல்கலைக் கழகங்கள் அந்நகரத்தைப் போக பூமி ஆக்கின.

அரண்மனை கண்ணையும் கருத்தையும் கவரத் தக்க அழகுடன் விளங்கியது. அரசரது ஆலோசனை மண்டபம், கொலு மண்டபம், நடன மண்டபம், நாடக மேடை, அரசமாதேவியார் வாழ்த அந்தப்புர மாளிகைகள், பூஞ்சோலை, செய்குன்று, செய்குளம், படைக்கலக் கொட்டில்கள் முதலிய பலவகைக் கட்டடங்களையும், விடுதிகளையும் தன்னகத்தே கொண்டிருந்த அவ்வரண்மனை அனைவரும் காணத்தக்க காட்சிக்கூடமாய் விளங்கிற்று.

**விஜயநகர பொது அமைப்பு**

அந்த நகரத்தில் சமணக் கோயில்கள் இருந்தன பம்பாதீசுவரர் கோயிலில்சிற்ப வேலைப் பாடுகள் மிகுந்திருந்தன. நகரத்தின் தென்கிழக்கில் மால்ய வந்த மலை முகட்டிலுள்ள இரகுநாத

சுவாமி கோயில் மிக்க அழகுடன் அமைந்த ஒன்ருகும். துங்பத்திரைக் கரையில் அன்று ஒரே கல்லில் செய்யப்பட்ட இரதமும் ஒன்று இன்றும் இருக்கிறது. அதன் உருளை, மேல்தட்டு, விதானம் முதலியலவ அக்கால சிற்பிகளின் கைத்திறத்தை விளக்கத்தக்கவை. அரண்மனையில் அமைந்த இராமசாமிகோயில் மதிற் சுவர்களில் வீரர் உருவங்களும் குதிரை, யானை வரிசைகளும் ஒன்றன்கீழ் ஒன்ருக, தெளிவாகத் தெரியும்படி செதுக்கப்பட்டன

வாலி, சுக்கிரீவன் ஆண்ட கிஷ்கிந்தை என்ற இடத்தில் அமைந்த நகரமாதலால், அந் நகரத்தில் எங்கும் அனுமார் கோயில்கள் காணப்பட்டன. பாறைகளில் அனுமார் உருவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. சுற்றியுள்ள மலைகளில் ஆயிரக் கணக்கான குரங்குகள் வாழ்ந்தது தம் பழைமையை மெய்ப்பித்துக்கொண்டிருந்தன; இன்றும் இருக்கின்றன.

அரண்மனையை அடுத்து எதிர எதிராக பல் வேறு அங்காடிகள் அமைந்திருந்தன. அவற்றில் நவரத்தினங்களும், நகை வகைகளும் விற்கப்பட்டன. ரோஜா மலர்கள் அன்ருடம் மிகுதியும் விற்பனையாயின. அரண்மனைக் கொலு மண்டபத்தைக் கண்ணுற்ற அயல்நாட்டு யாத்ரிகரும் வியந்து பாராட்டியுள்ளனர்.

ஒரு பக்கம் ஆடல் பாடல் நடக்கும், மற்றொரு பக்கத்தில் மறைநூல்வல்லவர் தம் வாக்குவன்மை காட்டி நிற்பர். வேறொரு பக்கம் அயல் நாட்டிலிருந்து அரசரைக் காண வந்துள்ள தூதுவரும் காத்து நிற்பர். இவரது நாட்டைக் காக்க துங்கபத்திரை முதல் குமரி வரை அமைந்துள்ள சிற்றரசர்களின் தூதுவர்கள் ஒரு பக்கம் காத்து நிற்பர்.

## ஆட்சியாளர் சிறப்பு

இவ்வாறு எல்லா நலன்களுடன் கூடிய விஜய நகரத்தைத் தலைநகராகக்கொண்ட அரசர்கள் தங்களது தோள் வலியாலும், வாள் வலியாலும், படை வலியாலும் தென்னிந்தியா முழுவதையும் தங்கள் ஆட்சியின்கீழ் அமைத்து ஆண்டு வந்தனர். அவர்க்கு, "மஹாராயர், மஹாராயலு" என்ற பட்டப்பெயர்கள் பெற்ற கருநாடகத்தெலுங்கு மன்னர்கள் பேரரசர்களுக்கு அடுத்தபடியாக இருந்து மாகாணங்களை ஆண்டு வந்தனர். நடு அரசாங்கத்துடன் மாகாண அரசாங்கம் இணைந்து நின்றது.

பேரரசரிடம் பல இலட்சம் போர்வீரர்கள் இருந்தனர்; பல ஆயிரக்கணக்கான யானைகள் இருந்தன; பல ஆயிரக்கணக்கில் குதிரைகள் இருந்தன எனவே பேரரசர் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்னும் முப்படைகளையும் உடையவராக இருந்தார்.

முதலாம் புக்கராயர் புதல்வரான கம்பண உடையார் அப்படைகளின் வன்மை கொண்டு சேர—சோழ—பாண்டிய நாடுகளை வென்று தம தாக்கிக்கொண்டு தென்னாட்டு மஹா மண்டலேசு வரராக இருந்தார். கிருஷ்ணதேவராயர் காலத்தில் தென்னாட்டு மஹா மண்டலேசுவரர் நாகம நாயக்கர் என்பவர்.

**கிருஷ்ணதேவராயர்**

இவர் தனது இருபதாவது ஆண்டிலேயே பேரரசர் ஆனார். சிங்கக்குட்டிக்கு வீரம் இயல்பாகவே வளருவதுபோல, இவருக்கும் அரசருக்குள்ள அஞ்சாமை, வீரம், அரசியல் அறிவுஆகிய நற்பண்புகள் இயல்பாகவே அமைய வளர்ந்து வரலானார். வள்ளுவர் வாக்குப்படி இவரிடத்தில் அரசருக்குள்ள இலக்கணம் அனைத்தும் விளக்கம் பெற்றிருந்தன. தூங்காமை, கல்வி, துணிவுடைமை ஆகியவற்றைப் பெற்று விளங்கினார். தனது பேரரசுக்கு அடங்காமல் இருந்த சிற்றரசர்களை அடக்கித்தனது ஆண்மையைக்காட்டியவர். வடக்கே பேரரசின் பிறவிப் பகைவராக இருந்து வந்த அஹமத்நகர், பீஜப்பூர், கோல்கொண்டா, பிதார், பீரார் நாடுகளின் முஸ்லிம் மன்னர்களையும் நடுக்கங்கொள்ளச் செய்தவர்; இவருடைய வெற்றிக்கும், புகழுக்கும், நல்லாட்சிக்கும் உறுதுணைக் காரணமாக இருந்தவர் அப்பாஜி என்ற திம்மரசு என்னும் நல்லமைச்சரே ஆவார். நமது கிருஷ்ணதேவராயர் போர்ச்சுகீசியருக்கு உதவிபலசெய்து, அவர்களைக் கோவாவில் அன்று

நிலைக்க வைத்தார். போர்ச்சிகீசியர்கள் எழுதி வைத்துள்ள செய்திகளிலிருந்து இராயரது வரலாறு, ஆட்சி முறை, பேராற்றல் முதலியவற்றைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

கிருஷ்ணதேவராயர் பெரும் புலமை உடையவர். தனது அவையில் நல்லறிவும் ஆற்றலும் மிக்க பெரும்புலவர்கள் எண்மரைக் கொண்டிருந்தார். அவர்கள் ‘அஷ்டதிக்கஜங்கள்’ எனப்பட்டனர். அவர்களின் கூட்டுறவினுல் பேரரசர் பெரும் புலவராகி, தெலுங்கில் ஆண்டாள் வரலாற்றை அழகுறப் பாடியுள்ளார். இராயரின் மகள் இலட்சுமி தேவியும் தெலுங்கில் சிறந்த புலமை உடையவர்.

இவ்வாறு அறிவாலும், திருவாலும், ஆண்மையாலும் அசைவிலா இசைபெற்றுத் திகழ்ந்த கிருஷ்ண தேவராயர் கி.பி. ஆயிரத்து ஐந்நூற்று ஒன்பதாம் (509) ஆண்டு முதல் ஆயிரத்து ஐந்நூற்று முப்பதாம் (1530) ஆண்டுவரை விஜய நகரப் பேரரசிற்குத் தலைவராக இருந்தார். இவரது நல்லாட்சிக் காலத்தில்தான் நமது அரியநாதர் அங்குச் செல்ல வேண்டுமென நிமித்திகர் கூறினுர்.

## விஜயநகரத்திற்கு புறப்பாடு

அரியநாதர் சோதிடரை விட்டுப்பிரிந்து வீடு சென்றதும் உற்ற செய்தியைப் பெற்ரேரிடம் உரைத்தார். அக்காலத்தில் தென்னுடு முழுவதும் இராயர் ஆட்சியின்கீழ் இருந்தது. அதனுல்மன்னர்

முதல் மக்களில் சிறு உத்தியோகம் பார்ப்பவர் வரை அனைவரும் அன்றைய அரச மொழியாக விளங்கிய தெலுங்கு மொழியை நன்ருக அறிந்திருந்தார்கள். நமது அரியநாதரும் இராயரிடம் சென்று பணி புரியவேண்டுமானுல் இன்றியமையாது தெலுங்கு மொழியை அறிந்துகொள்ள வேண்டியதாயிற்று. உத்தியோகத்திலிருந்த எல்லோரும் தெலுங்கு மொழியை நன்ருகக் கற்றிருந்ததால் நமது அரியநாதர் மிக எளிதில் தனது நுண்ணிய அறிவால் அவர்களிடம் தெலுங்கு கற்றுக்கொள்ள வசதி இருந்தது. ஆகவே நன்முறையில் தெலுங்கைக் கற்று, எழுதவும் பேசவும் நல்லாற்றல் பெற்ருர். அவரது பெற்ருேர்கள் தங்களது முதுமையில் தங்களது தவப்புதல்வரைப் பிரிந்து இருப்பது குறித்து வருந்தினர். அத்துடன் தம் எளிய மகனை நெடுந்தொலைவுள்ள விஜயநகரத்திற்கு அனுப்ப மனம் துணியவில்லை; வருத்தமுற்றனர். அசைவிலா ஊக்கமுடைய அரியநாதர் தனது பெற்ருேரை நோக்கி, “முன்னறி தெய்வமாக விளங்கும் தாய் தந்தையரே! நான் உங்களுடன் இருந்து மிகுந்த வறுமையைத்தானே பெறமுடியும். சோதிடர் வாக்குப்படி விஜயநகரம் சென்ருல் நல்ல வாய்ப்பினைப் பெறலாம் அல்லவா? அதனுல் நமது குடும்பம் நல்வாழ்வு வாழ வழி உண்டாகுமல்லவா? பெரும் பதவி பெருவிடினும், சிறு பதவி பெற்றேனும் உங்களுக்கு உதவி செய்யத் தவறேன். ‘திரைகடலோடியும் திரவியம் தேடு’ என்ற முதுமொழி

வழங்கும் இத் தமிழ் நாட்டில் வாழும் தாங்களா என்னைப் போகவிடாது தடை செய்வது? இது அறமாகாது. தாங்கள் மனம் துணிந்து நல்லாசி கூறி என்னை அனுப்புங்கள்" என்று உள்ள முருகத் தனது பெற்றோரிடம் மன்றாடி வேண்டினார்.

எண்ணிய எண்ணியாங்கு எய்தவல்ல திண்ணிய உள்ளங்கொண்டுள்ள நமது அரியநாதரின் அன்புச்சொற் கேட்ட பெற்றோர்கள் அவரது விருப்பத்திற்கு உடன்பட்டனர். ஆசிரியர் குறித்த நல்ல நாளிலே அன்னை—தந்தை—குரு ஆகியோரின் திருவடிகளில் முடிபட வணங்கி நின்றார். மூவரும் அரியநாதரின் பிரிவை எண்ணிக் கலக்கமும், வரவிருக்கும் பேற்றை எண்ணி மகிழ்வும் கொண்டு மனப் போராட்டத்திற்குள்ளானார்கள். ஆனால், திட்ப உள்ளமுடைய அரியநாதரின் அகமும் முகமும் மலர்ந்திருத்தலைக் கண்டு மன ஆறுதல் பெற்று அவருக்கு நல்வாழ்த்துக் கூறி அனுப்பினர்.

**அரியநாதரின் அஞ்சாமை**

அரியநாதர் பதினாறு வயதான இளைஞர். நல்ல முறுக்கேறிய உடற்கட்டுடன், அகன்ற மார்பும், விரிந்த தோளும், அஞ்சாமையை அணியாகக் கொண்டுள்ள உள்ளமும் பெற்றவர். கூரிய பார்வையை உடைய பரந்து அகன்ற விழிகள், துணிவுடைய உள்ளம் கொண்ட அவர் தனிப்பயணம் செல்ல அஞ்சவில்லை. தனது

சிலம்பக் கழியையும், உடைவாளையும் எடுத்துக் கொண்டார். தன்னுடைய பெற்ரோர், குரு, சோதிடர் ஆகியவர்களின் நல்ல உள்ளங்களி லிருந்து கிடைத்த வாழ்த்துரைகளைத் தனக்குத் தோன்ருத் துணையாகக்கொண்டு புறப்பட்டார்.

பழங்காலத்தில் விஜயநகரம் செல்வது எளி தல்ல ; ஒழுங்கான பாதை எதுவும் அமைந்து இருக்கவில்லை ; நெடுந்தூரத்தை கடக்க இன் றைய நாட்களைப்போல அந்நாட்களில் வண்டி முதலிய வசதிகள் இலலை. எனவே நமது அரிய நாதர் பெற்ரோர் கொடுத்த உணவையும், சிறு பொருளையும் கையில் கொண்டு ஏகம்பவாணன் திருவருளை மனத்தால் வழுத்திக்கொண்டு கால் நடையாகவே புறப்பட்டார்.

### வழியில் நேர்ந்த இடர்பாடுகள்

கையில் கொண்டு சென்ற உணவும் கரைந்து, சிறு பொருளும் சில நாட்களில் செல வழிந்துவிட்டது. இளைஞர் அரியநாதர் பின்னர் பட்ட துன்பம் கூறுந்தரத்ததன்று. அவரது துன்பம் கண்ட வழிப்போக்கர் சிலர் அவருக்கு உணவு கொடுத்து உதவினர். அவர் தங்க நேர்ந்த ஊர்களில் நன்மக்கள் சிலர் உண்டி கொடுத்தும் உதவினர். பசித் துன்பமுற்ற போது எதிர்பாராத வகையில் உணவு கிடைத்த போதெல்லாம் நமது அரியநாதர் கச்சி ஏகம்பனை எண்ணித் துதித்தார்.

"அடுக்கி வரினும அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுகட் படும்"

எனும் வள்ளுவர் வாக்குப்படி அரியநாதரை வாட்ட வந்த பசி, நோய் முதலியன தாமே துன்புற்று மறைந்தன. இவ்வாறு பல துன்பத்திற்கிடையே நடந்து சென்று ஒரு நாளில் தான் விரும்பிய இலட்சிய நகரமான விஜயநகரத்தை அடைந்தார், நம் அரியநாதர். அவர் உள்ளம் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையேயில்லை.

**விஜயநகரத்தில் அரியநாதர்**

நமது அரியநாதர் விஜயநகரத்தின் சிறப்பை முன்னமேயே வணிகர் மூலம் கேட்டு அறிந்தவர்; ஆகையால் அந்நகரத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற அவாவினுல், நகரத்தின் மையத்தில் அமைந்துள்ள அரண்மனை, எதிரில் உள்ள கடைத்தெருக்கள், அரசியல் அலுவலர் வாழ்ந்த பெருந்தெருக்கள், நடன, நாடக, இசை அரங்குகள், உடற் பயிற்சி, போர்ப் பயிற்சி. கல்விப் பயிற்சிச் சாலைகள், மருத்துவச்சாலைகள் முதலியவற்றை முதலில் சென்று பார்வையிட்டார். இறுதியில் அழகிய ஆலயங்களையும் கண்டார். இவ்வாறு பேரழகுடன் விளங்கும் நகரத்தைக் கண்டுகொண்டே துங்கபத்திரை ஆற்றங் கரையை அடைந்தார்.

ஆற்றங்கரையில் அமைதியான சூழ்நிலையில் அமர்ந்த நமது அரியநாதர் தனது வருங் கால நிலையைப்பற்றி எண்ணத் தொடங்கினுர்.

திடீரென்று ஒரு சிறந்த எண்ணம் அவர் மனத்தில் உதித்தது 'விஜயநகரப் பேரரசானது துங்கபத்திரை முதல் குமரிவரை பரந்த நிலப் பரப்பை உடையது. அதன்கண் அமைந்த நமது தமிழகம் தனிப்பட்ட மண்டலம். அதனை ஆளும் இப்பேரரசின் பிரதிநிதியாக உள்ள மகாமண்டலேசுவரர் யார் என்பதைக் கண்டறிந்து, அப் பெருமகனுரிடம் நமது குறையை எடுத்துக்கூறி வேலைபெற முயலுவோம்!' என்பதே அவர் கொண்ட எண்ணம்.

எனவே, புத்துணர்ச்சி உடையவராக எழுந்தார்; அரண்மனைப் பக்கம் சென்றார்; அங்குள்ள தக்கார் சிலரைக் கண்டு, தெற்கு மகாமண்டலேசுவரர் பெயரையும் இடத்தையும் கேட்டறிந்தார்; உடன் விரைந்தார் அம்மாளிகை நோக்கி. தெற்கு மகாமண்டலேசுவரர் நாகம நாயக்கர் பேரரசுக்கு அடுத்த நிலையில் சிறப்பிக்கப்படுபவர்; சிறந்த போர்வீரர்; சேனைத் தலைவர்; அரசியல் அநுபவம் நிறைந்த அறிஞர். பேரரசர் மிக்க சிறப்போடு அவரை நடத்தி வந்தார். அத்தகைய சிறப்புடைய பெரியவரைக் காணவே நமது அரியநாதர் அவரது அரண்மனை நோக்கி நடந்தார்.

**நாகம நாயக்கரைச் சந்தித்தல்**

அரியநாதர் நாகம நாயக்கர் மாளிகையை அடைந்தார். காவலன் அவரை நாயக்கரிடம் கொண்டுபோய்நிறுத்தினன். இளைஞர் மண்டலேசுவரரைக் கண்டதும் கைகூப்பி வணங்கி அடக்கத்துடன் நின்றார். நாகமர் நமது அரியநாதரைப்

பார்த்தார். அவரது மலர்ந்த முகம் நாகமரை வசீகரப்படுத்தியது. அரியநாதர் தன்னுடைய வரலாற்றை உருக்கமாக எடுத்துரைத்தார். கூறுங்கால் வழியில் அவர் பட்ட துன்பங்களைக் கேட்ட நாகமர் உள்ளம் உருகினார். "பதினாறு வயதுடைய சிறுவன் வறுமைப் பிணியைப் போக்க நெடுந்தூரம் நடந்து வந்துள்ளான்" என்பதை எண்ணவே இளைஞர்மீது மிகவும் இரக்கம் கொண்டார்,

தமிழ்நாட்டைச் சார்ந்த ஒரு சிறுவன், பிற மொழியாகிய தெலுங்கைத் தெளிவான முறையில் பேசியதைக் கண்ட நாகமர் அடைந்த வியப்புக்கும், மகிழ்ச்சிக்கும் அளவேயில்லை. இவனுக்கு ஏற்ற வேலை எது என யோசித்தார். இறுதியில் இளைஞர் அரியநாதரைத் தம்மிடமே கணக்கராக அமர்த்திக்கொண்டார்.

**நாகம நாயக்கரின் மகப்பேறு**

நாகமநாயக்கர் நீண்ட நாட்களாக பிள்ளையில்லாது வருந்தினார். இல்லாளுடன் பல புனிதத் தலங்களுக்கும் சென்று நன்னீராடினார். இறுதியில் காசி நகரை அடைந்து, கங்கையில் மூழ்கி விசுவநாதப் பெருமானை வேண்டி வரங்கிடந்தார். அப்பெருமான் அருளால் ஆண் மகவு ஒன்று பிறந்தது. அப்பிள்ளைக்கு விசுவநாதன் எனப் பெயரிட்டு அருமையாக வளர்த்து வந்தார். தம் தகுதிக்கு ஏற்ப போர்ப்பயிற்சியையும் அரசியல் கல்வியையும் புகட்டச் செய்தார். விசுவநாதரை

பதினைந்தாம் ஆண்டில் பேரரசர் கிருஷ்ணதேவ ராயரிடம் அணுக்கப் பணி செய்துவர அனுப்பி விட்டார்,

விசுவநாதர் அழகுமிக்கவர்; அறிவாற்றலும், ஆண்மையும் உடையவர்; குதிரை, யானை ஏற்றங் களில் சிறந்தவர். மற்போர், சிலம்பம் முதலிய வற்றிலும் சிறந்து விளங்கினுர். உண்மை, அன்பு, அடக்கம் முதலிய நற்பண்புகள் உடைய வர். இத்தகைய சிறந்த வீரரைப் பேரரசர் தமது உறவினராகவே கருதி நடத்தி வந்தார்.

**கணக்கர் அரியநாதரது திறமை**

கணக்கராக அமர்ந்த அரியநாதர் தம் வேலையை செம்மையாக செய்துவந்தார். நாக மரிடம் இருந்த கணக்கர்கள் கணக்கில்தவறுகள் செய்வது இயல்பாயிருந்தது. ஆனல், இளைஞர் அரியநாதருடைய கணக்கில் பிழையென்பது ஏற்படுவதில்லை. இதையறிந்த நாகமர் மிக்க மகிழ்ச்சிகொண்டார்; மற்றையோரைக் கடிந் தார். சிலநாட்களுக்குப் பின் அனைவர் கணக்கு களும் பிழையறக் காணப்பட்டன! அரியநாதர் நாகமர் தம்மைப் புகழ்ந்து, மற்றவர்களை இகழ்ந் ததை விரும்பவில்லை. எனவே அன்ருடம் கணக்கு முடிக்கும் நேரத்தில் எல்லாக் கணக்குகளையும் தாமே சரிபார்த்து ஒழுங்கு செய்துவந்தார். இதனையுணர்ந்த நாகமர் அரியநாதர்மீது பேரன் பும் பெருநம்பிக்கையும் கொண்டு அவரைத் தமது பிள்ளையாகவே நினைத்து அவருக்குப் பலநன்மை கள் செய்வந்தார்.

அரியநாதர் ஓய்வு நேரத்தில் பழைய விளை யாட்டுக்களைப் பயிலலானார். அதைக் கண்ட நாகமர் தமது அருந்தவப்புதல்வன் விசுவநாதரை அவரோடு இணைத்தார். ஒன்றுபட்ட இளைஞர்கள் இருவரும் வாழ்நாள் முழுவதும் உள்ளத்தால் ஒருவராகவும், உடலால் இருவராகவும் இருந்து நல்வாழ்வு வாழ்ந்தார்கள். இரட்டை இளைஞர்கள் போர்ப்பயிற்சியில் பண்பட்ட புலமை எய்தினர். இருவரும் கண்டோர் உள்ளம் கவரத்தக்க அழகு மிக்கவர் இருவருக்கும் நல்ல உடற்கட்டு; நல் லொழுக்கம், தெய்வபக்தி ஆகியவை அவர்கள் பால் சிறந்து விளங்கின.

## பேரரசர் அன்புக்குப் பாத்திரராதல்

ஒருயிரும் ஈருடலுமாக இணைந்த இளைஞர் இருவரின் இலக்கணத்தைக் கண்ட நாகமரும் அவர் மனைவியாரும் அடைந்த மகிழ்ச்சி அள விடற்கரியது. பேரரசரிடம் சிறு பணி புரியும் விசுவநாதர் தமது உயிர் நண்பரான அரியநாத ரைப்பற்றி வாய்ப்பு ஏற்படும்போதெல்லம் பேரரசரிடம் சொல்லிவந்தார். பின்னர் விசுவ நாதர் ஒரு நாள் அரியநாதரைப் பேரரசரிடம் அழைத்துச் சென்றார். தமிழ் இளைஞரின் முகப் பொலிவையும், உடல் அமைப்பையும் கண்டு மகிழ்ந்தார் பேரரசர். தமிழ் இளைஞரின் வரலாற் றைக் கேட்டு அவர்மீது இரக்கங்கொண்டார். நம்து அரியநாதர் அன்றுமுதல் பேரரசரின் அன்புக்கும் உரியவரானார்.

**அரண்மனைப் பணி**

ஒருநாள் அரசவையில் பிரபுக்கள், அமைச்சர்கள், சேனைத் தலைவர்கள் சூழ பேரரசர் கிருஷ்ண தேவராயர் சிறப்புடன் அமர்ந்திருந்தார். பக்கத்தில் விசுவநாதர் நின்றுகொண்டிருந்தார். ஒரு பக்கம் தூணைப் பற்றிக்கொண்டு அரியநாதரும் நின்றுகொண்டிருந்தார். அரசகாரியங்கள் கவனிக்கப்பட்ட பின் பேரரசர் எல்லோரையும் பார்த்து, "அவையோர்களே! இன்று நாம் அரண்மனைக் குளத்தில் நீராடும்பொழுது அழகிய தாமரை மொட்டு ஒன்று காணப்பட்டது. அது முக்கால் சாண் நீளம் இருக்கும். அதன் தண்டு முழுவதும் தண்ணீருக்குள் இருந்தது. மொட்டு மாத்திரம் மேலாக நின்றது. நாம் குளத்தில் குதித்த அதர்ச்சியால் அந்த மொட்டு மூன்றே முக்கால் சாண் தூரம் பின் சென்றது. அப்பொழுது அதன் தலையும் நீர்மட்டத்திற்குச் சமமாக நீருக்குள் மறைந்து விட்டதனால் அம்மொட்டு நின்ற இடத்தில் குளத்தின் ஆழமென்ன ?" என்று கேட்டார். அவையிலிருந்த பலரும், "இதற்கு யார் விடை கூறமுடியும் ?" என்றெண்ணித் திகைத்தனர் வேறு சிலர் முணுமுணுத்தவண்ணமே கணக்குப் போட்டுப் பார்த்தனர். இக்காட்சியைக் கண்ட பேரரசர் கலகலவென்று நகைத்தார். அவையோர் ஒன்றும் புரியாது விழித்தனர். ஆனால் நமது அரியநாதர், "பேரரசர் அனுமதித்தால் அடியேன் அதற்கு விடை தெரிவிக்கக் காத்துள்ளேன்" என்று

பணிவுடன் தெரிவித்தார். அவையோர் கண்கள் அரியநாதரை வியப்புடன் நோக்கின.

"பேரரசர், "யார் அது, அரியநாதனு? முன்னே வந்து கூறு, கேட்போம்!" என்றனர். இளைஞர் அரியநாதர் அரசரை வணங்கி, முன் வந்து, "தாமரை மொட்டு இருந்த இடத்தில் குளத்தின் ஆழம், அஃதாவது அத்தாமரைத் தண்டின் நீளம் தங்கள் பக்கலில் நிற்கும் விசுவ நாத நாயக்கர் உயரமேதான்" என்று பணி வுடன் பகர்ந்தார். வியப்படைந்த பேரரசர் விசுவ நாதர் பக்கம் திரும்பி, "விசுவா, உன் உயர மென்ன ?" என்று கேட்டார். "அரசே! ஒன்பது சாண்" என்று பதில் கூறினுர் விசுவநாதர்.

**அரண்மனைக் கணக்கராதல்**

கணித வல்லுநர் கணக்குப் பார்த்து, 'சரி" என்றனர். பேரரசர் கட்டளைக்கிணங்கி குளத்தி லுள்ள அத்தாமரைத் தண்டினை அளந்துவந்து "குளத்தின் ஆழம் ஒன்பது சாண்" என்முன் ஒருவன். பேரரசர் வியப்பும் மகிழ்ச்சியுங் கொண்டு அரியநாதரைப் பார்த்து, "நீ சொன் னது சரி! விசுவநாதன் உயரத்தை எப்படி அளந் தாய் ?" என்று கேட்டார், "பெருமானே, அடி யேன் உயரம் எட்டரைச் சாண், விசுவநாதர் என்னைவிட அரைச் சாண் அதிக உயரம் உடைய வர். கண் அளவாததா கை அளக்கும் ?" என்று பதில் அளித்தார் அரியநாதர். மகிழ்ச்சி கொண்ட பேரரசர் நாகமரைப்பார்த்து, "அரியநாதன் நமது

அரண்மனைக் கணக்கனாக இருக்கட்டும்'' என்றார். நாகமரும் ஒப்புக்கொண்டார். அதுமுதல் அரிய நாதரிடம் பேரரசர் அன்பும், மதிப்பும் கொண்டவ ரானார். நமது அரியநாதர் கணிதத்தில் வல்லவர் என்பதை அரண்மனை அலுவலர் அனைவரும் உணர்ந்து, அவரிடம் மரியாதையாக நடந்து வந்தனர்.

**அரியநாதரது நுண்ணறிவு**

விஜயநகரத்தில் ஆண்டுதோறும் நவராத்திரி விழா கொண்டாடப்படுவது வழக்கம். அவ் விழாவின் இறுதிநாளில் எருமைக்கடா ஒன்றைப் பலியிடுவார்கள். அரியநாதர் அரண்மனை அலு வலில் சேர்ந்த ஆண்டில் பலிக்காகக் கொண்டு வரப்பட்ட அந்த எருமைக்கடா மிகவும்கொழுத்து இருந்தது. அதன் கொம்புகள் முதுகின் இரு பக்கங்களிலும்வால்வரை நீண்டுவளர்ந்திருந்தன. பலிகொடுக்கும்போது ஒரே வீச்சில் உடல் வேறு தலை வேறாக வெட்டித் தள்ளுதல் வேண்டும். என்பது விதி. அதில் தவறினால் அது அபசகுண மாகக் கருதப்படும். ஆகையால் அரசர் மிகுந்த கவலைகொண்டார். மற்றையோரும் செய்வதறி யாது திகைத்தனர்.

அவ்வமயம் அரியநாதர், 'பலிபீடத்தின் அரு கில் ஒரு குழி வெட்டி, அதில் பசும்புல்லைப் போட வேண்டும் என்றும், அவ்வெருமையின் கால் களுக்கு இடையில் அக்குழி அமைந்திருத்தல் வேண்டும் என்றும், புல்லைத்தின்னுதற்கு எருமை

தன் கழுத்தை வளைத்துக் குனிந்து குழிக்குள் தலையை நீட்டும்; அப்பொழுது அதன் கொம்புகள் விலகி நிமிர்ந்து நிற்கும்! அச்சமயத்தில் ஒரே வீச்சில் தலைவேறு, உடல்வேருக வெட்டிவிடலாம்' என்று யோசனை கூறினர், அவரது யோசனைப்படி எருமை நிறுத்தப்பட்டு விசுவநாதர் வீசிய ஒரே வீச்சால் அதன் தலைவேறு முண்டம் வேருக ஆயிற்று.

### உயர்பதவி அடைதல்

ஒரு முறை அரசாங்க வரவு செலவுக்கணக்குகளைக் கணக்கர்கள் கூடி ஆராய்ந்து பார்த்து இருப்புக் கட்ட முற்பட்டனர். நாட்கள் பல சென்றும் சரியாக கணக்கை முடிக்க இயலவில்லை. கணக்கை முடித்து அரசரிடம் ஒப்புவிக்க வேண்டிய நாளும் நெருங்கிவிட்டது, அந்நாளுக்கு முதல்நாள் அரியநாதர் அக் கணக்கைக் கண்ணுற்றுச் சரிசெய்து முடித்தார். கணக்கர் அனைவராலும் ஒழுங்கு செய்து முடிக்க இயலாத கணக்குகளை அரியநாதர் குறை தவிர்த்துச் சரி செய்தார் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட அரசர் அவரை அரசாங்கத்தின் தலைமைக்கணக்கராக நியமித்தார்.

### தளவாய் அரியநாதர்

அரியநாதர் மற்போர் செய்வதிலும் பெருவீரர் என முன்னரே அறிந்தோம். ஒருநாள் விஜயநகர அரசரிடம் வடநாட்டு மல்லன் ஒருவன் வந்து

தான் எட்டுத் திசையிலும் வெற்றி பெற்றுவிருது கள் அடைந்த செய்தியைத் தெரிவித்து, விசய நகர மல்லர்களிடமும மற்போர்செய்து பரிசுபெற விழைவதைத் தெரிவித்தான். விஜயநகர மல்லர் கள் அவ்வடநாட்டு மல்லனின் மற்போர்த் திறத் திற்கு அஞ்சி, அவனுடன் மற்போர் செய்ய இணங்கவில்லை. விஜயநகர அரசரான இராயர் இம்மல்லனை எதிர்க்கத் தமது அவையில் எவரும் இல்லையென்றால், தமது அரசு வலிமை உடைய தாக ஆகாது என மனம் வருந்திக்கொண்டிருந் தார். இதனை உணர்ந்த அரியநாதர், “அவ் வட நாட்டு மல்லனுடன் நான் போர் செய்கிறேன். அதற்கு அனுமதி தந்தருள்க!” என வேண்டினார். இராயரும் சம்மதிக்க மற்போர் ஆரம்பமாயிற்று.

அரியநாதர் அம் மல்லனின் கையைப் பிடித்து இழுத்துச் சுற்றினார்; முகத்திலும் மார்பிலும் மாறி மாறிக் குத்தினார். இறுதியில் அவனைத் தந் திரமாகத் தூக்கித் தரையில் போட்டார்; மல்ல னது முதுகில் மண் படிந்தது. இப்போரினைப் பார்த்தோர் யாவரும் அரியநாதரின் திறமையை வியந்து மெச்சினர். இவரது பெருவீரத்தைக் கண்ட இராயர் தமது தளபதிகளுள் ஒருவராக இவரை நியமித்தார். அன்றுமுதல் இவர் தளவாய் அரியநாதர் என அழைக்கப்பட்டார்.

**அரியநாதர் அமைச்சராதல்**

கிருஷ்ணதேவராயரது தந்தை, தான் இறக் கும் தறுவாயில் இராயரை அழைத்து, “நம்மிட

மிருந்து பீஜப்பூர் சுல்தான் கவர்ந்துகொண்ட இராய்ச்சூர், முத்கல் முதலான ஊர்களைத் திரும்பவும் நீ பெறவேண்டும் அவ்வாறு பெற்றால்தான் என் ஆவி அமைதியடையும்" எனக் கூறி இறந்தார். அவ்வாக்கினை நிறைவேற்றுவதற்காக இராயர் படைகளைத் திரட்டினார். இராயச்சூரை நோக்கிப் படைகள் புறப்பட்டன.

போரில் பீஜப்பூர் படை பின்வாங்கி ஓடியது. அப்போது அப்படைத் தளபதி பின்வாங்கி ஓடுவதுபோலக் காட்டி, பின்புறமாக மறுபடியும் வந்து தாக்கத் தொடங்கினான். அத்தாக்குதல் நடந்த இடத்தின் அருகில்தான் இராயர் நின்று கொண்டிருந்தார். இப் பேராபத்தை எவரும் கவனிக்கவில்லை.

எதிர்பாராதவிதமாக அரியநாதர் இதைக் கண்டுகொண்டார். பகைவரது தளபதி பின்புறமாக வந்து இராயருக்குத் தீங்கு விளைவிக்கப் போவதைக் கண்ட அவர், தம் படையோடு விரைந்து அவவிடஞ் சென்று, இராயரைக் காத்தார். அத் தளபதியையும் சிறைசெய்து இராயர் முன் நிறுத்தினார்.

இராயர் தமக்கு நேரவிருந்த ஆபத்தைத் தடுத்துக் காத்த அரியநாதரைப் பாராட்டித் தம் அமைச்சரில் ஒருவராக ஆக்கியதுடன் 'முதலி' என்ற பட்டத்தையும் அளித்தார். அன்றுமுதல் அவர் அரியநாத முதலியார் என அழைக்கப்பட்

டார். பிறகு இராயர் வெற்றி முழக்கத்தோடு இராய்ச்சூருக்குள் நுழைந்தார். அந்நகர அரண் மனைமீது இராயரது கொடி பறக்கவிடப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு இராயரது அவையில் அரியநாதருக்கு அளவிலாச் செல்வாக்கு உண்டாயிற்று. அரசன் வரவு செலவு—மாகாணங்களின் நிலைமை முதலிய அரசியற் காரியங்கள் யாவற்றையும் நன்கு செயற்படுத்தினார். இராயருக்கு ஐயம் ஏற்பட்டபோதெல்லாம் அதை அரியநாதர் நீக்கி ஆட்சியைச்சிறப்புறச்செய்தார். இந்நிலையில் விஜயநகரத்திலேபேரரசர் வாழ்த்துக் கூற அரியநாதருக்கு திருமணம் நடந்து முடிந்தது.

**பாண்டிய மன்னனுக்கு உதவி**

தென்னாடு முழுவதும் தமதாட்சியின் கீழ் இருக்கவேண்டும் என விரும்பிய இராயர் தமது பெருஞ்சேனையைத் தமிழ் நாட்டிற்கு அனுப்பினார். கம்பண உடையார் என்ற தளபதியின் தலைமையில் இராயரது படை தெனனாடுநோக்கிப் புறப்பட்டது. பாண்டியரும, சோழரும் விஜயநகர அரசருக்கு அடங்கிய சிற்றரசராக இருந்து வர இசைந்தனர். நாகம நாயக்கர் தட்சிண மகா மண்டலேசுவரராக இருந்த அக்காலத்தில் சோழ நாட்டை ஆண்டுவந்த வீரசேகர சோழன் பாண்டிய நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான்.

நாட்டை இழந்த பாண்டியன் தன் மகனுடன் விஜயநகரத்தை அடைந்தான். இதனை அறிந்த

ப. த.—6.

சோழன் இராயரின் அமைச்சர் சிலருக்குப் பொருளை வாரி இறைத்து அவர்களைத் தன் வசப்படுத்தி வைத்திருந்தான். ஆதலால், எளிதில் இராயரது சந்திப்பு பாண்டியனுக்குக் கிட்டவில்லை. எனினும் பாண்டியன் மீது அரியநாதர் இரக்கங்கொண்டவராக இருந்தமையால், பாண்டியனது பரிதாப நிலையை இராயரிடம் அவர் விளக்கிக் கூறினுர்.

மறுநாள் அரசவையில் இராயர் பாண்டியனை அழைப்பித்து அவனது முறையீட்டைக் கேட்டார். கேட்டதும் நாகம நாயக்கரைப் பார்த்து, "நீர் உடனே சென்று பாண்டிய நாடாளும் சோழனை முறியடித்துப் பாண்டியனை அரசனுக்குக!" எனக் கட்டளையிட்டார்.

**நாகம நாயக்கரது துரோகச்செயல்**

நாகம நாயக்கரும் பெருப்படையுடன்சென்று சோழனை வென்று, பாண்டியனுக்கு அவனது அரசுரிமையை மீண்டும் அளித்தார். பின்பு பாண்டிய நாட்டில் அமைதி நிலவும் வரையில் அங்கேயே தங்கியிருந்தார் அப்பொழுது அவர் பாண்டிய நாட்டைச் சுற்றிப் பார்த்து அதன் வளங்களைக் கண்டு வியந்து, அந்நாட்டைத் தாம் ஆளக் கருதினுர் பாண்டியனைச் சிறைப்படுத்தி இவரே ஆட்சி செய்யத்தொடங்கினுர் பாண்டியனின் மகன் தப்பி, விஜயநகரம் சென்று பாண்டி நாட்டு நிலையை இராயரிடம் தெரிவித்தனன்.

செய்தியறிந்த இராயர் நாகம நாயக்கருக்கு ஒரு கடிதம் எழுதியுங்கூட அவர் எவ்வித பதிலும் விடுக்காமையால் கடுங் கோபம் கொண்டார். நாகமரைச் சிறைசெய்து கொண்டு வரவேண்டும் என்பது இராயரின் விருப்பம். தமது அவையைக் கூட்டி நாகமரின் துரோகத்தை விளக்கிக் கூறினர். பின்பு விசுவநாத நாயக்கரையும், அரியநாதரையும் பாண்டிய நாடு நோக்கிப் படையெடுக்குமாறு கட்டளையிட்டார். அக்கட்டளையைத் தலைமேற்கொண்ட தளபதி இருவரும் பாண்டியநாடு நோக்கிப் புறப்பட்டனர்.

**கடமையைக் காத்த கண்ணியர்**

தம் மைந்தனாகிய விசுவநாதரும், தம்மிடம் முன்பு கணக்கராய் இருந்த அரியநாதரும் படையெடுத்து வருதலைக் கேள்வியுற்ற நாகமர் மிக்க சினம் கொண்டார். தாமும் பெரும்படைகொண்டு அவர்களை எதிர்த்தார் போரில் நாகமரது படை தோல்வி அடைந்தது. தம் தந்தையாகிய நாகமரை விசுவநாதரே சிறைசெய்தார் இவ்வாறு கடமையைக் காத்த கண்ணியர்களான அரியநாதரையும் விசுவநாதரையும் இராயர் மிகவும் பாராட்டினர்.

பின், விசுவநாதர் தாம் விஜயநகரத்திற்குச் செல்வதாகவும், பாண்டிய நாட்டைப்பற்றி ஓர் முடிவுக்கு வரும்வரை அரியநாதரே அதை ஆளுதல்வேண்டும் எனவும் அரியநாதரிடம் கூறினர். அரியநாதரும் அதற்கு உடன்பட்டு விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியாக அமர்ந்தார். பிறகு

இராயர் பாண்டியனது மகனையே மதுரைக்கு மன்னன் ஆக்கினார்.

இவ்வாறு இராயரது ஆணைப்படி மன்னன் ஆன பாண்டியன் இரண்டாண்டுகள் கழித்து நோய்வாய்ப்பட்டு இறந்தான். அவனது மரபில் பட்டம்பெறத் தக்கவர் எவரும் இல்லாததால் பாண்டியநாடு அமைதி இழந்து, குழப்ப நிலையில் இருந்தது. இச்சமயம் கிருஷ்ணதேவராயரும் இறந்தார். அவருக்குப்பின் அவரது உடன்பிறந் தார் ஆகிய அச்சுதராயர் அரசர் ஆனார். அவர் அரசபதவி ஏற்றதும் மதுரை மக்கள், "பாண் டியநாட்டை விசுவநாத நாயக்கரும், அரியநாத முதலியாரும் பாதுகாத்து வருதல்வேண்டும்" என வேண்டுகோள் விடுத்தனர்.

விசுவநாத நாயக்கர் விஜயநகரப் பிரதிநிதியா கவும், மதுரைக்கு அரசராகவும் முடிசூடினார். அரியநாதர் அமைச்சர் பதவியையும், தளபதி பதவியையும் பெற்றார். இவ்வாறு இரு பதவி களையும் அக்காலத்தில் ஒருவரே பார்ப்பது முறையல்ல எனினும், அச்சுதராயர் அரிய நாதர்மீது வைத்துள்ள பெரு நம்பிக்கையால், அவ்விரு பொறுப்புக்களையும் அரியநாதரே கவ னித்தல்வேண்டும் எனக் கட்டளையிட்டார்.

**அமைச்சர் அரியநாதரது சீர்திருத்தங்கள்**

அரியநாதர் பாண்டிய நாட்டில் அமைதி உண்டாக்க அரும்பணிகள் பல புரிந்தார். சோழ-பாண்டிய நாடுகட்குத் திட்டமான எல்லைகள்

வகுத்தமைத்ததே இவர் செய்த செயல்களுள் முதன்மையானதாகும். தஞ்சையை அடுத்துள்ள வல்லத்துக்கோட்டையைச் சோழனுக்குக்கொடுத்தார்; அதற்குப் பதிலாகத்திருச்சிராப்பள்ளியைப் பாண்டிய நாட்டுடன் சேர்த்தார், காவிரியாற்றின் கரைகளில் இருந்த காடுகளை அழித்து வழிப்பறிக் கொள்ளைக்காரர் தங்குதற்கு இடமில்லாமல் செய்தார். அக்காடுகளில் வாழ்ந்துவந்த கள்வர்களைப் பிடித்து, அவர்களை நல்லவர்களாக மாற்றி அவர்களையே எல்லை காவலராக நியமித்தார், காடுகளை அழித்த இடங்களில் எல்லாம் கிராமங்களை உண்டாக்கினர். காவிரியிலிருந்து பல கால்வாய்களை வெட்டி நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தினர்.

அரியநாதர் திருச்சிராப்பள்ளியைப் பல வழிகளில் செப்பம் செய்ய முயன்றார். அங்குக் கோட்டை கொத்தளங்களை அமைத்தார். நகரத்தைச் சுற்றி இரு பெரிய மதிற்சுவர்களை எடுப்பித்தார் ஓர் அகழியையும் வெட்டுவித்தார். இப்பொழுது திருச்சியில் காணப்படும் ஓர் தெப்பக்குளத்தை உண்டாக்கியவரும் அரியநாதரேயாவார். அங்கு அரசர் தங்குவதற்கு வேண்டிய அரண்மனை ஒன்றையும் அமைத்தார்.

மதுரையையும் சிறந்த ஒரு காவல் நகரமாக ஆக்குவதற்காக அரியநாதர் அரும்பாடு பட்டார். பழுதுபட்டுக் கிடந்த பாண்டியர் காலத்து மதிற்சுவரை இடித்துவிட்டு, பலம் பொருந்திய புதிய

மதிற்சுவரை எழுப்பினர்; கோட்டையையும் புதுப்பித்தார். எழுபத்திரண்டு கொத்தளங்களைப் புதியனவாக அமைத்தார். அவற்றில் காவலாளிகளையும், வீரர்களையும் அமர்த்தினர். ஆங்காங்கு பீரங்கி முதலிய புதிய போர்க்கருவிகளைச் சேமித்து வைத்தார்.

வைகையாற்று நீரை நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுமாறு செய்த பெருமை அரியநாதரையே சாரும். அவ்வாற்றின் குறுக்கே பல அணைகளைக் கட்டினர்; பல கால்வாய்களை வெட்டினர், இவ் வேலைகளால் அக்காலத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கட்கு வேலை கிடைத்தது. குடிமக்கள் அரியநாதரை மிகவும் போற்றிப் புகழ்ந்தனர்.

**பஞ்சபாண்டியர் கிளர்ச்சி**

அரியநாதரது சிறந்த பணிகளால் மதுரையில் நாயக்கர் அரசு நிலைபெறத் தொடங்கிற்று வடபாண்டிய மக்கள், "நாயக்கர் அரசே எங்கட்குத் தேவை" எனக் கூறி, அரியநாதரின் பணிகளைப் பாராட்டிப் பேசி வந்தனர். இதைக கேள்வியுற்ற பஞ்ச பாண்டியர் என்போர் அச்சங் கொண்டு கிளர்ச்சி செய்தனர். "பாண்டிநாட்டில் பாண்டியர் ஆட்சியே வேண்டும்; தெலுங்கர் ஆட்சி தேவையில்லை; நாடு எங்கட்குச் சொந்தம்; அந்நியர்க்கு இங்கு இடம் இல்லை" எனப் பிரச்சாரம் செய்து, திருநெல்வேலி மாவட்டத்தில் வசித்த வீரமக்களைத் தட்டி எழுப்பினர். அதன் காரணமாகத் தென் பாண்டி நாட்டில் பெரும்

படை திரண்டது. தமிழ் வீரர்கள் யாவரும் நாயக்க அரசை ஒழிக்கத் திடம்பூண்டு போருக்குப் புறப்பட்டனர்.

அவர்களது நாட்டுப்பற்றைப் பாராட்டிய போதிலும் அரியநாதர், தமது இராச சேவையை நிறைவேற்ற வேண்டிய கடமையால் போருக்குப் புறப்பட்டுச் சென்றார் இருதிறத்துப் படைகளும் கடுமையாகப் போர்புரிந்தன. எனினும் பாண்டியரின் படை நாட்டுப்பற்றுகொண்டு போர்செய்ததால் தோல்வியடையாது கடுமையாகப் போரிட்டது ஆறு மாதங்கள் வரை இப்போர் நடந்து கொண்டிருந்தது. இருதிறத்தில் எவர்க்கும் வெற்றி தோல்வி இல்லாதவாறு போர் நடந்து கொண்டிருந்தது. நாட்டுப்பற்று மிகுந்தபோர் வீரர்களை எளிதில் வெல்லமுடியாது என அரியநாதரும், விசுவநாதரும் கருதினர்.

## போர் முறையில் புதிய ஏற்பாடு

"தென் பாண்டி நாட்டாரைப் போர் செயது வெல்லுதல் முடியாத காரியம் ஆகும். சூழ்ச்சியினால்தான் வெல்லமுடியும். வீணே பலரைப் போரில் பலியிடுதல் நல்லதல்ல. தென்பாண்டி நாட்டார் தங்களுக்குள் சிறந்த வீரன் ஒருவனை அனுப்பவேண்டும், நாமும் நமது வீரரில் ஒருவனை அனுப்புவோம். இருவரும் தனியே போர்புரிதல் வேண்டும். அப்போரில் வெல்பவர் எந்தக்கட்சியைச் சேர்ந்தவரோ, அக்கட்சியார்க்கே பாண்டிய நாடு உரியதாகும். இந்த யோசனையைப் பகைவ

ரிடம் தெரிவிப்போம்" என்று அரியநாதர் விசுவநாதரிடம் யோசனை தெரிவிக்க, அவரும் அதனை ஆதரித்தார். தென்பாண்டி நாட்டாரும் அதற்கு இசைந்தனர்.

மதுரை அரசர் பக்கம் விசுவநாதரும், பஞ்சபாண்டியர் பக்கம் தென்பாண்டி வீமன் என்பவனும் போர் செய்வது என முடிவுகட்டினர்.

**விசுவநாதரின் வெற்றி**

குறித்த நாளில் போட்டி தொடங்கப்பட்டது. வீரர் இருவரும் முதலில் மற்போர் தொடங்கினர். இடசாரி, வலசாரி வந்து மேல் எழும்பிக் குதித்தனர்; ஒருவரை ஒருவர் முட்டி மோதிக்கொண்டனர்; குத்திக்கொண்டனர். இருதிறத்துப் படைவீரர்களும் இமைகொட்டாமல் இதனைக் கவனித்தனர்.

பின்னர் இருவருக்கும் வாட்போர் தொடங்கியது. விசுவநாதரின் உடலெங்கும் காயங்கள் ஏற்பட்டதால் அவர் சிறிது அஞ்சினார். பிறகு தனது மானவுணர்ச்சிமேல் எழுந்ததால் வீராவேசம் கொண்டு போரிட்டார். வேடிக்கையாக வாளைச் சுற்றுவதுபோல் பாசாங்கு செய்து, விசுவநாதர் திடீரெனப் பாண்டி வீமன் வயிற்றில் பாய்ச்சினார். அதேசமயம் அவரும் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தார் பாண்டி வீமன் இறந்தான்.

முதலில் ஏபட்ட ஒப்பந்தப்படி பஞ்சபாண்டியர் தோற்றவரானதால், பொதியமலைப் பிரதேசத்திற்குச் சென்றுவிட்டனர்.

**அரியநாதரின் அரிய சேவை**

விசுவநாதர் பெயரளவில் அரசராக இருந்தாலும், அரியநாதரே அரசர்போன்று எல்லா அரசியற் காரியங்களையும் முன்னின்று நடத்திவந்தார். திருச்சிராப்பள்ளி முதல் கன்னியாகுமரி வரையுள்ள நாட்டில் அமைதி உண்டாக்கிக் காத்தார்; திருநெல்வேலிச் சிவன் கோயிலைப் புதுப்பித்தார்; பாளையங்கோட்டைப் பகுதியில் பெரியகோட்டை ஒன்றைக் கட்டுவித்தார். குறுநில மன்னர்களை அடக்கி அமைதியை நிலைநாட்டினார். பாண்டிய நாட்டு மன்னர்களை இவர் அடக்கியது போலவே சேலம், கோயமுத்தூர், நீலகிரிப் பகுதிகளில் இருந்த குறுநிலமன்னர்களையும் அடக்கினார். இங்ஙனம் அரியநாதர் தென்னாட்டிம் நாயக்கர் அரசு நிலைபெறுவதற்குப் பல தொண்டுகள் செய்தார்.

தமிழ் நாட்டில் நாயக்க அரசு ஏற்பட்டதைத் தமிழ்நாட்டு மக்கள் வெறுத்தனர்; தங்களது உரிமை பறிக்கப்பட்டது போன்று துடித்தனர். புதுக்கோட்டைத் தொண்டைமான் போன்ற சிற்றரசர் முணுமுணுத்தனர். இப் பலதிறப்பட்ட மக்களையும் நாயக்க அரசருக்கு விசுவாசம்உடையவராகச் செய்யவேண்டுமானால், அம்மக்கள் விரும்புமாறு ஏதாவது ஒன்றைச்செய்யவேண்டும்; அவர்கள் ஒழுங்காக இராவிடில் நாயக்க அரசு தமிழ்நாட்டில் நிலைக்காது. இவ்விரண்டையும் நன்கு உணர்ந்த அரியநாதர் வெற்றிபெறத்தக்கதிட்டம் ஒன்றைத் தீட்டினார். எல்லோரும் அத்திட்டத்தை

ஏற்றனர். அதற்குத்தான் "பாளைய வகுப்புத் திட்டம்" என்று பெயர்.

**பாளைய வகுப்புத் திட்டம்**

நாயக்கர் ஆண்டு வந்த நிலப் பகுதியில் தொன்றுதொட்டு இருந்துவந்த சிற்றரசர் வீரர் தலைவர் முதலியோரது பெயர்களும், புதிதாகக் குடியேறிய தெலுங்கர்களின் பெயர்களும் தொகுத்துச் சேர்க்கப்பட்டன, அவர்களது மேற் பார்வையில் இருந்துவந்த பகுதிகளும் கணக் கிடப்பட்டன. அரியநாதர் அவரவர் ஆண்டு வந்த பகுதியை அவரவர் வசமே ஒப்புவித்தார். புதியவர்களுக்கும் பல சிற்றூர்களை அளித்தார், அவர்களுக்குப் பாளையக்காரர் என்று பெயர் சூட்டினர் அவர்கள் ஆண்ட பகுதி பாளையம் என அழைக்கப்பட்டது.

பாளையக்காரர் தமது மொத்தவருமானத்தின் மூன்றில் ஒரு பங்கை எடுத்துக்கொள்ள வேண் டும்; ஒரு பங்கைப் பாளையத்துக்காகச் செலவிட வேண்டும் ; ஒரு பகுதியை ஆண்டுதோறும் நாயக்க அரசரிடம் சேர்ப்பிக்கவேண்டும். இவ் வாறு அரியநாதர் அமைத்த பாளையங்கள் எழு பத்திரண்டு. மதுரைக் கோட்டையின் எழுபத் திரண்டு கொத்தளங்களில் ஒவ்வொருகொத்தளக் காவலும் ஒவ்வொரு பாளையத்தார் வசம் ஒப்பு விக்கப்பட்டது. அரியநாதர் அமைத்த இப் பாளைய வகுப்புத்திட்டத்தால் மக்கள் எல்லோரும் மனம் மகிழ்ந்தனர். பல்வகைத் தொழில்களும் பாங்குற வளர்ந்தன.

அச்சுதராயர் மறைந்ததும் விஜயநகரப் பேரரசராக சதாசிவராயர் என்பவர் பட்டம் பெற்ருர். அவர் பெயரளவில் அரசராக இருந்தாரே தவிர, ஆட்சி முழுவதையும் கவனித்து வந்தவர் இராமராயர் என்பவரே ஆவர். இராமராயர் மிகுந்த சமர்த்தர்; ஆஞல் பிடிவாதம் நிறைந்தவர். அக்காலத்தில் வாழ்ந்திருந்த சுல்தான்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து விஜயநகரப் பேரரசை அழிக்க முனைந்தனர். அதனை உணர்ந்த இராமராயர் மதுரையில் இருந்த அரியநாதரை உடனே புறப்பட்டு வரும்படி அழைப்பு விடுத்தார்.

## தலைக்கோட்டைப் போர்

இராமராயரின் அழைப்பு மதுரையில் கிடைத்தபோது அங்கு ஆட்சிபுரிந்த கிருஷ்ணப்ப நாயக்கர் மிகவும் இளமைப் பருவத்தினர் ஆதலின் அரியநாதருக்கு அரசியற் பொறுப்பு அதிகமாயிற்று. ஆயினும் அழைப்பு கிடைத்ததும் அவர் விஜயநகரத்திற்குப் புறப்பட்டுச் சென்ருர்.

அரியநாதர் விஜயநகரம் வந்து சேர்ந்ததும் இராமராயர் தானைத் தலைவர்களைக் கூட்டி யோசனை செய்தார் "எப்படியும் சுல்தான்களைப் பஞ்சுபோலப் பறக்கடிப்போம்" என அவர் முழங்கினர். அவ்வமயம் அரியநாதர் எழுந்து, "அரசே! தாங்கள் கூறுவது முடியாத காரியமாகும். ஆயினும், நாம் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும். நமது பகைவர் ஐவர் ஆவர். ஆதலால், நமது படைகளையும் மூவகை

யாகப் பிரித்து எதிரிகளின் தாக்குதலைச் சமாளித்தல் வேண்டும்" என்று கூறினார். அரியநாதரது யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விஜயநகரப் பேரரசருக்கும் சுல்தான்களுக்கும் ஏற்பட்ட இப்போர் தலைக்கோட்டைப் போர் எனக் கூறப்படுகிறது.

**சுல்தான்களின் போர்த் தந்திரம்**

அகமத் நகரச் சுல்தான் நிஜாம்ஷா என்பவன் தனது போர்முகத்தின் நடுவில் அறுநூறு பீரங்கிகளை அமைத்து, அவை எதிரிகளுக்குப் புலப்படா வண்ணம் அவற்றிற்கு முன்னால் பல வீரர்களை நிறுத்தியிருந்தான்.

விஜயநகர வீரர்கள் பகை வீரர்களைத் தாக்கி அழித்து முன்னேறும் சமயத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுல்தான்களின் பீரங்கிகள் குபீர், குபீர் என்று நெருப்பைக் கக்கி முழங்கின. இப்புதிய தாக்குதலை விஜயநகர வீரர்கள் எதிர் பாராததால், பீரங்கி வேகத்தைத் தாங்கமாட்டாமல் பின்வாங்கினர்.

உடனே இராமராயர் யானையைவிட்டு இறங்கிப் பல்லக்கில் ஏறிப் போர்க்களம் முழுவதும் திரிந்தார். அரியநாதர் "இராயர் பல்லக்கில் இருப்பது தகாது. ஒரு சமயம் தோல்வி நேர்ந்தால், விரைவில் தப்பி ஓடுவதற்கு யானை அல்லது குதிரையில் ஏறியிருத்தலே தகுதியானது" என்று கூறினார். அதனைக் கேளாது இராமராயர் பிடிவா

தமாகப் பல்லக்கிலேயே அமர்ந்து திரிந்தார். அப் போர்க்களத்திலே இராமராயர், "இப்போரில் நான் இறந்துபோனுல்மற்றையோர் இப்பேரரசை நாசமாக்கிவிடுவர் ஆதலால் எனக்குப் பின்னுல் இவ்வரசைக் காக்கும் திறமைகொண்டவர் அரிய நாதரே ஆவார்" எனக் கூறினுர் என்ருல், அரிய நாதரது திறமையை என்னென்பது!

## இராமராயரின் வீர மரணம்

பீரங்கிகளின் தாக்குதலால் விஜயநகரப் படைவீரர்கள் கலைந்து சிதறினர். இராமராயர் பல்லக்கில் ஏறி இருந்ததால், அவரது படைவீரர் கள் படைத் தளபதி இராமராயரைக் கண்டு கொள்ளமுடியவில்லை. அவர் கொல்லப்பட்டோ பின்வாங்கி ஓடிவிட்டாரோ என்ற ஐயத்தில் இராயரது படைவீரர்கள் தைரியம் குன்றிப் புற முதுகிட்டு ஓடலாயினர். இவ்வாறு தமது படை வீரர்கள் புறமுதுகு காட்டி ஓடுவதைப் பார்த்த இராமராயர் பல்லக்கிலிருந்து இறங்கி அருகி லிருந்த ஒரு குதிரையில் ஏற முயன்றுர். இவ ரையே குறிவைத்துப் பார்த்துப் பின்தொடர்ந்து கொண்டிருந்த நிஜாம்ஷா, இராயரின் அருகே வந்துத் தன் வாளால் அவரது தலையைச் சீவி எறிந்தான்.

## நாயக்கர் தோல்வியும் அரியநாதர் கலக்கமும்

உடனே பகைவர்கள் அவரது தலையை வேல் நுனியில் குத்தித் தூக்கி, உயர்த்திப்

பிடித்துக்கொண்டு வெற்றி முழக்கம் செய்தனர். இராயரது தலையைக் கண்ட முஸ்லீம் வீரரர்கள் மனங்களித்தனர்; விஜயநகர வீரர்கள் மனக் கலக்கம் அடைந்து சிதறி ஓடினுர். விஜயநகரப் படைகள் படுதோல்வியடைந்தன உயிர்பிழைத்த விஜயநகரப் பேரரசர் திருமலைராயர் முதலியோர் விஜயநகரத்தைக் காத்தற்கு முனையாமல் தம் உயிர்களைப் பாதுகாக்கப் பெனுகொண்டா கோட்டைக்குப் புறப்பட்டுப் போயினர்.

அரியநாதருக்குத் திருமலைராயரது செயல் பிடிக்கவில்லை. அவர் இராமராயரின் கட்டளைப் படி தாம் 'மஹாராயராக' முடி சூடி நகரத்தைக் காக்க நினைத்தார். அவர் நகரப் பெருமக்களையும் தம் உற்ருர் உறவினரையும் யோசனை கேட்டார். "இராயரது குடும்பமே அஞ்சி ஓடிவிட்ட பிறகு இங்கு நமக்கு என்னவேலை? நாம் ஏன் மக்களை வீணிற் பலியிடவேண்டும்? இந்த முயற்சி வேண்டாம்" என அனைவரும் கூறினர், தம்மால் முடியும் அளவிற்குப் பேரரசு சிதைவுருமல் காக்க வேண்டும் என எண்ணிய அரியநாதரும் அவர் கள் யோசனைக்கு இணங்கித் தாமும் பெனு கொண்டாவுக்குச் சென்ருர்.

**அரியநாதரது புதிய திட்டம்**

"பேரரசை மூன்று பகுதிகளாகப் பிரிக்க வேண்டும் அவற்றில் வடபகுதியை ஆள்பவரே மஹாராயர்; அவருக்கு உட்பட்டே மற்ற இரு பகுதிகட்கும் அரசராக இருப்போர் செயலாற்ற

வேண்டும். பேரரசர் முஸ்லிம் படையெடுப்பைத் தடுத்துக்கொண்டு வடக்குப் பகுதியைக் காத்து வருதல் வேண்டும்" என்று அரியநாதர் யோசனை தெரிவித்தார். அவரது யோசனைப்படியே யாவும் நடந்தன. இப்புதிய பேரரசு முழுமைக்கும் தளவாய்ப் பொறுப்பை அநுபவமிக்க அரியநாதரே ஏற்றுக்கொண்டார்.

## அரியநாதரது குணநலன்கள்

பாளைய வகுப்புத் திட்டம் ஏற்படுத்திய காலத்தில் மாவலி பாணராயன் என்ற ஒருவன், தான் அரசனாக விரும்பி மானாமதுரை, காளையார் கோவில் முதலிய இடங்களைக் கைப்பற்றினான். அவனது செயலை முறியடிக்கவேண்டும் என்பது அரியநாதரின் எண்ணம். ஆதலால், வீரப்ப நாயகருடன் அவர் ஒரு படையைக் கொண்டு சென்றார். பாணராயனைச் சமாதானம் செய்து கொள்ளும்படி அரியநாதர் அறிவுறுத்தியும், அவன் கேளாது போர்புரிந்துத் தோற்றான். வீரப்ப நாயக்கர் அவனது பாளையத்தைக் கைப்பற்றி அவனை விரட்டிவிட முற்பட்டார். ஆனால், அரியநாதர் பாணராயனை மீண்டும் ஒரு பாளையக் காரனாகவே ஆக்கினார். பாணராயனும் மனம் மாறினார். படைத்தலைமை பூண்டு போர் செய்யும் திறமை மிக்கவரான அரியநாதர், பகைவர்க்கும் இன்னருள் பாலிக்கும் பண்பாளராகவும் விளங்கினார் என்பதை இச்செய்தி மூலம் அறியலாம்.

மதுரைக்கும் திண்டுக்கல்லுக்கும் இடையில் இப்போது உள்ள சோழவந்தான் எனும் ஊரே பழங்காலத்தில் பாண்டியப் படைகள் தங்கி யிருந்த படைவீடாகும். அந்த இடத்தையே அரியநாதர் தமது உறைவிடமாகக் கொண்டார்.

'செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்' என்றபடி, அரியநாதர் தமது இனத்தவராகிய தொண்டைமண்டல வேளாளரைப் பாண்டிய நாட்டில் வளம் நிறைந்த இடங்களில் எல்லாம் குடியேற்றினார். சோழவந்தானில் மட்டும் முந் நூறு குடும்பத்தினரைக் கொணர்ந்து குடி யேற்றினார். அவர்கட்கு இலவசமாக விடுதிகளும் கட்டிக்கொடுத்து உதவினார். ஊரைச் சுற்றி ஒரு கோட்டையையும் எழுப்பினார். அக்கோட்டை முதலியார் கோட்டை என அழைக்கப்பட்டது. மேலும் தாமிரபரணி ஆற்றங்கரையில் தம் பெய ரால் அரியநாதபுரம் என்ற ஒரு கிராமத்தையும் அமைத்தார். நான்மறையாளர்கட்கும் பல அக் கிரகாரங்களை அமைத்துக் கொடுத்து அவர்கட்கு வேண்டிய நிலங்களையும் தானமாக வழங்கினார்.

சந்திரமரபைச் சேர்ந்த துரியோதனாதியர்க் கும் பாண்டவர்க்கும் அரசியல் குருவாக அமைந்து உபதேசம் புரிந்த பீஷ்மரைப் போல, மதுரை நாயக்கர் மரபிற்குத் தளவாய் அரியநாத முதலி யார் அரசியல் குருவாக அமைந்தார். எளிய குடும்பத்தில் பிறந்து, இலவசக் கல்வி கற்று, அரிய பெரிய பதவிகள் ஏற்று, உடல் வலிவும்

உள்ள உறுதியும் குறையாத தளபதியாய், அரசியல் அறிவிற் தலைசிறந்தவராய் வாழ்ந்து மறைந்த அரியநாதர், அருங்கலைகள் பலவற்றைக் கற்று வல்லுநராய்த் திகழ்ந்தவர் என்பதை நாம் அறியும்போது அவரது தளரா முயற்சியை என்னென்று பாராட்டுவது !

பாண்டிய நாட்டிலே நாயக்க மரபினருடன் 1529ஆம் ஆண்டிலே இவர் தொடர்புகொண்டு, 1600 ஆம் ஆண்டு வரையில் ஒப்பற்ற தளவாயாகவும், மதிமிக்க அமைச்சராகவும் விளங்கி நாயக்க மன்னர்களின் நான்கு தலைமுறைகளுக்கு நற்றுணையாக விளங்கினர். அரியநாதர் முடிசூடவில்லையென்றாலும், முடிசூடிய மன்னவனைப் போலவே அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கினர். இத்தகைய அரசியல் அறிஞர் கி.பி. 1600 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் இறக்கும் தறுவாயில் அவருக்கு நூறு வயதுக்கு மேல் இருக்குமாம். மதுரை நாயக்க மன்னர்கள் அவரைத் 'தளவாய்த் தாத்தா!'' என்று அன்புடன் போற்றிக் கொண்டாடினர்.

---

# 4. முகம்மதுகான்

தமிழகத்தின் மாவட்டங்கள் பலவற்றுள்ளும், வீரமும் சிறப்பும் பொருந்திய தேசிங்கு வாழ்ந்த தென்னாற்காடு மாவட்டம், சரித்திரப் புகழ்வாய்ந்த மாவட்டமாகும். அம்மாவட்டத்தில் செஞ்சி என்ற நகரத்தில் தேசிங்கு மரபினரால் கட்டப்பட்ட கோட்டை இன்றும் நின்று தன் புகழைப் பரப்பிக்கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. செஞ்சி நகரத்தைப் பழங்காலத்தில் செஞ்சிப் பட்டணம் என வழங்கி வந்தார்கள்.

அச் செஞ்சிப்பட்டணத்திற்குத் தெற்கே இருபது கல் தொலைவில் வழுதாவூர் என்ற ஊரின் கண் நற்குணமும், நற்பண்பும், வீர உணர்வும் குன்றாத பெற்றோர்களுக்கு அருந்தவப் புதல்வனாய்த் தோன்றினான் முகம்மதுகான்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, அருங்கலை பயின்று, வில் வித்தை, வாள் வித்தை, குதிரையேற்றம் முதலிய போர்ப் பயிற்சிகள் முழுவதும் கற்றுணர்ந்து மன்னன் தேசிங்கின் அன்புக்குப் பாத்திரமானான்.

முகம்மதுகான் தனது வாழ்நாளில் ' விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள் வைக்குந் தன்னுள் " என எண்ணும் திண்ணிய உள்ள உறுதியும், உடலமைப்பும் ஒருங்கமைந்த மாவீரனுவான். எனவே, ' கூற்றுடன்று மேல்வரினும்

கூடி எதிர்நிற்கும் ஆற்றலுடைய செஞ்சிப் படைக்குத் தலைவனாக விளங்கினான்.

**மணவிழாக் காட்சிகள்**

காளைப் பருவமெய்திய கட்டழகன் முகம்மது கானுக்கு அவனது பெற்றோர் மணமுடிக்க எண்ணியபடி, 1714ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2ஆம் நாள் வழுதாவூரில் அவனது மணவிழா, பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. ஊர் முழுவதும் அலங்காரப் பந்தல் போட்டிருந்தனர். தெருக்களில் புதுமணல் பரப்பித் தூய்மை செய்திருந்தனர். வண்ணத் தோரணங்களும், மகரதோரணங்களும் அழகுடன் விளங்கின. இளநீர், ஈச்சன், பாக்கு, பனை, வாழை முதலிய மரங்களின் குலைகள் பந்தலில் அழகுறக் கட்டித்தொங்கவிடப் பட்டிருந்தன. அறுசுவை உணவும், பல்வகைப் பண்ணியமும் குவிந்திருந்தன. மக்கள் பலருக்கும் அவர்கள் விரும்பும் அளவிற்கு வழங்கி வந்தனர். மங்கல வாத்தியங்கள் கடல் ஒலிபோல் முழங்கின. வண்ண விரிப்புக்களும் கண்கவர் விளக்குகளும், மணமிகு பொருள்களும் மணவீட்டை அலங்கரித்தன.

இசையும், பாட்டும் எழும் ஒருபுறம் ; யாழும் குழலும், முழவும் முழங்கும் ஒருபுறம் ; உள்ளம் மகிழ்விக்கும் பல்வேறுவகை நிகழ்ச்சிகளும் அங்கு நடந்தன. மணங்காண வந்தோர் அவற்றைக் கண்டு மனம் மகிழ்ந்து, சுற்றம்சூழ அளவளாவி இருந்தனர்.

செஞ்சிக்கோட்டையின் தளபதியான மாவீரன் முகம்மதுகானின் மத வழக்கத்தின்படி இரவுப் பொழுதில் மணம் நடப்பதால், மணக்கோலங் கொண்டான். மஞ்சள் பட்டாடை இடையை அழகுசெய்ய மார்பில் மணங்கமழும் சந்தனம் பூசி, முத்துமாலை, மோகனமாலை, இரத்தின கண்டி, இரத்தினப் பதக்கம் இவற்றை அணிந்தான். பின்னர் டில்லி மாமன்னன் பாதுஷா ஷா ஆலம் பரிந்தளித்த நீலவேணிக் குதிரையை நன்கு அலங்கரித்து அதன்மீது அமர்ந்தான்.

மணமகளும் கண்கவர் வனப்புமிக்க முத்துச் சிவிகையொன்றில் அமர்ந்தனள். பின்னர் மணமக்கள் ஊர்வலம் வரலாயினர். பலவகை வாத்தியங்களும், வாழ்த்தொலியும் முழங்க மலர் மழை பொழிய மணமக்கள் மணவறை அடைந்தனர். கல்வி ஒழுக்கங்களில் சிறந்த மதக்குருமார்கள் அம் மணமக்களை மணவறையில் இருக்கச்செய்து மத விதிகளுக்கேற்ப மண நிகழ்ச்சிகளை செவ்வனே நடத்திவரலாயினர். மணங்காண வந்த உற்றுரும் மற்றையோரும் உவகைக் கடலில் மூழ்கியிருக்குந் தறுவாயில் விரைந்தோடி வந்தனர், வீரரிருவர்.

## கடமையின் அழைப்பு

செஞ்சிப்பட்டணத்தில் இருந்து மன்னன் தேசிங்கால் அனுப்பப்பட்ட குதிரைப் படையைச் சார்ந்த வீரர்கள் அவர்கள். மணவறையை அடைந்து மணமகன் முகம்மதுகானிடம் மன்னன்

தேசிங்கால் அனுப்பப்பட்ட திருமுகத்தைத் தந்தனர். அத்திருமுகங் கண்ட முகம்மதுகான் உள்ளத்து உணர்வுகொண்டு கையில் வைத் திருந்த மங்கலப் பொருள்களைக் கீழே வைத்து விட்டு, அன்பு நிறைந்த பணிவுடன் அதனைப் படிக்கலுற்ருன்.

அதைப் படித்து முடிந்ததும் மணவறையி லிருந்த பெருமக்களை நோக்கி, "பெரியோர்களே ! ஆற்காட்டு நவாப் சைதுல்லாகான் தனது படை களைத் திரட்டிக்கொண்டு நமது தாய்த் திருநாட் டின் தலைநகராம் செஞ்சிப் பட்டணத்தின்மீது படையெடுத்து வந்துள்ளான். ஆதலின், நான் விடிவதற்கு முன்னே செஞ்சியில் இருக்கவேண் டும். இது நமது மன்னரின் ஆணை. நான் இப்போதே புறப்படப்போகிறேன். மாற்ருனைத் தோற்ருடச் செய்து, மீண்டு வந்து மற்றைய மணச் சடங்குகளை முடித்துக்கொள்வேன். மாற்ருன் பொள்ளெனபோர் தொடுத்தசெய்தியை நமது மன்னர் அறிவித்த பின்பும் நான் போர்க் களம் நோக்கிப் போகாது இருத்தல், ஞாலம் கலங்காது காக்கும் படைத்தலைமைக்கேற்றதல்ல நான் செல்ல அனுமதியும், வெற்றிக்கு நல் வாழ்த்தும் கூறி வழியனுப்புங்கள் !" என்று புன்னகையுடன் மொழிந்தான்.

**சுற்றத்தாரின் அங்கலாய்ப்பு**

அவ்வுரை கேட்ட சுற்றத்தார்' தாங்கள் சொல்வதறியாது திகைத்தனர். பெற்ரோர்கள்

முகம்மதுகானின் முன்வந்து நின்று, "அருந்தவப் புதல்வனே! அரசர் கட்டளையை அவமதித்தல் ஆகாது; நாட்டுக்குக் கேடெனில் வீட்டுக் கொருவர் எழத்தான் வேண்டும். வாளா இருப்பது வஞ்சனையாகும். இன்று கங்குல் பாதியும் கழிந்துவிட்டது. எஞ்சியிருப்பது இன்னும் பாதிப் பொழுதே. இந்தப் பாதி இரவுவரை நீ இங்கேயே தங்கியிருந்து எஞ்சிய மணவினைகளையும் முடித்துவிட்டு. இரவி எழுமுன் செஞ்சிக் குப் புறப்படலாம் உன் வார்த்தைகளைக் கேட்டுப் பெண்வீட்டாரும், நமது பெருஞ் சுற்றத்தினரும் வருந்துகின்றனர். அவர்கள் உள்ளம் வருந்த நடப்பது நமக்கு அழகன்று" என வேண்டி நின்றனர்.

### வாட்போர் வீரனின் சொற்போர்த் திறன்

அவ்வுரை கேட்ட முகம்மதுகான், "எனை யீன்ற அன்னையே! தந்தையே! என்ன செய் வேன்? நான் மேற்கொண்ட பணி என்னை மட்டும் பொறுத்ததல்லவே! போர் என்பது நமது எண்ணப்படியோ, அல்லது நாம் விரும்பும் நாளிலோ நடப்பதல்லவே! நாளும் கோளும் நல்லவையும் பார்த்து நாமிருந்தால், மமதைகொண்ட மாற்ரூன் அதுவரை பொறுத்திருப்பானு? இதுவரையிலும், நாம் பேசிக்கழிக்கும் இந்நேரத் திற்குள் அங்கு என்ன நடந்திருக்குமோ? நமது கோட்டையை முற்றுகையிட்டுள்ள கொடியோன் ஆற்காட்டு நவாபின் படைகள் இதுவரை

என்னென்ன அட்டூழியங்கள் புரிகின்றனவோ! ஆணவம் பிடித்த ஆற்காட்டான் நமது அன்னை நாட்டின் அரண்மனையை முற்றுகையிட்டு நிற்கின்ருன், அறிவிலி. அச்சமென்பதே அறியாது, அமர்க்களத்தே தமது உயிரைத் துச்சமென எண்ணிச் செயலாற்றும் எனது வீரர்கள் என்னை எதிர்நோக்கிக் காத்து நிற்பர் இந்நேரம். நாடு காக்கும் நற்பணி மேற்கொண்ட நான் மட்டும் எனது மணக்கோலத்தில் மனங்களித்து இங்கே இருப்பது முறையா? 'தளபதி வருவான்; தனது படையுடன் சென்று மாற்ருர் தலைகளைத் தரையிற் உருளச் செய்வான்; அதைக் கண்டு கலங்கி மண்டியிடுவான் சைதுல்லாகான்' எனறெல்லாம் எண்ணிக்கொண்டு பெரு நம்பிக்கையோடு என்னை எதிர்நோக்கியிருக்கும் நமது மன்னர் மனம் துவள இடந்தராது இன்றே புறப்படுதல் எனது கடமை அம்மா!" என்ருன்.

அவனது பெற்ருேர், "வீர மைந்த! குன்ருப் புகழ் உனக்கு என்றும் நின்று நிலவ வேண்டுமென்பதே எங்கள் ஆசை. உனது குற்றமற்ற சிறந்த வீரத்திற்கோ, எதிர்நோக்கியிருக்கும் இணையிலாப் புகழுக்கோ இம்மியும் குற்றமுண்டாக எங்கள் மனம் ஒப்பாது. மணவினை மிகுதியும் முடிந்துவிட்டது. எஞ்சியுள்ளது மண அணி அணிவதுமட்டுமே அந்த ஒரு செயலை மட்டும் முடித்துவிடு. அதனுல் உனது மாமன் மாமியார் மகிழ்வார்கள். அக்கணமே நீ குதிரை ஏறி செஞ்சி நோக்கி விரைந்து செல்லலாம்.

அடுத்து நிகழ இருப்பனவற்றை நாங்கள் இருந்து கவனித்துக்கொள்கிறோம்'' என, கெஞ்சாக்குறையாக எடுத்துக் கூறினர் ; உற்றாரும், மற்றையோரும் இதனை ஆமோதித்தனர்.

**முகமதுகான் :** ''எனை யீன்ற தெய்வங்களே ! 'தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை', 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பதை நானறிவேன். ஆயினும் இன்று விடியுமுன் எமது இறைமுன் நான் இருக்கவேண்டும். அவ்வாறு சென்றடைந்தால் எமனே வந்தாலும் அவனையும் எதிர்க்கும் ஆற்றல் மிக்க எமது படைவீரர்களை அணிவகுத்து, அவர்களது மறத்திண்மையும், தாம் பிறந்த பொன்னாட்டைத் தருக்கரிடமிருந்து தலை கொடுத்தேனும் காப்பாற்றும் மான உணர்ச்சியையும், நாட்டைக் காத்து நிற்க வீட்டுக்கொருவர் விரைந்து முன்வந்த மரபு கெடாமையும், மன்னனின் திண்ணிய எண்ணத்தின் வழி நடந்த சிறப்பும் வெளிப்படுத்த முடியும். அவ்வாறின்றி நாளை விடிந்தபின் அங்கு போய்ச் சேர்வதில் எப்பயனும் இல்லை விரைந்து ஓலை அனுப்பியும் வீரன், நமது படைத் தலைவன் இன்னும் இவன் வந்தடையவில்லையே என்னும் இழுக்கு என்னை வந்தடைதல் கூடாது. வகை கெட்டு எம்மை நாடி வந்துள்ள பகையொழித்து வெற்றி வீரனாக வந்து இனி நடக்க இருக்கும் மணச் செயலை முடித்துக் கொள்வேன். என்னை யாரும் தடை செய்யவேண்டாம்'' என்று கூறிக் கொண்டே தனது முன்னறி தெய்வங்களான

தாய் தந்தையரை வணங்கி மணப்பந்தலிலிருந்து வெளியில் புறப்பட்டுவிட்டான். கடமை வீரனுன அவனது சொற்கள் அங்கிருந்த அனைவரது உள்ளங்களையும தொட்டன. எனவே, எவரும் எதிர்மொழி கூற விரும்பவில்லை. அரசர் ஆணையும், அன்னை நாட்டின் நலமுந்தான் சிறந்தனவேயல்லாமல், மணவினை சிறந்ததாகா என்பதைக் கண்ணுற்ற மக்கள் வியப்பெய்தி வாளாவிருந்தனர். வெளியே வந்த தளபதி முகம்மதுகான், தனது துணைவருடன் போர்க்கோலம் பூண்டு புறப்பட்டான், செஞ்சி நோக்கி.

காடு, மலை, ஆறுகள் கடுகிப் பின்செல்ல தளபதியின் குதிரையும், துணைவரின் குதிரையும் விரைந்து முன்சென்றன. கங்குல் மறைவதற்குள் செஞ்சி சேர்ந்தான் முகம்மதுகான். மணக்கோலம் மாருமலும், மணத்தை முடிக்காமலும் மாண்புறு தோற்றத்தோடு வந்த முகம்மதுகானைக் கண்டதும் மன்னன் தேசிங்குராசன் அவனைக் கட்டித் தழுவிக்கொண்டான். உள்ளத்தால் ஒன்றுபட்ட பெருவீரர் இருவரும் தங்களது பெரும் படைகளுடன் போர்க்களம் நோக்கிப் புறப்பட்டனர்.

### எதிரிகளின் ஏமாற்றம்

மணக்கோலம் கொண்டுள்ள முகம்மதுகான் போர்க்கோளம் பூண்டு புறப்படமாட்டான் என எண்ணிப் போர் தொடுக்க முன்வந்த ஆற்காட்டு நவாப் படைத்தலைவனும், பாங் வேந்தனும்

தன்னை நோக்கித் தக்க படையுடன் வருவதை அறிந்து கவலையுடன் தனது படைகளை வரிசைப் படுத்தலானான். முன்னேறிவரும் எதிரிகளைத் தடுத்து நிறுத்த வழி யாது என எண்ணமிட்டுத் தனது துணைவர்களுடன் ஆராய்ந்தான், ஆற்காட்டு நவாப்.

**அண்ணாமலையான் அற்புத யோசனை**

அதுகாலை திருவண்ணாமலையின் தலைவன், "அரசே! நீர் நிறைந்துள்ள தாழனூர், மலையனூர் ஏரிகளின் கரைகளை உடைத்திடுவோமேயானால், அந்தத் தண்ணீர் சங்கராபரணி ஆற்றின் வழி பெருக்கெடுத்தோடும்; எதிரிகள் ஆற்றைக் கடந்து நம்மை அடைவதில் காலம் தாழ்க்கும். அதற்குள் நமது படைகளை நன்கு அமைத்துக்கொள்ளலாம்" என்றான்.

எண்ணிப்பார்த்தான் நவாப் சைதுல்லாகான். ஏரிகளின் கரைகளை வெட்டிவிடக் கட்டளையிட்டான். எழுந்தது வெள்ளப்பெருக்கு, இரு கரையும் புரண்டு சென்றது சங்கராபரணி நதி. அது நள்ளிரவில் கொள்ளையடிப்போர் போல தன்முன்னர்க் கிடந்த எல்லாப் பொருள்களையும் அடித்துச் சென்றது. திடீரெனத் தோன்றிய இப்பேராபத்தைக் கண்ணுற்ற ஊர்மக்கள் கலங்கினர். வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு புலம்பினர். செய்வதறியாது தவித்தனர். உண்மையறியாத மக்கள் உளங்குன்றி, வெள்ளம் புரண்டதெப்படி எனக் கூடிநின்று யோசித்தனர்.

சூதினை அறிந்தான் மன்னன் தேசிங்கு. சிவந்தன கண்கள். துடித்தது மீசை. கொதிப்படைந்த குருதி. பற்களைக் கடித்துக்கொண்டான். இதனைக் கண்ட படைத் தலைவன் முகம்மதுகான், "வேந்தே! இரண்டே நாழிகைக்குள் இக்குடிகளுக்குத் தீங்கிழைத்தவர்களை எமனுலகுக்கு அனுப்புவேன். தாங்கள் சினந் தணிக! ஆணையிடுங்கள்" என்றான்.

பெருக்கெடுத்து வந்த வெள்ளம் இயற்கையில் நிகழாது, செயற்கையாக மாற்றான் உண்டாக்கியதால், அது விரைவில் குறைந்துவிடும் என்பதை அறிந்த மன்னன் தேசிங்கு, தனது பஞ்சகல்யாணிக் குதிரையைச் செலுத்தலுற்றான். படைத் தலைவன் முகம்மதுகானும் தனது நீலவேணியைத் தட்டிவிட்டான். சிற்றாறு ஆனதால் குதிரைகள் ஒரே பாய்ச்சலில் ஆற்றைத் தாண்டி அக்கரையை அடைந்தன, அவர்களைத் தொடர்ந்து படைகளும் மறுகரையை அடைந்தன.

மன்னன் தேசிங்கும், மாவீரன் முகம்மதுகானும் படைகளுடன் ஆற்றைக் கடந்துவிட்டனர் என்பதை அறிந்தான் ஆற்காட்டு நவாப். அஞ்சினான். தாய்நாட்டைக் காக்க வீறுகொண்டெழும் தறுகணாளர்முன் வயிறு நிரப்பத் தமது உயிரைத் தந்திட முன்வந்த படையும், படைத் தலைவனும் வேறு கதியின்றி வாளேந்திப் போர் முனை நோக்கப் புறப்படத் தயாராயினர்.

அத்தருணத்தில் மாவீரன் முகம்மதுகான், "அரசே! ஒரு வேண்டுகோள். ஆண்மையற்ற ஆற்காட்டான்மீது தாங்கள் போர் தொடுத்தல் தகாது; அது தங்கள் புகழுக்கு இழுக்காகும். எனவே, எனக்கு உத்தரவு தாருங்கள். எட்டி இருந்து இவற்றைக் காணுங்கள். இன்றே தனித்து நின்று போர்தொடுத்து மாற்ருன் தன் வலி கெட்டோட வெற்றி பெற்று, வாகை சூடு வேன். வாழ்த்துங்கள் வழி விடுங்கள்" என்ருன். அவனது ஆர்வத்தைக் கண்ணுற்ற மன்னன் தேசிங்கு மனம் ஒப்பினுன்.

## முகம்மதுகானின் வீராவேசப் போர்

பெற்ற பேற்றை எண்ணி முகம்மதுகான் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான். துணைவருடன் போர்முகம் புகுந்தான். வேங்கையின் வருகை யைக்கண்ட மான் மருளுவதைப்போல, முகம்மது கானின் வருகையைக் கண்ட சைதுல்லா சிந்தை நொந்து, கலங்கித் தனது படைத் தலைவனை ஏவி னுன். அதனை உணர்ந்த முகம்மதுகான் தனது படைகளை முக்கூருக்கி, இரு கூறுகளை இரு புறமும் ஏவி, தான் ஒருபுறம் நின்று எதிரிகளின் அணிவகுப்பினைச் சிதைக்கலானுன்.

செஞ்சிப் படைத்தலைவனின் பேராண்மை, பார் புகழும் போர்வன்மை, நுண்ணறிவு இவற்றை ஆற்காட்டு நவாபின் படையும்,படைத் தலைவர்களும் செவி வழி அறிந்தவராயினும், இதுவரை கண் வழி கண்டிலர். இன்று அவன்

ஆற்றலை நேரில் கண்டனர். முகம்மதுகான் முனை முகத்துப் புகுந்த மூன்றேமுக்கால் நாழிகைக்குள் பகைவரின் அணிவகுப்புவகையின்றிச் சிதறின. மாவீரன் முகம்மதுகானும், அவன் துணைவரும் விரைந்து வாளை வீசி எண்ணற்ற பகைவரை வெட்டி வீழ்த்தினர்.

அவ்வேளை மாவீரனின் பாய்மா கொள்ளி வட்டத்தைப்போல் துள்ளி, பகைநடுவேபாய்ந்து, பகைவரின் கத்தி வெட்டுக்குக் குனிந்து தடுத்தும், ஈட்டிக் குத்துக்கு வளைந்து தப்பியும் தனது தலைவனுக்குத் தீங்கு சிறிதுமின்றிக் காத்து வந்தது. முகம்மதுகானின் கத்தி வீச்சால் நவாப்பின் சிற்றரசர் சிலர் சிரமிழந்தனர் சிலர்; கரமிழந்தனர்; சிலர் பெரும்புண் பெற்று 'ஐயோ' வென்றலறினர்.

அவற்றைக் கண்ட ஆற்காட்டு நாவாபின் தளபதி தாவுத்கான் தனது படையை மேலும் மேலும் ஏவி முகம்மதுகானை எதிர்த்து வந்தான். ஆயினும் வந்த வீரரை வெட்டி வீழ்த்தி வீரமுழக்கம் செய்தான் முகம்மதுகான். வழுதாவூரில் வந்துதித்த வல்லான் வாளுக்குத் தப்பி எவரும் தொழுது சென்றிடவும் முடியவில்லை. அதுகண்ட தாவுத்கான் திகைப்புகொண்டு தேம்பி நின்முன், மாவீரன் முகம்மதுகானின் முன்ரல்ல, மறைவிடத்தில்.

"தளபதி தாவுத்கானும் ஆற்காட்டு நவாபும் அகப்படவில்லையே, அவ்விருவரையும் கொன்று

தீரவேண்டும் தேடிக்கொண்டுவாருங்கள்" என்று தன் துணைவருக்கு ஆணையிட்டான். தானும் அங்குமிங்கும் ஓடித் தேடினன். கோழை நாவாப் எங்கே என்றும் நேர் நின்று போர் புரியாப் படைத் தலைவன் எங்கே என்று கேட்டு எங்கும் தேடினன். களமெங்கும் தன் குதிரையை நடத்திச் சென்றன். அவர்கள் காணவில்லை.

**பகைவர்கள் பதுங்கினர்**

மாவீரன் முகம்மதுகான் வெஞ்சினங் கொண்டு வீரத்துடன் தம்மை தேடி வருவதை உணர்ந்த நவாப் சைதுல்லாகான் சாதாரண வீரனைப்போல் ஆடை யணிந்து புதரொன்றில் மறைந்து கொண்டான். தன் நிலைமையை நன்குணர்ந்த தளபதி தாவுத்கான் அச்சம் மிகக் கொண்டு அப்பிணக்காட்டிடையே பதுங்கிக் கிடந்தான். சுபாங்கன் என்ற பெருவீரனொருவன் யானையின் மீது அமர்ந்திருந்தான். மாவீரன் முகம்மதுகானின் நீலவேணிக் குதிரை தனது முன்னங்கால் இரண்டையும் யானையின் உடலில் பொருத்தி அவனை மேலே தூக்கிவிட்டது. உடனே முகம்மதுகான் அக் கரியின் துதிக் கையையும், சுபாங்கன் கரத்தையும் தனது வாளால் வெட்டி வீழ்த்தினன். கையறுப்புண்ட சுபாங்கன் கலங்கி, "ஐயோ! மாற்றன் வலி யறியாது மமதையால் மதியிழந்தேன். அதனல் கரம் துண்டானது. அறிவு இழந்து உயிரை இழக்க உள்ளமில்லை, ஊருக்கு ஓடிவிடுகிறேன். என்னை விட்டுவிடு" என்று மன்றடி வேண்டினன், தரையில் வீழ்ந்தவாறே.

முகம்மதுகான் அவனை நோக்கி, "சீ! ஆண்மையற்ற நீயும் ஒரு வீரனு? போர்க்கோலம் பூண்டு கரிமீது வந்தாய், காளைபோல. ஆனால், புன்மதியால் மானமிழந்து புறமுதுகிட்டு ஓடப் பார்க்கின்றாய் மாபெரும் துரோகி நீ! வஞ்சனை உள்ளங்கொண்ட உன்னை விடுதல் கூடாது. நீ ஏரிக்கரையை வெட்டி நீர் பெருகச் செய்து காலந் தாழ்த்தியோடதல்லாமல், எங்கள் ஊரில் புகுந்து எமது மக்களையும் கொள்ளையடித்தாய். நஞ்சனைய வஞ்சனையோடு கூடிய உள்ளத்தவனை உன்னைக் கொல்லாது விடுவது மாபாவமாகும்" என்று வாளை ஓங்கினான்.

சுபாங்கன் நடுங்கிய குரலுடன், "மாவீரனே! உமக்குப் புண்ணியம் கோடி உண்டு. குற்றம் புரிந்த கொடியவன் நானே, மன்னித்து விடுக! கரம் இழந்ததே எனக்குக் கடுந் தண்டனையாகும். உயிர் வேண்டி உனது காலடியில் வீழ்கின்றேன்" என முகம்மதுகானின் குதிரைக்குமுன் மண்டியிட்டு வீழ்ந்தான். "பேதையே! வெட்கம் இழந்த வெற்றுடம்புகொண்ட வீணனே! கவரிமானும் தனது முடியிழந்தால் வாழாது, செத்து மடியும். நீயோ மாண்பை நல்கும் மானத்தையும் விட்டுவிட்டு மண்டியிடுகிறாய், உயிருக்கு. நீ இத்தகைய கோழையென்பதை நான் முன்னரே கண்டிருந்தால் உன் வலக்கரத்தைக் கூட துண்டித்திருக்கமாட்டேன். உன் முகத்தில் விழிப்பதும் பாவம்!" என்று வெறுப்புடன் கூறிவிட்டு அவ்விடத்தினின்றும் அகன்றான். அவனைத் தொடர்ந்து

வந்து கொண்டிருந்த தேசிங்கின் வீரர்கள் சுபாங் கன் முகத்தில் காறி யுமிழ்ந்து சென்றனர்.

மாறுவேடத்தில் மறைந்து சென்ருன் நவாப் சைதுல்லாகான். பிணங்களினூடே பதுங்கிக் கிடந்தான் தளபதி தாவுத்கான். உயிர்ப் பிச்சை பெற்று ஓட்டம் பிடித்தான் சுபாங்கன். போர்க் களத்திலே எஞ்சியிருந்தவை பகைவரின் தலேக் குவியலும், இரத்தக் குட்டையும் அல்லாமல் வேறெதுவும் அங்குக் காண்பதற்கு இல்லே.

**மாவீரன் மாண்டான்**

இகல் வென்ற முகம்மதுகான் இனிப் பகை இங்கில்லேஎன எண்ணியவனுய், மன்னன் தேசிங் கைக் காண மனத்துள் அவாக்கொண்டு, தனது நீலவேணியை மன்னன் தங்கியுள்ள இடம் நோக்கிச் செலுத்திஞன்.

ஆற்காட்டு நவாபின் தளபதி தாவுத்கான் பிணத்தோடு பிணமாகப் பிணக்குவியலின் நடுவே பதுங்கியிருந்தவன், தனது ஊழ்வினேயை எண்ணி வெட்கி வேதனேயில் மூழ்கித் துன்புற்ற வண்ணமிருந்தான். அப்போது, தன்னேத் தாண்டி மாவீரன் முகம்மது செல்வதைக் கண்டான். ஓசை எதுவும் செய்யாமல் பதுங்கிய வண்ணமே பார்த்து நின்று, முகம்மதுகான் சற்றுதூரம் சென்றதும், வஞ்சகமே உருவான அந்தப் பாவி தாவுத்கான் தனது துப்பாக்கியால் முகம்மது கானேக் குறிபார்த்துச் சுட்டான். பறந்து

வந்த அக்குண்டு தன் பிடரியிலே பாய்ந்ததை உணர்ந்தான் முகம்மதுகான். பிணக்காட்டில் பின்புறமிருந்து சுடும் அப்பேடிமகன் யார் என்பதை அறியும்பொருட்டு, குதிரை மீதிருந்தபடியே பின்புறம் திரும்பிப் பார்த்தான். மற்றொரு குண்டு மாவீரனின் நெற்றியில் பொட்டிடுவது போன்று பாய்ந்தது. அந்தோ! மாவீரன் முகம்மதுகானின் முடி சாய்ந்தது. மண்ணுலகை மறந்தான். மன்னன் தேசிங்கையும் மறந்தான். நீலவேணிக் குதிரையின்மீது அவனது உயிரற்ற உடல் ஊசலாடிற்று.

### வஞ்சகம் வென்றது

பதுங்கியிருந்து பகைவரை வாட்டுதல், முன் அறிவிப்பின்றி அருஞ்சமர் செய்ய வாளெடுத்தல், உறங்குபவனை உள்ளத்தில் கருணையின்றி வெட்டி வீழ்த்தல், அறுசுவை விருந்துண்ண அழைத்து ஆருயிர்கொள்ளல், நெஞ்சில் நேர்மை கொஞ்சமும் இன்றி வஞ்சனையால் வாகை சூடுதல் போர் அறமாகாது; நல்லாண்மையும் ஆகாது. நேர்மையும் ஆண்மையும் இன்றிப் போர்க்களம் நோக்கி வந்தவர்களிடம் நெறிமுறைமை என்பதைக் கிஞ்சிற்றும் பார்க்கத்தான் முடியுமா? உண்மை வீரத்தினைத்தான் காண முடியுமா?

முகம்மதுகான் இறந்ததை உணர்ந்த ஆற்காட்டுத் தளபதி தாவுத்கான் தனது வெற்றிச் சங்கை எடுத்து ஊதினான். அவ்வொலி கேட்டதும், உயிருக்கஞ்சி ஓடிய ஆற்காட்டு வீரர்கள்

அனைவரும் அளவிலா உவகையுடன் அமர்க்களம் நோக்கித் திரும்பி வந்தார்கள். தங்களது தள பதியின் பேராற்றலைப் புகழ்ந்தார்கள், உண்மை அறியாத காரணத்தால். மன்னன் சைதுல்லா கானும் பேரானந்தம் பொங்கத் தனது தளபதி யின் வீரச் செயலைப் பாராட்டி, அவனுக்கு வெற்றிமாலை சூட்டினன்.

### மன்னன் தேசிங்கு போர்க்களம் புகுதல்

மன்னன் சைதுல்லாகானும், தளபதி தாவுத் கானும், மற்றைய வீரர்களும் மட்டிலா மகிழ்ச்சி யுள்ளவர்களாய் தங்களது வெற்றியைக் கொண் டாடிக் கொண்டிருந்த இச் சமயத்தில், 'போர் முகம் நோக்கிச் சென்ற மாவீரன் முகம்மதுகான் இன்னும் திரும்பவில்லையே, போர்க்களத்திலும் அமைதி காணப்படுகிறதே' என்று எண்ணிய தேசிங்கு மன்னன் உண்மையறிய தனது படை களுடன் போர்க்களம் சென்றடைந்தான். அங்கு பிணக்காடும், நிணச்சோறுமே அவன் கண்ணில் பட்டதேயன்றி, தனது படைத்தலைவன் முகம்மது கானைக் கண்டானல்லன். மாருக, கால் வெட் டுண்ட உடலும், கை வெட்டுண்ட மெய்யும், தலை துண்டிக்கப்பட்ட முண்டமுமாக மாற்ருன் வீரர்கள் கிடப்பதைக் கண்டான். மாவீரன் முகம்மதுகானின் திண்ணிய வீரச் செயலை எண்ணி இறுமாந்து மேலும் தனது படைத் தலைவனைத் தேடலுற்ருன். சற்றுத் தொலைவில் தளபதி முகம்மதுகானின் நீலவேணிக் குதிரை மட்டும் நிற்பதைக் கண்டான்; கலக்கமுற்ருன்.

"என் இன்னுயிர்த் தளபதிக்கு யாது நேர்ந்தது? மாவீரன் என்னவானுன்?" என தன் நிலே தவறி உளம் தடுமாறி அவ்விடத்தை நோக்கி விரைந்தோடினுன். கண்டான், மலே கலங்கினும் தன் உறுதி நிலே கலங்காத உள்ளங்கொண்ட மா வீரனின் உடலே. புறத்தொரு குண்டும், நேர்முகத்தொரு குண்டும் பாய்ந்த நிலேயில் மாவீரனின் உடல் கிடப்பதை வெறித்து நோக்கினுன்.

தேசிங்கு தனது நிழலொத்த அருமைத் தோழன் உடல் உயிர்நீங்கிய நிலேயில் கிடப்பதைக் கண்டு உள்ளம் பதைத்தான். உள்ளத்துள்ளிருந்து எழுந்த அடங்காச் சினம் அவனது அழுகையை மாற்றியது. சற்று அமைதியைக் கொண்டான். விதிப்படி தனது படைத்தலேவனது உடலே அடக்கஞ் செய்தான். அதே நேரத்தில் தனது தலேவன் பிரிவால் நிலவேணியும் ஆவி துறந்தது. இதன் உடலேயும் அம் மாவீரனின் உடல் அருகிலேயே அடக்கஞ் செய்தான்.

**சமாதானப் பேச்சு**

பழிவாங்க எழுந்தான் தேசிங்கு. படையுடன் பாய்ந்தான் பகைவர்மீது. மாற்ருன் படையெல்லாம் மண்ணில்வெட்டுண்டுவீழ வாளோச்சினுன். ஆற்காடு தளபதி தாவுத்கானின் உடலும் தரை மீது வெட்டுண்டு வீழ்ந்தது. நொடிப்பொழுதில் தனது படைத்தலேவன் உடல் மண்ணில் வீழ்ந்த செய்தி கேட்டான், சைதுல்லாகான் ; இழந்தான் தனது பாதி உயிரை, அவனிடம் எஞ்சியிருந்த

படைவீரர்களோ மிகக் கொஞ்சம். அவர்கள் துணையால் போர்முக நோக்கல் பொருந்தாது என்ற எண்ணத்தவனாய் சமரை நிறுத்திச் சமாதானம் பேசத் தனது தூதுவனை அனுப்பினான் நவாப் சைதுல்லாகான்.

வெள்ளிக்கொடி ஏந்தி உள்ளந் திறந்து பேசவந்த தூதுவனை நோக்கி, "யாது காரணம்?" என வினவினான் தேசிங்கு. தூதுவன், "நவாப் அனுப்ப வந்தேன். அவர் சமாதானத்தில் விருப்பம் கொள்கிறார்" என்றான். "சண்டை தொடங்கியது அவரல்லவா? அந்த இழப்பும் இன்னலும் அவரால் அல்லவா நேர்ந்தது?" என்றான் தேசிங்கு. "மதிபிசகால் இக்கதி வந்ததை உணர்ந்து கொண்டார். எனவே சமாதானமாக எண்ணங்கொள்கிறார்" என்றான் தூதுவன். "என் உயிருக்குயிரான முகம்மதுகானைக் கொன்று மண்ணில் வீழச் செய்தபின்பா சமாதானம்? அவனுக்கு ஈடாக எதைக் கொடுக்க முடியும்? அவனது ஆவி அமைதி பெற வழிவகைதான் என்ன?" என்றான் தேசிங்கு. தூதுவன், "எங்கள் தளபதி தாவுத்கான் மாண்டான். தங்கள் இழப்புக்கு ஈடாக இருபது பாளையபட்டைத் தர எமது மன்னர் இசைகின்றார். எனவே தாங்கள் பெரும்பகை பாராட்டாதீர்கள்" என்றான். "வலுவில் சண்டைக்கு வந்து, வாள் வலி குறைந்ததால் சமாதானத்தை நாடுகிறார் உமது மன்னர் உள்ள மொத்த அமைதியையா அவர் வேண்டுவது? வேறு வழியின்றிச் சமாதானத்தை நாடுகிறார்.

எதனையும் ஆராய்ந்து பாராதவர். சொற்புத்தி கேட்டு சொந்தபுத்தி இழந்து அடுத்த கணமே அவர் சண்டைக்கு வரக்கூடியவர். எனவே இறுதிவரை போர்செய்து, வெற்றி அல்லது வீர மரணம் ஆகிய இரண்டிலொன்று பெற்றே தீரு வேன். மாவீரன் முகம்மதுகான் மரணத்திற்குப் பழிவாங்கி ஆகவேண்டும். அவ்வாறின்றி உற்ற நண்பனை மண்ணுக்கு இரையாக்கிய பின்னும் உடல் சுமந்து வாழும் உலுத்தனல்ல நான் நண்பன் உயிர் பறிக்கக் காரணமாக இருந்த நய வஞ்சகக் கூட்டத்தை நமனுலகுக்கு அனுப்பியே தீருவேன்" என்று சினம் பொங்கக் கூறினன், மன்னன் தேசிங்கு.

### தேசிங்கு பழிவாங்குதல்

சமாதானப் பேச்சு முறிந்தது. வீறுகொண் டெழுந்து பேராண்மையோடு உணர்ச்சியால் உந்தப்பட்டு, போர்க்களத்தில் எதிர்த்தோர் அனை வரையும் காக்கையும், கழுகும், நரியும், ஓநாயும் நல்ல விருந்துகொள்ள கண்டதுண்டமாக் கினன். "நவாப் எங்கே? நவாப் எங்கே?" என பசியது கொண்ட புலியதுபோல நவாப் அமர்ந்தி ருந்த யானையை நோக்கிச் சென்றான். ஆனல், யானை மீது இருந்தவன் நவாப் அல்ல. தன்னுயிர் காக்க விருப்பங்கொண்ட நவாப் தன்னைப்போல் ஒப்பனைசெய்த வீரனைத் தனது யானைமீதமர்த்தி, தான் தப்பிவிட்டான். கொதித்த உள்ளத்துடன் கொடுவாள் கொண்டு தன்னை நாடிவந்த பாய்

புலி யொத்த தேசிங்கை நோக்கி, "மா மன்னனே! உண்மை நவாப் நானல்லன். தன் உடையால் என்னை ஒப்பனை செயது, உயிருக்கஞ்சி ஓடி ஒளிந்துகொண்டான் உண்மை நவாப். தாங்கள் என்னைக் கொன்று என்ன பயன்?" என்று கூறி நடுங்கிக் கைகுவித்து வணங்கினன், போலி நவாப். இதைக்கேட்ட தேசிங்கு ஓங்கிய தனது வாளைக் கீழே எறிந்தான். கோழை யொருவனைக் கொல்லப் போருக்கு வந்தோமே என எண்ணிப் பெரிதும் வருந்தினன்.

### தேசிங்கு மன்னன் நட்புணர்ச்சியின் எல்லை

மாற்ருன் படை முழுவதும் மடிந்தொழிந்தது. மன்னன் சைதுல்லாகான் மறைந்த இடம் தெரிய வில்லை. எங்கும் எதிரிகள் எவரும் கண்ணில் பட வில்லை. இனிய நண்பன் முகமதுகானின் பிரிவுத் துன்பம் உள்ளத் தெழுந்தது. "உத்தம நண்ப; உன்னுயிர் குடிக்கக் காரணமானவனை உயிர் வாங்க முயன்றேன். ஓடி ஒளிந்தான் கோழை. உற்றுழியுதவும் நற்றுணை நண்ப! உனைப் பிரிந்து இவ்வுலகில் உயிர் வாழ்ந்து பயன் என்ன? மணத்தின் இடையில் மன்னன் ஆணையேற்று, மாற்ருன் பிணக்குவியல் காணப் போரில் புகுந்தாய் தனது வீரத்தால் தருக்கர்கள் தலைகள் பல தரையில் உருளச் செய்தாய். அஞ்சாமல் போரிட்ட உன்னை வஞ்சனையால் கொன்ருர்கள் வலிவிழந்த கரமும், வாள் வலியற்ற தோளுமுடைய கோழைகள். இனி நான் கூர்மையற்ற

வாளானேன்; உயிரற்ற உடலானேன். அரச போகமும், அரண்மனை வாழ்வும் என் உள்ளத்திற்கு அமைதியைத் தராது. உனது பிரிவைக் கண்டதும் என் உயிர் ஒடுங்கிவிட்டது. நண்பா! உன்னுடன் கூடி வாழ, நீசென்ற இடத்திற்கு நானும் இதோ வந்தடைகிறேன்" என்று கூறி தனது வாளை வான் நோக்கி வீசி எறிந்தான். அந்தவாள் தரையை நோக்கி வருங்கால் அதற்கு நேராகத் தனது பரந்த மார்பினைக் காட்டி நின்ருன். செங்குத்தாக வீழ்ந்த அவனது கூரிய வாள், தனக்குப் பழக்கமான பணியை நன்கு நிறைவேற்றியது. மாமன்னன் தேசிங்கின் உடல் மண்ணில் சாய்ந்தது. இப் பரிதாபக்காட்சியைக் கண்ணுற்றதும் குறையறிவுள்ள பஞ்சகல்யாணிக் குதிரையும் பதைத்து வீழ்ந்து மாய்ந்தது என்ருல், நிறையறிவு பெற்ற அன்றை மக்களின் மனோநிலையை அளவிடற்கெளிதோ!

ஒரு காலத்தில் தங்களது வீரத்தால் புகழ் நாட்டி வாழ்ந்தவர்கள், புகழுருவில் இன்றும் வாழ்பவர்களாவார்கள். அவர்களின் வீர உணர்வும், பண்பும் நம் இளைஞர்களிடம் வளர்ந்தோங்க வேண்டும். அத்தகைய குன்ருப் புகழை நாம் என்றும் பெற்று நன்றே வாழ்வோமாக!

---

104939



# PADAI THALAIVARGAL

By

Pulavar, T. M. THIRUNAVUKKARASU,

Bishop Heber High School,

Teppakulam, Tiruchy.

[ Price Re 1

V. THULASINGAM & CO.,

Publishers :: ERODE.

Imperial Press, Tiruchirapalli-8.